# ஆண்டறிக்கை 2014

# ஐ.டி.பி.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை ( ஐடிபி )

2014 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

ஆண்டறிக்கை

## நிறுவனம்

### பின்னணி

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1966 ஆம் ஆண்டில் முதலாவதாக தாபிக்கப்பட்டது. பின்னர் 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபை அதன் தற்போதைய வடிவத்தில் கூட்டிணைக்கப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலயம் இலக்கம் 16, கிரெகரி வீதி, கொழும்பு 07 எனும் முகவரியில் தாபிக்கப்பட்டது. இச்சபை தற்போது இலக்கம் 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ எனும் முகவரியில் தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள கைத்தொழில்களை மேம்படுத்துதல் மற்றும அபிவிருத்தி செய்தல் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான குறிக்கோள் ஆகும்.

### சபையின் குறிக்கோள்கள்

1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் குறிக்கோள்கள் பின்வருமாறு.

- இலங்கையிலுள்ள கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் ஒத்துழைப்பு வழங்குதல்
- இந்நாட்டின் பொருளாதாரத்திலுள்ள தனியார் மற்றும் அரச துறைகளைச் சேர்ந்த அனைத்து கைத்தொழில் தொழில்முயற்சிகளினதும் ஒழுங்குமுறையிலான ஒருங்கிணைப்பிற்கும் இடைத்தொடர்புடைய வளரச்சிக்கும் ஒத்துழைப்பு வழங்குதல்
- இலங்கையிலுள்ள இயற்கை வளங்களை பாவனைக்குட்படுத்துதல், கைத்தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப செயன்முறைகள் மற்றும் முறைமைகளை மேம்படுத்துதல், உள்நாட்டு கைத்தொழில்களுக்கு பொருத்தமான தொழில்நுட்பத்தையும் உபகரணங்களையும் விருத்திசெய்தல் மற்றும் உற்பத்திக் கழிவுகளை மிகவும் சாதகமான முறையில் பயன்பாட்டிற்குட்படுத்துவதற்கான செயன்முறைகளையும் முறைமைகளையும்; தயாரித்தல் ஆகிய குறிகோள்களுடைய கைத்தொழில் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்

- உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைக்கு ஏற்றுமதி செய்வதை ஊக்குவித்தல்

- கைத்தொழில் அபிவிருத்திக்கு தேவையான அல்லது சாதகமான வகையில் சர்வதேச வர்த்தகம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு போன்ற துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல்

- மூலதனம், கடன், சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்குதல் உள்ளிட்ட இலங்கையிலுள்ள எந்தவொரு கைத்தொழில் தொழில்முயற்சிக்கும் அல்லது கைத்தொழில் நிறுவனத்திற்கும் அல்லது அதனுடன் தொடர்புடையதாக தேவையானதாகவிருக்கும் அனைத்து விதத்திலுமான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல்

1. **நிருவாகப் பிரிவு (AD)**
2. **பிராந்திய அபிவிருத்திப் பிரவு (RDD)**
3. **திட்டமிடல் பிரிவு (PD)**
4. **சந்தைப்படுத்தல் பிரிவு(MD)**
5. **கைத்தொழில் பேட்டைப் பிரவு(IED)**
6. **எந்திரவியல் பிரிவு (ED)**
7. **தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம்(CEDACS)**
8. **தொழில்நுட்ப சேவைகள் பிரிவு(TSD)**
9. **தோற்பொருட்கள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம்** (CDLPF)
10. **இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம்** (RPDSC)

பிரதேச அபிவிருத்தி பிரிவின் கீழ் 25 அலுவலகங்களைக் கொண்ட மாவட்ட அலுவலக வலையமைப்பும் கைத்தொழில் பேட்டை பிரிவின் கீழ் 19 கைத்தொழில் பேட்டைகளும் நடைமுறையில் உள்ளது. எந்திரவியல் பிரிவின் கீழ் செயற்படும் 2 சேவை நிலையங்கள் உள்ளன. தொழில்நுட்ப சேவைப் பிரிவு, தோற்பொருள் உற்பத்தி அபிவிருத்திப் பிரிவு, இறப்பர் உற்பத்தி அபிவிருத்திப் நிலையம் மற்றும் எந்திரவியல் பிரிவினால் உள்நாட்டு தொழில்முயற்சி வசதிகள் வழங்கும் பொருட்டு தொழில்நுட்ப மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சேவைகள் வழங்க முடியும்.
கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 714 ஆக இருப்பதுடன் இந்த பணியாட்டொகுதி 11 மட்டங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபை

## 2014 சனவரி முதல் டிசம்பர் வரை

**நவாஸ் ரஜாப்தீன்** - தலைவர்
**திரு. எஸ். ஆனந்தராஜா** - பணிப்பாளர் சபை உறுப்பினர்
**திரு.ஜீ.சீ. த சில்வா** - பணிப்பாளர் சபை உறுப்பினர்
**திரு. எச்.எம்.வீ. ஜயசிங்க** - பணிப்பாளர் சபை உறுப்பினர்
**கலாநிதி சமன் கெலேகம** - பணிப்பாளர் சபை உறுப்பினர்

## 2014 சனவரி முதல் மே மாதம் வரை

**திரு. எம்.எம். முகம்மது ஜமீல்** - சபை உறுப்பினர் - ஐடிபி

## 2014 சனவரி முதல் ஒக்டோபர் வரை

**திருமதி கே.என்.குமாரி சோமரத்ன** - பணிப்பாளர் சபை உறுப்பினர்
**திரு. எப்பா தயிரட்னே** - குழுவின் உறுப்பினர்

## 2014 பெப்ரவரி முதல் நவம்பர் வரை

திரு. ஆர். எம்.ஜே. ரத்நாயக்க - பணிப்பாளர் சபை உறுப்பினர் – திறைசேறி பிரதிநிதி

## 2014 டிசம்பர் முதல்

திரு. ஜே. ஆர். சி. ஜயதிலக - பணிப்பாளர் சபை உறுப்பினர்

# தொலைநோக்கு

*"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து கைத்தொழில்களையும்*

*அபிவிருத்திசெய்தல்"*

# பணிநோக்கு

*"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து கைத்தொழில்களையும்*
*ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும்*
*தேவையான மூலோபாயங்களையும் தொழிலுநுட்பத்தையும்*
*வணிக அடிப்படையையும் வழங்குதல்"*



# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

நான் 2014 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு அவ்வருடம பற்றிய மீளாய்வில் கலந்துகொள்வதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இவ்வருடத்தில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை உள்நாட்டு கைத்தொழில்களுக்கு குறிப்பாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கு பெறுமதி சேர்க்கும் முக்கியமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன். நிதி செயலாற்றுகை மீளாய்வின் போது 2014 ஆம் ஆண்டில் வருமானம வளர்ச்சியடைந்துள்ளதென்பதையும் அவ்வளர்ச்சி பிரதானமாக உலோகக் கழிவு விற்பனை அதிகரித்தமையி◌ானலும் கைத்தொழில் பேட்டைகளில் வாடகை வருமானம் அதிகரித்தமையினாலும் நிகழ்ந்ததென்பதை மகிழச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் கிடைத்த சுமார் ரூ. 220.0 மில்லியன் நிதியின் கீழ் 2014 ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணம் அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு சொந்தமான யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு முழுமையாக அழிவடைந்துள்ள 25 ஏக்கர் காணியின் கருத்திட்ட சேவைகளுக்காக ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் ஆலோசனையின் கீழ் கிடைத்த நிதியினைக் கொண்டு மின்சாரம், நீர் வசதி மற்றும் மலக்கழிவகற்றல் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் வழங்கி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆற்றல் கிட்டியது. உள்ளக வீதிகள் மற்றும் எல்லை மதில்கள் உள்ளிட்ட இந்த வசதிகள் காரணமாக அதன் சூழல் எந்தவொரு கைத்தொழிலுக்கும் பொருத்தமானதொரு நிலைமையில் இருக்கின்றது. இதற்கு மேலதிகமாக பள்ளேகலை, வவுனியா, பானளுவ, கலிகமுவ ஆகிய கைத்தொழில் பேட்டைகளுக்கு விசேட கவனம் செலுத்தி ரூ. 40 மில்லியன் செலவில் இந்த வருடத்தில் கைத்தொழில் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் மேலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான நோக்கமாகிய நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஊக்குவித்து மேம்படுத்துவதை நோக்காக கொண்டு கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டு பண்டாரநாயக்க ஞாபார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட SMIDEX 2014 கண்காட்சியில் சபைக்கு சொந்தமான கைத்தொழில் பேட்டைகளில் கைத்தொழிலாளர்கள் உள்ளிட்ட உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் உற்பத்தி மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு ஆற்றல் கிட்டியது. இந்த கண்காட்சிக்கு சமாந்தரமாக, இந்த கைத்தொழிலாளர்கள் அடைந்துகொண்ட வெற்றியினை

மதிப்பிடுவதற்காக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 220 கைத்தொழிலாளர்களை கௌரவித்து அவர்களுக்கு பரிசில்களை வழங்கும் பொருட்டு விருது வழங்கும் வைபவமும் நடாத்தப்பட்டது.

உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கான உலகளாவிய கைத்தொழில் நிலைகளை விரிவாக்கி தேவையான சர்வதேச தொடர்புகளை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு கைத்தொழில் அபிவிருத்தி சபை இந்தியாவின் புதுடில்லி நகரத்தில் நடைபெற்ற வர்த்தக் கண்காட்சி மற்றும் சந்தைகளை பார்வையிடுவதற்காக உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் குழுவொன்றிற்காக விசேட பயணமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், அலுமினியம் ஒட்டுவேலை கைததொழிலை விருத்தி செய்யும் நோக்கில் கைத்தொழில் அபிவிருத்தி சபை இந்தியாவின் பெங்களூர் நகரில் நடைபெற்ற கண்காட்சி மற்றும் அலுமினியம் நிற ஒட்டுவேலை பற்றிய மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் குழுவொன்றை அழைத்து சென்றது.

அது மாத்தரமின்றி கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் அதன் பணியாட்டொகுதியின் வருடாந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான வழிகாட்டல்கள், ஊக்குவிப்பு மற்றும் ஒத்துழைப்பினை வழங்குவதற்காக கௌரவ அமைச்சரின் செயலாளருக்கு மற்றும் பணியாட்டொகுதிக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணியாட்டொகுதியின் சார்பில் எனது உளப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், ஏனைய தேசிய மற்றும சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களுடன் இணைந்து உபாயமார்க்க நடைமுறைகளையும் புதிய கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய சபையின் தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் முகாமைத்துவதம் உள்ளிட்ட பணியாடதொகுதியினருக்கும் எனது நன்றியினை தெரிவிக்க விரும்புகின்றேன்.

**பீ.எல்.யூ. ரத்னமலல**
**பதில் பணிப்பாளர் நாயகம்.**

## பிரதான சேவைகளும் வசதிகளும்



## நிறுவன கட்டமைப்பு


தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை
உள்ளக கணக்காய்வாளர்
பணிப்பபாளர் சபை செயலாளர்
பணிப்பாளர் நாயகம்
பிரதி பணிப்பாளர் நாயகம்(நடாத்துகை)
பிரதி பணிப்பாளர் நாயகம்(அபிவிருத்தி)
பணிப்பாளர் –நிர்வாகம்
இயக்குனர் - நிதி
பணிப்பாளர்- திட்டமிடல்
பணிப்பாளர் – பிரதேச அபிவிருத்தி
பணிப்பாளர் – கைத்தொழில் பேட்டை
சந்தைப்படுத்தல் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம் (CEDACS)
பணிப்பாளர்- எந்திரவியல்
பணிப்பாளர்- தொழில்நுட்ப சேவைகள்
பணிப்பாளர்- சந்தைப்படுத்தல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **1.0 செயலாற்றுகை மீளாய்வு** | **01 - 03** |
| **2.0 பிரதான அடைவுகள்** | **04 - 07** |
| • SMIDEX 2014 – சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் கண்காட்சி | |
| • தேசிய விருது வழங்கும் வைபவம் - 2014 | |
| • 2014 ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட திறன்களை வெளிப்படுத்திய தொழில்முயற்சிகள் | |
| • தொழில்நுட்ப சமர்ப்பண அமர்வுகள் மற்றும் உற்பத்தி செய்முறை விளக்கம் | |
| • சர்வதேச பாதணி மற்றும் தோல்பொருள் கண்காட்சி - 2014 | |
| • நிலைதகு சக்தி அதிகாரசபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்மொன்றினை ஏற்படுத்திக் கொள்ளுதல் | |
| **3.0 முன்னேற்ற பொழிப்பு** | **08 - 14** |
| • கைத்தொழில் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | |
| • சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உதவிகளையும் வசதிகளையும் வழங்குதல் | |
| • கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல், பராமரித்தல் மற்றும் பேணுதல் | |
| • தொழில்நுட்பு, தொழில்நுட்பவியல் மற்றும் எந்திரவியல் உதவிகளையும் வசதிகளையும் வழங்குதல் | |
| • கைத்தொழில் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான விரிவாக்க மற்றும் ஆலோசனை சேவைகள் | |
| **4.0 செயலாற்றுகை அடைவுகள்** | |
| • *நிர்வாகப் பிரிவு (AD)* | **17 - 18** |
| • *பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD)* | **19 - 28** |
| • *திட்டமிடல் பிரிவு (PD)* | **29 - 31** |

| | |
|---|---|
| • சந்தைப்படுத்தல் பிரிவு*(MD)* | **32 - 36** |
| • கைத்தொழில் பேட்டைப் பிரிவு*(IED)* | **37 - 41** |
| • எந்திரவியல் பிரிவு *(ED)* | **42 - 43** |
| • தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம்*(CEDACS)* | **44 - 50** |
| • தொழில்நுட்ப சேவைகள் பிரிவு*(TSD)* | **51 - 55** |
| • இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் (RPDSC) | **56 - 58** |
| • தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் (CDLPF) | **59 - 65** |
| **5.0 நிதிக்கூற்றுக்கள்** | **66 - 90** |
| ▪ 2014 டிசம்பர் மாதம் 31 இல் ஐந்தொகை | |
| ▪ ஐந்தொகைக்கான குறிப்புகள் | |
| ▪ 2014 டிசம்பர் 31 இல் சொத்துக்களினதும் இயந்திரத்தொகுதிகளிதும் பெறுமானத்தேய்வு | |
| ▪ திரண்ட பற்றாக்குறை | |
| ▪ 2013 – 2014 காலத்திற்கான வருமான மற்றும் செலவினக்கூற்று | |
| ▪ 2014 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று | |
| ▪ பணியாட்தொகுதிக்கான கிரயம் | |
| ▪ ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | |
| **6.0 சபையின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை** | **91 - 139** |

# செயலாற்றுகை மீளாய்வு

**செயலாற்றுகை மீளாய்வு**

2013 ஆம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் சம்பந்தப்பட்ட பிரிவுகள் ஊடாக பின்வரும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டன.

**அட்டவணை - 1.1 - நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்**

| | நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் | அலகுகளின் எண்ணிக்கை | முதலீடு (ரூ.) | தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அ. | சுயதொழில் கூறுகளை உருவாக்குவதற்கு உதவுதல் | 1,170 | 71,653,190 | 1,499 |
| ஆ. | புதிய கைத்தொழில்கள் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி கூறுகளை ஆரம்பிப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய ஒத்துழைப்புகளை வழங்குதல் | 441 | 224,173,629 | 1,403 |
| இ. | தற்போதுள்ள கைத்தொழில்களை மேற்படுத்துவதற்கு, விரிவாக்குவற்கு மற்றும் நவீனமயப்படுத்துவதற்கு தொழில்நுட்ப மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய ஒத்துழைப்புகளை வழங்குதல் | 605 | 360,087,541 | 1,713 |
| | **மொத்தம்** | **2,216** | **655,914,360** | **4,615** |

1.2 அட்டவணையில் (அ) (ஆ) மற்றும் (இ) விடய இலக்கங்களிள் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித்துறை செயற்பாடுகளின் சராசரி செயலாற்றுகை பதின்மூன்றாம் ஆண்டின் செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. புதிதாக தொழில்முயற்சிகளை தாபிக்கும் விடயத்தில் வீழ்ச்சி காணப்படுகின்றது. புதிதாக தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதில் ஓரளவிற்கு வீழ்சசி காணப்படுகின்றதெனினும் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த முதலீட்டின் அளவு அண்ணளவாக 33% வளர்ச்சியடைந்துள்ளது.

**அட்டவணை 1.2 – 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான ஒப்பீட்டு அளவிலான நிலைமை**

| விபரம் | 2013 | 2014 | வளர்ச்சி (வீழ்ச்சி) % |
|---|---|---|---|
| மொத்த கூறுகளின் எண்ணிக்கை (அ,ஆ,இ) | 2,525 | 2,216 | (-12.2) |
| மொத்த முதலீடு (ரூபாய்) | 494,475,717 | 655,914,360 | (33.4) |
| மொத்த தொழில்வாய்ப்புகள் | 4,389 | 4,615 | (5.1) |






# பிரதான அடைவுகள்

- SMIDEX 2014 – சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழல் கண்காட்சி
- தேசிய விருது வழங்கும் விழா 2014 – 2015 ஆண்டில் இனங்காணப்பட்ட சிறந்த தொழில்முயற்சிகளுக்கான விருது வழங்கல்
- தொழில்நுட்ப சமர்ப்பண அமர்வுகள் மற்றும் உற்பத்தி செய்முறை விளக்ககம்
- சர்வதேச பாதணி மற்றும் தோற்பொருள் கண்காட்சி 2014
- நிலைபேண்தகு சக்தி அதிகாரசபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக்கொள்ளுதல்

## SMIDEX 2014 – சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் கண்காட்சி

இலங்கையிலுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட SMIDEX 2014 கண்காட்சி மற்றும் சந்தை 2014 மே மாதம் 23 – 25 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

### சனாதிபதி அவர்கள் SMIDEX 2014 கண்காட்சியினை பார்வையிடுதல்

இலங்கை சனாதிபதி மேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 2014 மே மாதம் 24 ஆம் திகதி மாலை இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை தனது 45 ஆம் ஆண்டு நிறைவை கொண்டாடுவதற்கு சமாந்தரமாக ஒழுங்குசெய்து சிறிமாவோ பண்டாரநாயக்க கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நடாத்திய SMIDEX 2014 கண்காட்சியினை பார்வையிடுவதற்காக வருகைத் தந்தார்.

மேதகு சனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 25 மாவட்டங்கிலிருந்தும் வருகைத் தந்திருந்த தொழில்முயற்சியாளர்களை சந்தித்து கலந்துரையாடினார். 300 கண்காட்சிக் கூடங்களுடன் கூடிய இக்கண்காட்சியல் கலந்துகொண்ட சில கைத்தொழிலாளர்கள் அவர்களின் புதிய உற்பத்திகளையும் சேவைகளையும் காட்சிப்படுத்துவதற்காக மேற்படி கண்காட்சிக் கூடங்களை ஒழுங்குசெய்திருந்ததுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை இலக்குவைத்து கண்காட்சியாளர்கள் பெருமளவு ஒன்றுதிரண்டிருந்ததை SMIDEX 2014 அங்குரார்ப்பண கண்காட்சியின் போது காணக்கூடயதாக இருந்தது.
பாராம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவாநந்தா, சிரேஷ்ட அமைச்சர்களாகிய ஏ.எச்.எம் பவுசி, கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்தன, பிரதி அமைச்சர் கௌரவ கீதாஞ்சன குணவர்தன, பாரம்பரிய கைத்தொழல் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, பாரம்பரிய கைத்தொழல் மற்றும் சிறு தொழில்முயற்சி அமைச்சின் செயலாளர் திரு. வீ. சிவஞானசோதி, மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் தலைவர் திரு. நவாஸ் ராஜாப்தின் ஆகியோர் சனாதிபதியுடன் மேற்படி கண்காட்சியினை பார்வையிடுவதற்காக வருகைத்தந்திருந்தனர்.
தங்களது புதிய உற்பத்திகளையும் சேவைகளையும் காட்சிப்படுத்திய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளரக்ள் சனாதிபதியின் வருகையினால் பெரும் பலத்தையும் ஊக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். மேலும், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் பிரதானமாக தோற்பொருட்கள், பாதணிகள், கைப்பணிகள், மரத்திலான உற்பத்திகள், இராசயனப் பொருட்கள் மற்றும் களிமண் சார்ந்த உற்பத்திகள் போன்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் பல்வேறு துணைப் பிரிவுகளை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் வெளிநாட்டு நிபுணர்களின் பங்கேற்புடன் பல தொழில்நுட்ப அமர்வுகளும் நடாத்தப்பட்டன.
மேலும், உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் உற்பத்தி செய்யப்படுகின்ற இயந்திரோபகரணங்கள் மற்றும் பொறிகள் இந்த கண்காட்சியின் போது காட்சிப்படுத்தப்பட்டது.

**தேசிய விருது வழங்கும் விழா 2014 – 2015 ஆண்டுகளில் இனங்காணப்பட்ட சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கல்**

கைத்தொழில் அபிவிருத்தி சபை நாடளாவிலய ரீதியல் அமைந்துள்ள உள்நாட்டு கைத்தொழில்களுக்காக உள்ள அங்கீகாரம் மற்றும் அக்கைத்தொழிலில்களினால் தேசிய பொருளதாரத்திற்கு கிடைக்கும் பங்களிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அவற்றின் தொழில்முயற்சி செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டதுடன் அதற்கேற்ப 583 தொழில்முயற்சியாளர்களுக்கு மாவட்ட மட்டத்திலான சிறந்த செயாற்றுகைக்காகவும் 90 தொழில்முயற்சியாளர்களுக்கு மாகாண மட்டத்திலான சிறந்த செயலாற்றுகைக்காகவும் 45 பேருக்கு தேசிய மட்டத்திலான செயலாற்றுகைக்காகவும் விருது வழங்கப்பட்டது.

தொழில்நுட்ப சமர்ப்பண அமர்வுகள் மற்றும் உற்பத்தி செய்முறை விளக்கம்

SMIDEX 2014 கண்காட்சிக்கு சமாந்தரமாக இந்தி விசேட நிபுணர்களினதும் பிரதிநிதிகளினதும் ஒத்துழைப்புடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் எதிர்காலத்தில் கைத்தொழிலாளர்களாக மாறுவதற்கு ஆற்றலுடையவர்களுக்கும் பொது மக்களுக்கும் பின்வரும் பிரதான துறைகள் பற்றி வழிப்புணர்வூட்டுவதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- மூங்கில் கைத்தொழிலிலுள்ள தொழில்நுட்ப – பொருளாதார வாய்ப்பு வளம்
- செங்கல் மற்றும் ஓடு உற்பத்தி கைத்தொழிலுள்ள தொழில்நுட்ப பொருளதார வாய்ப்பு வளம்

சர்வதேச பாதணி மற்றும் தோற்பொருட்கள் கண்காட்சி 2014

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தோற்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் இணை ஒழுங்கமைப்பாளராக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து 2014 பெப்வரி மாதம் 7 – 9 ஆகிய தினங்களில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மூன்றாவது முறையாகவும் சர்வதேச பாதணி மற்றும் தோற்பொருள் கண்காட்சி – 2014 நடாத்தியது.

இக்கண்காட்சியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்முயற்சியாளர்களின் பங்கேற்புடன் 220 இற்கும் மேற்பட்ட விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்தி சபை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 33 கைத்தொழில் கூடங்களை உள்ளடக்கி சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் சபையின் பணிகளை நோக்கிய விசேட கவனத்திற்காக முன்வைத்தது. இக்கண்காட்சியின் விசேட அம்சங்களாக பாதணி மற்றும் தோற்பொருட்களை திட்டமிடுதல் மற்றும் கைகளிலான பாதணி உற்பத்தி பற்றி செய்முறை விளக்கமளிக்கும் போட்டியொன்றும் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக 1900 ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இந்நாட்டில் தோற்பொருள் மற்றும் பாதணித் துறையை முன்னேற்றுவதற்காக முக்கியமான பங்களிப்பினை வழங்கியவர்களை பாராட்டி விருது வழங்கும் நிகழ்வொன்றும் நடாத்தப்பட்டது.

**நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்ததகை கைச்சாத்திடல்**

சிறிய மற்றும் நடுத்தர அளிவிலான கைத்தொழில்களுக்கான ஒன்றிணைந்த நிலைபெறுதகு நிகழ்ச்சித்திட்டங்களில் காட்டப்பட்டுள்ள நீண்டகால ஒத்துழைப்பினை கட்டியெழுப்பும் பொருட்டும் தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஏறபடுத்திக் கொள்ளும் பொருட்டும் இரண்டு நிறுவனங்களிலும் உள்ள ஆராய்ச்சி வசதிகளை பயன்படுத்துவதற்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபை 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆம் திகதி நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக் கொண்டது.

## முன்னேற்ற சுருக்கம்

- கைத்தொழில் மற்றும் நுண் சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் விருத்தி செய்தல்,
- கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல், பேணி வருதல் மற்றும் பராமரித்தல்
- சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைக்கான ஒத்துழைப்பினை வழங்குதலும் வசதிகளை வழங்குதலும்
- கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் ஒத்துழைப்புகளை வழங்குதலும், வசதிகளை ஏற்படுத்துதலும்
- கைத்தொழில் மற்றும் நுண் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை விருத்தி செய்வதற்கு விரிவாக்க மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்

## அட்டவணை 3.1 முன்னேற்றம் பற்றிய பொழிப்பு - 2014

| பிரதான தொனிப் பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| | எதிர்கால தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தற்போதுள்ள கைத்தொழிலுக்கான தொழில் நுட்பங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்ப மாதிரி நிகழ்சிகளை நடாத்துதல் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 50 | 27 |
| | | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | 2000 | 2604 |
| | புதிய மற்றும் தற்போதுள்ள தொழில்முயற்சியாளர்கள்/கைத்தொழில்களுக்கான தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 219 | 430 |
| | | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | 4240 | 11080 |
| | தொழில்நுட்ப உதவி மதியுரை மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல் | நடாத்தப்பட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 49 | 65 |
| | | பயனாளிகளின் எண்ணிக்கை | 1295 | 2648 |
| | வசதியளித்தல் மற்றும் பின்னாய்வு செயற்பாடுகள் ஆக்கப்பட்ட புதிய சிறிய நடுத்தர கைத்தொழில்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் மதியுரை சேவைகளின் எண்ணிக்கை | 624 | 181 |
| | | மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | 624 | 181 |
| | | ஊக்குவிக்கப்பட்ட புதிய கைத்தொழில்களின் எண்ணிக்கை | 716 | 441 |
| | | உருவாக்கப்பட்ட சுயதொழில் அலகுகளின் எண்ணிக்கை | 1060 | 1170 |
| | | மேம்படுத்தப்பட்ட தற்போதுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை | 786 | 605 |
| | | மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | - | 4615 |

| பிரதான தொனிப் பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| | கைத்தொழில் உற்பத்திகளுக்கான பிராந்திய கண்காட்சி மற்றும் விற்பனை நிலையங்களை அமைத்தல் | விற்பனை வசதிகளைப் பெற்றுக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர் அளவிலான கைத்தொழில்களின் எண்ணிக்கை | 500 | 64 |
| | | சி.ந.கைத்தொழல்களினால் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளின் பெறுமதி (ரூ.மி) | 25 | 11 |
| | விற்பனை ஊக்குவிப்பு வர்த்தக சந்தை/கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் சந்திப்புகளை ஏற்பாடு செய்தல் | ஏற்றுமதி சந்தையுடன் தொடர்புடைய சி.ம.ந தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை | 02 | - |
| | | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்கும் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை | 04 | 02 |
| | துணை ஒப்பந்த பரிமாற்று முறையின் கீழ் கைத்தொழில்களை பதிவுசெய்தல் | சி.ந கைத்தொழிலாளர்களுக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள துணை ஒப்பந்தங்களை வழங்கல்கள் மற்றும் மீள் கொள்வனவு வாய்ப்புகளின் எண்ணிக்கை | 84 | 107 |
| | துணை ஒப்பந்த வசதிகளை வழங்குதல் | துணை ஒப்பந்த பரிமாற்றத்தின் மூலம் வழங்கப்பட்ட பொருள் அனுப்பல் கட்டளைகளின் மொத்த பெறுமதி (ரூ,மி) | 06 | 2.32 |
| | கொள்வனவாளர்களுக்கு தேவையான மூலப்பொருட்களை பெருமளவில் கொள்வனவு செய்து சில்லறையாக விற்பனை செய்தல் | மூலப்பொருள் (கழிவு உலோகம்) பெற்றுக்கொண்ட தொழில் .முயற்சிகளின் எண்ணிக்கை | 550 | 576 |
| | | சேகரிக்கப்பட்ட கழிவுகளின் அளவு (மெ.தொன்) | 1,500 | 816 |
| | | விநியோகிக்கப்பட்ட கழிவுகளின் அளவு (மெ.தொ) | 1,500 | 812 |
| | மையநீக்கம் செய்யப்பட்ட இறப்பர் பால் மற்றும் கலவையாக்கப்பட்ட இறப்பர் விற்பனை | பதப்படுத்தப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மையநீக்கம் செய்யப்பட்ட இறப்பர் பால் (லீற்றர்) | 12,500 | 9,008 |
| | | சேவை வழங்கப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 80 | 82 |
| | இறப்பர் கலவை, மூலப்பொருட்கள் மற்றும் இராசயனப் பொருட்கள் விற்பனை | வழங்கப்பட்ட அளவு (கி.கி) | 55,000 | 35,498 |
| | | சேவை வழங்கப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 290 | 310 |
| | இறப்பர் கலவை அறைத்தல் மற்றும் வழங்கல் | வழங்கபட்டப்ப அளவு (கி.கி) | 35,000 | 17,231 |
| | | சேவை வழங்கப்பட்டுள்ள தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை | 55 | 58 |

| பிரதான தொனிப் பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| கைத்தொழில் பேட்டைகளை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் பேணி வருதல் | அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின் வீதம் | - | - |
| | புதிய தொழில்முயற்சிகளுக்காக விருத்திசெய்யப்பட்ட காணித்துண்டுகளை ஒதுக்குதல் மற்றும் மீள் விநியோகித்தல் | ஒதுக்கப்பட்ட வெற்றுக்காணிகள்/ தொழிற்சாலை அலகுகள்/ விருத்திசெய்யப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை | 30 | 49 |
| | | ஒதுக்கப்பட்ட தொழிற்சாலை அலகுகள்/ விருத்திசெய்யப்பட்ட காணித்துண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வர்த்தக தொழிற்பாடுகளின் எண்ணிக்கை | 20 | 08 |
| | | தோற்றுவிக்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புகள் | 300 | 184 |
| | பின்னாய்வு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் | தாபிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர்க்கும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | - | - |
| | கைத்தொழில் பேட்டைகளில் (வீதிகளை அமைத்தல், வீதிகளுக்கு வெளிச்சமூட்டல், பாதுகாப்பினை மேம்படுத்துதல், கழிவகற்றல், நிர் வழங்கல் போன்ற )உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் | மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின் வீதம் | - | - |

| பிரதான தொனிப் பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| கைத்தொழில், தொழில்நுட்ப எந்திரவியல் உதவிகளை வழங்குதலும் வசதியளித்தலும் | உற்பத்திகளின் தரத்தை மேம்படுதததுதல் மற்றும் பதிவுடன் GMP, SLS தரச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கு உதவுதல் | GMP, SLS, ISO மற்றும் ஏனைய சான்றளிப்புகளுக்கு/தரப்படுத்தல் களுக்கு உயர்த்தப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | 10 | 08 |
| | விருத்தியாக்கப்பட்ட/கட்டமைக்கப்பட்ட இயந்திரோபகரணங்கள் | புதிததாக விருத்தயாக்கப்பட்ட இயந்திரோபகரணங்களின் எண்ணிக்கை | 60 | 51 |
| | | இயந்திரோபகரணங்களினால் நன்மைப் பெற்ற தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 60 | 51 |
| | எத்திரவியல் சேவைகள், மதிப்பீடு, வார்ப்பு வேலை,தொழில் தள சேவைகள், மின்மூலாம்பூசல் சேவைகள் மற்றும் ஆய்வுக்கூட சேவைகள் போன்ற சேவைகளை வழங்குதல் | வழங்கப்பட்ட எந்திரவியல் சேவைகளின் எண்ணிக்கை | 1,149 | 767 |

| பிரதான தொனிப்பொருள் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| கைத்தொழில் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான விரிவுபடுத்தல் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல் | கருத்திட்டங்களை இனங்காணுதல், மாதிரி கருத்திட்ட அறிக்கைகள் மற்றும் சாத்திய வள ஆய்வுகள் தயாரித்தல் | சாத்தியவள ஆய்வு அறிக்கை/கருத்திட்ட அறிக்கை பெற்றுக்கொண்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 106 | 87 |
| | இயந்திரோபகரணங்களை மதிப்பீடு செய்தல் | தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் எண்ணிக்கை | 97 | 47 |
| | உற்பத்தி விருத்தி மற்றும் சோதனை சேவைகளை வழங்குதல் | வழங்கப்பட்ட உற்பத்தி விருததி மற்றும் ஆய்வுக்கூட பரிசோதனை சேவைகளின் எண்ணிக்கை | 65 | 815 |
| | பிராந்திய/மாவட்ட கைத்தொழில் சங்கங்களை அமைத்தல் | மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் தாபிக்கப்பட்ட/வலுவூட்டப்பட்ட கைத்தொழில் சங்கங்களின் எண்ணிக்கை | 318 | 304 |

படம் **3.1** கைத்தொழில்அபிவிருத்தி சபையினால் வசதியளிக்கப்பட்ட சேவைகள்









## *செயலாற்றுகை சிறப்புக்கூறுகள்*

- நிருவாகப் பிரிவு *(AD)*
- பிராந்திய அபிவிருத்திப் பிரிவு *(RDD)*
- திட்டமிடல் பிரிவு *(PD)*
- சந்தைப்படுத்தல் பிரிவு*(MD)*
- கைத்தொழில் பேட்டைப் பிரிவு *(IED)*
- எந்திரவியல் பிரிவு *(ED)*
- தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம்*(CEDACS)*
- தொழில்நுட்ப சேவைகள் பிரிவு*(TSD)*

## 4.1 நிர்வாகப் பிரிவு (AD)

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அனைத்து மனித வள முகாமைத்துவ மற்றும் மனித வள அபிவிருத்தி செயற்பாடுகள், கொள்முதல் செயற்பாடுகள், பாதுகாப்பு, போக்குரவத்து பணிகளை எற்பாடு செய்தல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை சபையின் நிருவாகப் பிரிவின் பொறுப்பாகும்.

**பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள பணிகள்**

- 30 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கேற்ப தாபன மற்றும் மறுசீரமைப்பு நிகழச்சித்திட்டஙக்ள்
- சம்பள முரண்பாடுகளை களைதல்
- 30 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கேற்ப ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளை தயாரித்தல்
- கிரமமான ஆட்சேர்ப்பு , செயலாற்றுகை மதிப்பீடு, பதவியுயர்வு, ஓய்வுபெறுதல் போன்றவற்றிற்கு ஏதுவான பணிகளை முன்னெடுத்தல்
- ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்
- வெளிநாட்டு புலமைப் பரிசில்/பயிற்சிகள் ஒருங்கிணைப்பு செய்தல்
- உள்நாட்டு பயிற்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் நடாத்துதல்
- ஊழியர் நலனோம்புகை மற்றும் ஊழியர் இழப்பீடு முமைமைத்துவம் செய்தல்
- உள்ளக பாதுகாப்பு சேவைகளை முகாமைத்துவம் செய்தல்
- சபையின் பெறுகைகள் பணிகளை முகாமைத்துவம் செய்தல்
- சபையின் போக்குவரத்து சேவைகளை முகாமைத்துவம் செய்தல்

அட்டவணை இல 4.1.1 – 2014 டிசம்பர் 31 ஆம் திகதியில் பணியாளர்களின் எண்ணிக்கை

| வகை | பணியாளர்களின் எண்ணிக்கை | | மொத்தமும் வீதமும் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| HM பிரிவு | 06 | - | 06 (1.2%) |
| MM மற்றும் JM பிரிவு | **74** | **40** | 114 (22.8%) |
| MA பிரிவு | 105 | 86 | 191 (38.20%) |
| PL பிரிவு | 183 | 06 | 189 (37.8%) |
| **மொத்தம்** | **368(73.6 %)** | **132 (26.4%)** | **500 (100.0%)** |




படம் 4.1.1 – கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊழியர்களின் எண்ணிக்கை

**அட்டவணை 4.1.2 - 2013 நிதி ஆண்டில் பிரிவின் பிரதான செயலாற்றுகைகள்**

| கூட்டு நோக்கம் | | கூட்டு நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| **G 13**<br>கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தாபன, நிர்வாக, நிதி செயலாற்றுகையை மேம்படுத்துதல் | **11.** | **பின்வரும் கிரமமான மனித வள முகாமைத்துவ செயற்பாடுகளை நிறைவேற்றுதல்** | |
| | **1** | **மனித வள முகாமைத்துவம் – ஆட்சேர்ப்பு** | |
| | (i) | *ஆடசேர்ப்பு (பணியாளர்கள்)* | 76 |
| | (ii) | *இராஜினாமா* | 08 |
| | (iii) | *ஓய்வுபெறுதல்* | 33 |
| | (iv) | *பதவியை கைவிட்டுச் செல்லுதல்* | 02 |
| | **2** | **ஒழுக்காற்று முகாமைத்துவம்** | |
| | (i) | *ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்* | 05 |
| | (ii) | *தொழில் ஆணையாளர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தொழில் பிணக்குகள்* | 13 |
| | **3** | **மனித வள அபிவிருத்தி - பயிற்சி** | |
| | (i) | *உள்நாட்டுப் பயிற்சி* | 124 |
| | (ii) | *வெளிநாட்டுப் பயிற்சி* | 08 |
| | **4** | **மனித வள முகாமைத்துவம் - இழப்பீடு** | |
| | (i) | *33 பேருக்கு பணிக்கொடை செலுத்துதல்* | ரூ. 9,163,147.00 |
| | **5** | **மனித வள முகாமைத்துவம் – ஊழியர் நலன்புரி** | |
| | (i) | *துவிச்சக்கர வண்டிக் கடன்* | 36 |
| | (ii) | *இடர் கடன்* | 86 |
| | (iii) | *மருத்துவ சிகிச்சை திட்டம் (மருத்துவ கட்டணங்களை மீளளித்தல்)* | |
| | **6** | **பாதுகாப்பு முகாமைத்துவம்** | |
| | (i) | *பாதுகாப்பு கிரயம்* | ரூ..25,200,000.00 |
| | **7** | **அகற்றுதல்** | |
| | (i) | *நடாத்தப்பட்ட பண்ட மதிப்பாய்வுகள்* | 01 |

| கூட்டு நோக்கம் | | கூட்டு நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| **G 13** | **8** | **பொது வைபவங்கள்** | |
| கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தாபன, நிர்வாக, நிதி செயலாற்றுகையை மேம்படுத்துதல் | (i) | *வைபவங்களின் எண்ணிக்கை* | 03 |
| | **9** | **தயால் தொலைத்தொடர்பு கட்டணங்கள்** | |
| | (i) | *தபாற் கட்டணங்கள்* | ரூ. .503,129.00 |
| | (ii) | *தொலைத்தொடர்பு கட்டணங்கள்* | ரூ..4,403,638.00 |
| | **10** | **போக்குவரத்து முகாமைத்துவம்** | |
| | (i) | *எரிபொருள் செலவினம்* | ரூ. 4,420,257.00 |
| | (ii) | *வாகன பராமரிப்பு செலவினம்* | ரூ. . 3,650,854.00 |
| **G 13.12** | **11** | **பெறுகை முகாமைத்துவம்** | |
| இணையத்தளத்தில் பணியாட்டொகுதியின் கீழ் விளம்பரப்படுத்தி அரச தொழில்முயற்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள் ள பெறுகை வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துதல் | (i) | *சமர்பிக்கப்பட்ட பொருள் அனுப்பல் கட்டளைகளின் எண்ணிக்கை* | 403 |
| | (ii) | *மூலதனப் பெறுகைகள்* | ரூ. 7,794,046.09 |
| | (iii) | *மீண்டெழும் பெறுகைகள்* | ரூ 41,235,148.05 |

## 4.2 பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

### 4.2.1 **பொது**

நாடாளாவிய ரீதியில் அமைந்துள்ள 25 மாவாட்ட அலுவலகலங்ளைக் கொண்ட பிரதேச அபிவிருத்தி பிரிவுக்கு பிரதேச மட்டத்தில் அதன் பிரதான பணிகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பெருமளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில் மூலதன செலவினத்தில் பிரதேச அபிவிருத்திப் பிரிவுக்காக ரூ. 15 மில்லியன் பணத்தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அத்துறையில் 2014 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டத்திற்கேற்ப 21 பிரதிப் பணிப்பாளர்கள், 06 உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் 62 தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்கள் உள்ளிட்டவாறு அதன் பிரதேச பணியாட்டொகுதியினால் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு.


கைத்தொழில்களை தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் - 2014
அலகுகளின் எண்ணிக்கை
மேற்கு
தெற்கு
மத்திய
வடமத்திய
ஊவா
சப்ரகமுவ
வடமேல்
கிழக்கு
வடக்கு
மாகாணம்
புதிய
தற்போது
சுய


கைத்தொழில் தாபித்தல் மற்றும் அபிவிருத்தி - 2014
அலகுகளின் எண்ணிக்கை
கண்டி
மாத்தளை
நுவரெலியா
அம்பாறை
திருகோணலை
மட்டக்களப்பு
அனுராதபுரம்
பொலநறுவ
யாழ்ப்பாணம்
வவுனியா
கிளிநொச்
மன்னார்
முல்லைத்தீவு
குருநாகல
புத்தளம்
இரத்தினபுரி
மொனராகல
காலி
அம்பாந்தோட்டை
மாத்தறை
கேகாலை
பதுளை
கொழும்பு
கம்பஹா
களுத்துறை
மாவட்டம்
புதிய
தற்போது

Table 4.2.1.3 **கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை**

**2014ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட புதிய துறைகளுக்கான உதவிகள்**

| மாகாணம் | மாவட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த முதலீடு (ரூ) | தொழில் வாய்ப்புகள் |
|---|---|---|---|---|
| மத்திய | கண்டி | 41 | 10,827,000 | 141 |
| | மாத்தளை | 20 | 7,442,000 | 50 |
| | நுவரெலியா | 6 | 6,580,000 | 42 |
| **மொத்தம்** | | **67** | **24,849,000** | **233** |
| கிழக்கு | அம்பாறை | 5 | 1,063,000 | 10 |
| | திருகோணமலை | 13 | 1,621,500 | 37 |
| | மட்டக்களப்பு | 37 | 2,062,500 | 92 |
| **மொத்தம்** | | **55** | **4,747,000** | **139** |
| வட மத்தி | அநுராதபுரம் | 10 | 6,998,000 | 36 |
| | பொலநறுவை | 8 | 2,180,000 | 28 |
| **மொத்தம்** | | **18** | **9,178,000** | **64** |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 22 | 5,260,000 | 65 |
| | வவுனியா | 15 | 1,053,500 | 27 |
| | கிளிநொச்சி | 8 | 280,500 | 13 |
| | மன்னார் | 9 | 1,418,000 | 18 |
| | முல்லைத்தீவு | 6 | 403,000 | 16 |
| **மொத்தம்** | | **60** | **8,415,000** | **139** |
| வடமேல் | குருநாகல் | 40 | 9,289,000 | 111 |
| | புத்தளம் | 8 | 12,180,054 | 40 |
| **மொத்தம்** | | **48** | **21,469,054** | **151** |

| | | | | |
|---|---|---|---|---|
| சப்ரகமுவ | இரத்தினபுரி | 13 | 18,625,000 | 67 |
| | கேகாலை | 29 | 8,559,000 | 75 |
| **மொத்தம்** | | **42** | **27,184,000** | **142** |
| தென் | காலி | 30 | 9,251,000 | 70 |
| | மாத்தறை | 24 | 15,632,500 | 82 |
| | அம்பாந்தோட்டை | 17 | 11,415,000 | 91 |
| **மொத்தம்** | | **71** | **36,298,500** | **243** |
| ஊவா | பதுளை | 25 | 19,795,000 | 61 |
| | மொணராகலை | 12 | 5,812,495 | 30 |
| **மொத்தம்** | | **37** | **25,607,495** | **91** |
| மேற்கு | கொழும்பு | 11 | 8,863,000 | 52 |
| | கம்பஹா | 23 | 30,193,000 | 110 |
| | களுத்துறை | 9 | 27,369,580 | 39 |
| **மொத்தம்** | | **43** | **66,425,580** | **201** |
| **முழு மொத்தம்** | | **441** | **224,173,629** | **1,403** |

அட்டவணை 4.2.1.4 – இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் தற்போதுள்ள கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒத்துழைப்பு வழங்குதல் 2014 ஆம் ஆண்டு

| மாகாணம் | மாவட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | முதலீடு (ரூ) | | | தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தற்போதுள்ள | மேலதிக | மொத்தம் | தற்போதுள்ள | மேலதிக | மொத்தம் |
| மத்திய | நுவரெலியா | 8 | 20,757,000 | 10,125,000 | 30,882,000 | 89 | 109 | 198 |
| | கண்டி | 59 | 51,970,000 | 20,444,000 | 72,414,000 | 369 | 158 | 527 |
| | மாத்தளை | 24 | 13,955,000 | 3,975,000 | 17,930,000 | 75 | 43 | 118 |
| **மொத்தம்** | | **91** | **86,682,000** | **34,544,000** | **121,226,000** | **533** | **310** | **843** |
| கிழக்கு | அம்பாறை | 5 | 1,710,000 | 3,378,000 | 5,088,000 | 19 | 15 | 34 |
| | மட்டக்களப்பு | 22 | 5,775,000 | 2,180,000 | 7,955,000 | 126 | 71 | 197 |
| | திருகோணமலை | 22 | 4,502,500 | 1,785,000 | 6,287,500 | 49 | 79 | 128 |
| **மொத்தம்** | | **49** | **11,987,500** | **7,343,000** | **19,330,500** | **194** | **165** | **359** |
| வடமத்திய | அநுராதபுரம் | 8 | 3,432,000 | 1,002,000 | 4,434,000 | 15 | 9 | 24 |
| | பொலநறுவை | 11 | 40,040,000 | 13,110,000 | 53,150,000 | 80 | 38 | 118 |
| **மொத்தம்** | | **19** | **43,472,000** | **14,112,000** | **57,584,000** | **95** | **47** | **142** |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 28 | 7,520,000 | 4,848,000 | 12,368,000 | 69 | 41 | 110 |
| | வவுனியா | 8 | 1,206,000 | 472,500 | 1,678,500 | 26 | 6 | 32 |
| | கிளிநொச்சி | 13 | 626,000 | 364,650 | 990,650 | 27 | 25 | 52 |
| | மன்னார் | 5 | 750,000 | 740,000 | 1,490,000 | 10 | 4 | 14 |
| | முல்லைத்தீவு | 6 | 1,488,000 | 330,000 | 1,818,000 | 17 | 6 | 23 |
| **மொத்தம்** | | **60** | **11,590,000** | **6,755,150** | **18,345,150** | **149** | **82** | **231** |
| வடமேல் | குருநாகல் | 54 | 58,383,000 | 10,689,365 | 69,072,365 | 218 | 130 | 348 |
| | புத்தளம் | 16 | 22,193,200 | 14,258,326 | 36,451,526 | 72 | 55 | 127 |
| **மொத்தம்** | | **70** | **80,576,200** | **24,947,691** | **105,523,891** | **290** | **185** | **475** |

| மாகாணம் | மாவட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | முதலீடு (ரூ) | | | தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தற்போதுள்ள | மேலதிக | மொத்தம் | தற்போதுள்ள | மேலதிக | மொத்தம் |
| சப்ரகமுவ | இரத்தினபுரி | 19 | 16,148,000 | 11,830,000 | 27,978,000 | 73 | 38 | 111 |
| | கேகாலை | 40 | 28,635,000 | 17,944,000 | 46,579,000 | 143 | 119 | 262 |
| **மொத்தம்** | | **59** | **44,783,000** | **29,774,000** | **74,557,000** | **216** | **157** | **373** |
| **தென்** | காலி | 43 | 57,787,500 | 43,873,000 | 101,660,500 | 259 | 185 | 444 |
| | மாத்தறை | 39 | 32,793,000 | 25,037,000 | 57,830,000 | 174 | 63 | 237 |
| | அம்பாந்தோட்டை | 27 | 18,819,000 | 4,822,000 | 23,641,000 | 96 | 26 | 122 |
| **மொத்தம்** | | **109** | **109,399,500** | **73,732,000** | **183,131,500** | **529** | **274** | **803** |
| **ஊவா** | பதுளை | 32 | 67,082,000 | 51,283,200 | 118,365,200 | 138 | 13 | 151 |
| | மொணராகலை | 9 | 4,769,000 | 2,840,000 | 7,609,000 | 41 | 45 | 86 |
| **மொத்தம்** | | **41** | **71,851,000** | **54,123,200** | **125,974,200** | **179** | **58** | **237** |
| **மேற்கு** | கொழும்பு | 37 | 68,378,000 | 9,108,000 | 77,486,000 | 374 | 56 | 430 |
| | களுத்துறை | 27 | 85,015,000 | 24,497,000 | 109,512,000 | 189 | 38 | 227 |
| | கம்பஹா | 43 | 137,303,700 | 81,151,500 | 218,455,200 | 614 | 341 | 955 |
| **மொத்தம்** | | **107** | **290,696,700** | **114,756,500** | **405,453,200** | **1,177** | **435** | **1,612** |
| **முழுமொத்தம்** | | **605** | **751,037,900** | **360,087,541** | **1,111,125,441** | **3,362** | **1,713** | **5,075** |

**அட்டவணை 4.2.1.5 – சுயதொழில் அலகுகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் உதவி வழங்கப்படுதல் - 2014**

| மாகாணம் | மாவட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | முதலீடு (ரூ.) | தொழில் வாய்ப்புகள் |
|---|---|---|---|---|
| மத்திய | நுவரெலியா | 25 | 1,828,000 | 32 |
| | கண்டி | 85 | 3,860,000 | 123 |
| | மாத்தளை | 48 | 2,466,500 | 59 |
| **மொத்தம்** | | **158** | **8,154,500** | **214** |
| கிழக்கு | அம்பாறை | 38 | 1,281,500 | 38 |
| | மட்டக்களப்பு | 36 | 1,239,500 | 60 |
| | திருகோணமலை | 34 | 3,324,000 | 50 |
| **மொத்தம்** | | **108** | **5,845,000** | **148** |
| வட மத்திய | அநுராதபுரம் | 17 | 1,338,000 | 25 |
| | பொலநறுவை | 43 | 2,263,500 | 49 |
| **மொத்தம்** | | **60** | **3,601,500** | **74** |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 46 | 7,634,000 | 70 |
| | வவுனியா | 29 | 888,500 | 45 |
| | கிளிநொச்சி | 25 | 1,289,000 | 29 |
| | மன்னார் | 29 | 290,650 | 29 |
| | முல்லைத்தீவு | 15 | 894,000 | 20 |
| **மொத்தம்** | | **144** | **10,996,150** | **193** |
| வட மேல் | குருநாகல் | 100 | 5,483,500 | 137 |
| | புத்தளம் | 43 | 2,776,000 | 51 |
| **மொத்தம்** | | **143** | **8,259,500** | **188** |
| சப்ரகமுவ | இரத்தினபுரி | 35 | 2,686,000 | 38 |
| | கேகாலை | 64 | 5,267,000 | 81 |
| **மொத்தம்** | | **99** | **7,953,000** | **119** |
| தென் | காலி | 78 | 4,240,000 | 101 |
| | மாத்தறை | 104 | 3,895,200 | 141 |
| | அம்பாந்தோட்டை | 66 | 3,666,500 | 89 |
| **மொத்தம்** | | **248** | **11,801,700** | **331** |
| ஊவா | பதுளை | 52 | 5,927,000 | 52 |
| | மொனராகலை | 8 | 541,000 | 8 |
| **மொத்தம்** | | **60** | **6,468,000** | **60** |
| மேற்கு | கொழும்பு | 55 | 3,349,000 | 63 |
| | கம்பஹா | 50 | 2,764,750 | 53 |
| | களுத்துறை | 45 | 2,460,090 | 56 |
| **மொத்தம்** | | **150** | **8,573,840** | **172** |
| **முழு மொத்தம்** | | **1,170** | **71,653,190** | **1,499** |

### 4.2.2 கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

#### (அ ) களிமண் கைத்தொழில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கணிமன் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை விட முன்னேற்றகரமான உபகரணங்களையும் நவீன தொழில்நுட்பங்களையும் வழங்குவதன் மூலம் உயர்தரத்திலான புதிய உற்பத்திகளை உருவாக்கிக்கொள்ளக் கூடியவாறு களிமண் கைத்தொழில் கிராமங்களை விருத்தி செய்தல் பற்றி 2013 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்ட உரையின் போது கலந்துரையாடப்பட்டது. கைத்தொழில் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் களிமண் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற சமுதாயத்தின் வருமானத்தை முன்னேற்றுவதும் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6 களிமண் கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டு ரூ.14.97 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் இவ்வருடம் ரூ.10.6 மில்லியன் செலவிடப்பட்டது.

#### (ஆ) நிறுவன கிராமங்கள் மற்றும் பெண்களுக்கு தொழில் முனைப்பு அபிவிருத்தி திட்டம்

கிராமிய பொருளாதரத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி அதனை விருத்தி செய்யும் நோக்கில் கைத்தொழில் கிராம்ஙகளை விருத்தி செய்து கிராமிய மட்டத்தில் பெண் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டி அவர்களுக்கு உதவி வழங்கும் தேவை 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட பிரேரணைகள் முலம் வலியுறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்த்தின் கீழ் 5 கிராமங்களை விருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூ. 7.7 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் மேற்படி கிராமங்களை விருத்திசெய்வதற்காக அவ்வருடத்தில் ரூ.2.6 மில்லியன் செலவிடப்பட்டது. இக்கிரமாங்களில் வாழ்ந்த 203 பேருக்கு இக்கருத்திட்டத்தின் மூலம் நன்மை கிட்டியது.

#### (இ) கைப்பணி கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்.

2014 ஆம் ஆண்டில் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக இரண்டு பாரம்பரிய கைப்பணி கைத்தொழில் கிராமங்கள் இனங்காணப்பட்டன. மேற்படி கைத்தொழில்களின் நிலைபேறான தன்மைக்கு உதவிவழங்கக்கூடிய தொழில்நுட்பம், திறன் மற்றும் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல் இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2014 ஆண்டில் ரூ. 2.23 மில்லியன் ஒதுக்கப்பட்டதெனினும் அவ்வருடத்திற்குள் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.0.51 மில்லியன் மாத்திரமாகும். 2014 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 55 தொழில்முயற்சியாளர்கள் நன்மையடைந்ததனர்.

### 4.2.3 கித்துள் உற்பத்திகளை விருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

கித்துள் மரத்திலுள்ள பல்வேறு பயன்கள் காரணமாக அது மிகவும் பெறுமதியான மரமாக இருப்பதுடன் கித்துள் பூ அதன் மிகவும் பெறுமதியான பகுதியென கருதப்படுகின்றது. கித்துள் கள்ளு, பாணி, மற்றும் வெள்ளம் போன்றவற்றை தயாரிப்பதற்காக பயன்படுத்திக்கொள்ளப்படும் சாரத்தை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கித்துள் பூ சீவப்படுகின்றது. ஆயினும் கித்துள் பூவை சீவுவதன் வணிக ரீதியிலான பெறுமதி பற்றி சமுதாயம் கொண்டுள்ள விழிப்புணர்வின்மை காரணமாக பெருமளவு கித்துள் மரப்பூக்கள் சீவப்படுவதில்லையென அறியப்பட்டுள்ளது.ஆகவே, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்

சிறு தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் கித்துள் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கு விசேட நிகழ்ச்சிதிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

கித்துள் உற்பத்தியாளர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதன் மூலம் கித்துள் கைத்தொழிலை மேம்படுத்தல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். சீவப்படுகின்ற கித்துள் மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், பயனாளிகளின் வருமான மட்டத்தினை உயர்த்துதல், தொழில்நுட்பத்தை நவீனமயப்படுத்துதல், உற்பத்தி பல்வகைப்படுத்தல் ஊடாக உயர் தரத்திலான கித்துள் உற்பத்திகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் கித்துள் உற்பத்திகளுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை அதிகரித்தல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய விசேட குறிக்கோல்கள் சிலவாகும். 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியாகின்ற போது அமைச்சின் வழிகாட்டலின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபை பின்வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் இதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அடைவுகள் அட்டவணை இலக்கம் 4.2.3.1 இல் காட்டப்பட்டுள்ளது

**அட்டவணை இலக்கம் 4.2.3.1 - கித்துள் உற்பத்திகளை விருத்தி செய்வதற்கான தேசிய நிகழச்சித்திட்டத்தின் செயலாற்றுகை**

| கூட்டுக் குறிக்கோள் | கூட்டுக் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தியாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|
| **G1a.** கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், அபிவிருத்திசெய்தல் | (i) | உத்தியோகத்தர்களுக்கான விழிப்புரணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 16 | 10 | 118,945 |
| | (ii) | பூ சீவுவதற்கான தொழில்நுட்ப பயிற்சி நிகழச்சித்திட்டம் | 50 | 38 | 390,382 |
| | (iii) | பூ சீவுதல் தொழில்நுட்ப பின்னாய்வு நிகழ்ச்சித்திட்டம் | | - | - |
| | (iv) | உற்பத்தி தர விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 30 | 20 | 238,566 |
| | (v) | தொழில்முயற்சி விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 7 | 4 | 253,143 |
| | (vi) | பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 3 | - | - |

| கூட்டுக் குறிக்கோள் | கூட்டுக் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தியாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | (vii) | பின்னாய்வு நிகழ்ச்சித்திட்டம் | 30 | 34 | 201,741 |
| | (viii) | புதிதாக சீவுபவர்களை உருவாக்குதல் | 2000 | 611 | |
| | (ix) | புதிதாக சீவப்படுகின்ற மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் | 11900 | 5797 | |
| | (x) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்தி | 50 | 45 | |
| | (xi) | புதிய சிறுஅளவிலான கைத்தொழில்களை ஆரம்பித்தல் | 25 | 40 | |
| | (xii) | கைத்தொழில்களை GMP தரத்திற்கு உயர்த்துதல் | 40 | 1 | |
| | (xiii) | சீவுபவர்களை பதிவு செய்தல் | 1000 | 966 | |
| | (xiv) | சீவுபவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் | 500 | 730 | |
| | (xv) | சீவுபவர்களுக்கு பாதுகாப்பு உடைகளை விநியோகித்தல் | 1000 | 476 | |
| | (xvi) | 67 பிரதேசங்களில் புதிதாக கித்துள் கன்றுகளை நாட்டுதல் | 20000 | 1000 | |
| | (xvii) | “கித்துள் வருண” கண்காட்சியை நடாத்துதல் | 9 | 5 | 3,474,265 |
| மொத்தம் | | | | | **4,677,042** |

### 4.2.4 “திவிநெகும” தேசிய நிகழ்ச்சித்திட்டம்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்முயற்சிகள் அமைச்சின் உதவியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் “திவிநெகு” தேசிய நிகழச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நிலைபேறான மனைக் கைத்தொழில் பொருளாதார அலகுகளை மேம்படுத்துதற்கும் உருவாக்குவதற்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் அதன் பயனாளிகளுக்கு வசதிகளை வழங்குதல் மற்றும் தேவையான சேவைகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்ச்சிட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபை மனை கைத்தொழில் பொருளாதார அலகுகளை ஆரம்பிப்பதற்கு ஆற்றலுடைய 751 பேர் இனங்காணப்பட்டதுடன் இவர்களுக்கு நாடளாவிய ரீதியில் ரூ.7,358,619.00 செலவில் பெறுமதியான இயந்திரோபகரணங்கள், கருவிகள் மற்றும் ஏனைய சாதனங்கள் வழங்கப்பட்டன.

## 4.3 திட்டமிடல் பிரிவு

**பொது**

உலக பொருளாதாரத்தில் ஏற்படும் வேகமான மாற்றங்கள் காரணமாக தொழில்முயற்சி அபிவிருத்தி சேவைகளில் ஏற்பட்டுள்ள போட்டித்தன்மை காரணமாக சிறிய மற்றும் நடுத்தர் தொழில்முயற்சியாளர்களுக்கு மிகவும் அர்த்தபுஷ்டியுள்ள சேவையினை வழங்குவதற்கு ஆற்றல் கிட்டும் வகையில் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கான உத்திகளை மீளமைப்பதற்கும் மீண்டும் வரைவிலக்கணப்படுத்துவதற்கும் ஏதுவான சவால்மிகு பணி திட்டமிடல் பிரிவுக்கு சாட்டப்பட்டுள்ளது.

**திட்டமிடல் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள பணிகள்**

ஒவ்வொரு பிரிவிற்கும் எதுவான அபிவிருத்தி பணிகளை திட்டமிடல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பிடு செய்தல் திட்டமிடல் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள பிரதான பணிகளாகும்.. இதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு ஆண்டின் தொடர்கத்திலும் நிச்சயிக்கப்படுகின்ற பௌதீக மற்றும் நிதி இலக்குகளுக்கு ஏதுவாக கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கான கூட்டாண்மை திட்டத்தை தயாரித்தல் மற்றும் ஒவ்வொரு பிரிவினதும் வருடாந்த மூலோபாய செயல் திட்டங்களையும் மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தலும் திட்டமிடல் பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள பொறுப்புகளாகும். மேலும் இந்த பிரிவினால் நிரல் அமைச்சுக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணியாள் தொகுதியின் செயலாற்றுகை மதிப்பீட்டிற்காக செயலாற்றுகை மதிப்பீட்டு மதிப்பீட்டாளர்களுக்கும் அத்துடன் பணிப்பாளர் - நிர்வாகத்திற்கும் முகாமைத்துவ தகவல்கள் வழங்கப்படுகின்றன.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏனைய பிரிவுகளின் பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு பின்வரும் துணை செயற்பாடுகளும் இப்பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ளன.

- கைத்தொழில் அபிவிருத்தி சபையினதும் 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சபை சட்டத்தின் கட்டாய குறிக்கோள்களுக்கும் எற்ப கொள்கைகள், முறைமைகள் மற்றும் வழிகாட்டல்களை ஆக்குதல்
- தாபனத்தின் பாதீடு மற்றும் ஒட்டுமொத்த செயல் திட்டத்திற்கு ஏற்ப மூலதன மற்றும் மீண்டெழும் செலவின தேவைகளை தயாரிப்பதற்கு வசதிகளை வழங்குதல்
- தொழில்முயற்சி/கைததொழில் மதிப்பாய்வுகளை நடாத்துவதற்கு வசதிகளை வழங்குதல், கைத்தொழில்/பொருளாதாரம் சார்நத புள்ளிவிபரங்களை இற்றைப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட துறைசார் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை தயாரிப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்குதல்
- வெளிநாட்டு நிதிகளை பெற்றுக்கொள்வதற்காக அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளையும எண்ணக்கரு பத்திரங்களையும் தயாரித்தல்
- தற்போதுள்ள கைத்தொழில் சார்ந்த கொள்கை வகுத்தல் குழுவிற்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பங்கேற்பினை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் தேவையான சந்தரப்பத்தில் தேவையானவாறு கொள்கை பத்திரங்களை தயாரித்தல்

**துறையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

I. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் 2014 – 2016 காலகட்டத்திற்கான கூட்டாண்மை திட்டம் திட்டமிடல் பிரிவினால் தயாரிக்கப்பட்டது.

II. இலங்கை ரெலிகொம் நிறுவனத்துடன் இணைந்து நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கான கணினியினால் ஆக்கப்பட்ட பெயர் பட்டியலொன்றை தயாரித்த பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க கைத்தொழில் பற்றிய தரவுகள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாதிரியொன்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் தயாரிக்கப்பட்டன.

III. இப்பிரிவினால் பின்வரும் அரச நிறுவனங்களுக்கு புள்ளிவிபரங்கள் வழங்கப்பட்டன

- வருடாந்த அறிக்கைக்காக இலங்கை மத்திய வங்கிக்கு
- தேசிய கணக்குகள் மதிப்பீட்டிற்காக தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு

IV. அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் விநியோகிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் பற்றி 2013.01.01 முதல் 2014.05.31 ஆம் திகதி வரையிலான காலகட்டத்திற்கான செயலாற்றுகை அறிக்கையினை தயாரித்தல்.

V. அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை (8 ஆண்டுகளுக்கான) கைத்தொழல் அபிவிருத்தி சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய சேவைகள் பற்றிய செயலாற்றுகை அறிக்கையினை தயாரித்தல்

VI. மாத்தறை மாவட்டத்தில் உள்ள சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களின் நிலைமையையும் அவற்றை திருத்தியமைக்கும் செயன்முறைகளின் முன்னேற்றத்தையும் மதிப்பீடு செய்வதற்காக செஞ்சிலுவை சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க அக்கைத்தொழில்களை புதிப்பிக்கும் செயன்முறை பற்றிய பின்னாய்வினை மேற்கொள்வதற்கு தகவல்கள் வழங்கப்பட்டன.

VII. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தேவைகளுக்கேற்பவும் ஏனையவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் தெரிவு செய்யப்பட்ட சில பொருட்களுக்கு HS குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு தெற்காசிய வலய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் சம்பந்தமாக அறிக்கையொன்றை தயாரிப்பதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுதல் (பொருட்கள், கோப்பி, தேயிலை, இறப்பர் மற்றும் வெட்டு மரம் சார்ந்த உற்பத்திகள்.

VIII. 2014 ஆம் ஆண்டில் 4000 கைத்தொழில்களை தரவுத் தளத்தில் உள்வாங்கிக் கொள்வதற்காக கைத்தொழில் பற்றிய தரவுகளை இற்றைப்படுத்தி உள்வாங்குதல். ISIC குறியீடுடன் 763 கைத்தொழில்கள் பற்றிய தகவல்கள் உள்வாங்கப்பட்டன.

IX. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கடந்த மூன்றாடுகளின் முன்னேற்றத்தை அடிப்படையாக்க கொண்டு புதிய கைத்தொழில் விவரத் திரட்டினை உள்வாங்குதவற்காக தற்போதுள்ள கைத்தொழில்களின் தரவுத் தளத்தை இற்றைப்படுத்துதல்

X. கைத்தொழில் பற்றிய தகவல்களை சேகரித்து அத்தகவல்களை இணையத்தளத்தின் வாயிலாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை தயார்படுத்துதல்

## 4.4 சந்தைப்படுத்தல் பிரிவு

நாடு பூராவும் உள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்/கைத்தொழிலாளர்கள் அத்துடன் சுய தொழில்களில் ஈடுபடுபவர்கள் ஆகியோரினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு ஏதுவான செயற்பாடுகள் சம்பந்தமாக பணியாற்றும சந்தைப்படுத்தல் பிரிவு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முக்கியமான சக்தியாக விளங்குகின்றது. அது மிகவும் முக்கியமான நபராகிய நுகர்வோரின் முழுமையான திருப்தியை உருவாக்கும் வகையில் பரஸ்பரம் நன்மை பயக்கக்கூடிய நீண்டகால வர்த்தக தொடர்புகளை கட்டியெழுப்புவதன் மூலம் நுகர்வோருக்கு சேவைளை வழங்குகின்றது. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ் அச்சு மற்றும் வெளியீட்டுப் பிரிவும் சந்தைப்படுத்தல் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**இப்பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ள பணிகள்**

- கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் நடாத்துதல்/தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்றல்
- நாடாளாவிய ரீதியில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாளர்கள்/கைத்தொழிலாளர்கள் அத்துடன் சுய தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுக்கான தேசிய விருது வழங்கும் வைபவத்தை ஒழுங்குசெய்தல்
- “லக்கம்” மற்றும் “லக்நிபயும்” விற்பனை நிலையங்களில் விற்பனை வசதிகளை வழங்குதல்
- துணை ஒப்பந்தக்காரர்களின் பரிமாற்றத்திற்கு வசதியளித்தல்
- வார்ப்பு வேலைகள், சாதாரண எந்நிரவியல், கொல்லன் பட்டறை வேலைகள் மற்றும் ஏனைய உலோக வார்ப்பு வேலைகள், கைவினை தொழில்களில் ஈடுபட்டுள்ள கைத்தொழலாளர்கள் போன்றோருக்கு சலுகை விலைகளில் மூலப்பொருட்கள்/கழிவுப்பொருட்கள் ஆகியவற்றை வழங்குதல்
- கைத்தொழில்/நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் விருத்திசெய்வதற்காக சந்தைப்படுத்தல் உதவிகளையும் மதியுரை சேவைகளையும் வழங்குதல்

**இப்பிரிவினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள் மற்றும் சேவை அலகுகள்**

“லக்நிபயும்” மற்றும் “லக்கம்” விற்பனை நிலையங்கள் – நாடளாவிய ரீதியில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்கள் மற்றும் சுய தொழிலில் ஈடுபடுபவர்களின் உற்பத்திகளின் பயனுறுதியை உயர்த்துவதையும் சந்தைப்படுத்தலை மேம்படுததுவதையும் நோக்காகக் கொண்டு “லக்நிபயும்” மற்றும் “லக்கம்” விற்பனை நிலையங்கள் ஊடாக கண்காட்சி மற்றும் விற்பனை வசதிகள் வழங்கப்படுகின்றது.

*துணை ஒப்பந்தங்களின் பரிமாற்றம்*

உலக வங்கி நிதியத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சந்தைப்படுததல் பிரிவின் கீழ் துணை ஒப்பந்த பரிமாற்றம் 1982 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. அது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நிரம்பல் செய்வதுடன் தொடர்புடைய அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துகின்றது.

**உலோகக் கழிவு கருத்திட்டம் -** சந்தைப்டுத்தல் பிரிவினால் இரும்பு கலந்த மற்றும் இரும்பு கலவை செய்யப்படாத உலோகக் கழிவுகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பொருட்களை ஒப்பந்த விலைக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சார்பில் அரச நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்கின்றது.இந்த பொருட்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபையில் பதிவு செய்துகொண்டுள்ள சாதாரண எந்திரவியல் கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருளாக விற்பனை செய்யப்படுகின்றது.

**கண்காட்சி -** கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நுண்,சிறிய மற்றும் நடுத்தர அளிவிலான தொழில்முயற்சியாளர்களுக்காக மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் கண்காட்சிகள் ஒழுக்குசெய்யப்படுகின்றன. மாகாண மற்றும் மாவட்ட மட்டத்திலான கண்காட்சி நடாத்தப்பட்டதையடுத்து நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வகைகளின் கீழ் நாடளாவிய ரீதியில் சிறந்த தொழில்முயற்சியாளர்களை தெரிவுசெய்வதற்காக தேசிய மட்டத்திலான வருடாந்த கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சி நடாத்தப்படுகின்றது. இந்த கண்காட்சிகள் மூலமாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் சிறிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் வசதிகள் பெற்றுத்தரப்படுகின்றன.

**அட்டவணை இலக்கம் 4.4.1 – சந்தைப்படுத்தல் பிரிவின் செயலாற்றுகை** - 2013

| செயலாற்றுகை | லக்நிபயும் விற்பனை நிலையம் | லக்கம் விற்பனை நிலையம் | துணை ஒப்பந்தங்களை வழங்குதல் | உலோகக் கழிவு கருத்திட்டம் | மொத்தம் (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|
| விற்பனை பெறுமதி (ரூ. மி.) | 0.0178 | 10.90 | 2.320 | 85.193 | 98.4308 |
| வருமானம் (ரூ.மி.) | 0.0026 | 2.20 | 0.115 | 28.81 | 31.1276 |




**அட்டவணை *4.4.1* – சந்தைப்படுத்தல் பிரிவின் செயலாற்றுகை** - 2013

**விசேட செயற்பாடுகள்**

மீளாய்வு ஆண்டில் இப்பிரிவினால் பின்வரும் விசேட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- **2014 மே மாதம் 23 – 25 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய விருது வழங்கும் வைபவம் நடாத்தப்பட்டது.**
  - பல்வேறு உற்பத்தி துறைகளின் கீழ் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு நாடளாவிய ரீதியிலுள்ள சுய தொழிலாளர்கள், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுகிடையில் மாகாண மட்டத்தில் விருதுபெறத் தகுதியுடையவர்கள் 150 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.
- **நன்மதிப்பினை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டம்**
  - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை இன்டநெஷனல் மெனுபெக்சரிங் எக்ஸ்போ – 2014 கண்காட்சிக்கு இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பிரிவுகளில் கைத்தொழிலாளர்களை பங்கேற்கச் செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

- பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இரண்டாவது இலங்கை வுட் இன்டநெஷனல் எக்ஸ்போ – 2014 கண்காட்சிக்கு கைத்தொழிலாளர்களை பங்கேற்கச் செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

**தொழில் நுட்ப அபிவிருத்தி நிலைமாற்று திட்டங்களுக்கான சாவதேச அனுபவங்ளைப் பெற்றுக்காள்ளல்.**

- 2014 டிசம்பா மாதம் 14 – 27 ஆம் திகதி வரை புதுடில்லியில் இடமபெற்ற இந்திய சாவதேச வாத்தக சநதையில் கைத்தொழிலாளாகளை பங்குபற்றவைத்தலும் தொடாபுளைப் பேணலும்.
- 2014 டிசம்பா 03 - 06 வரைபெங்களில் நடைபெற்ற ALUCAST கண்காட்சியில் பங்கு பற்றியமை.

**அட்டவணை 4.4.2 – *ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் பிரதான பௌதீக செயலாற்றுகை***

| கூட்டுக் குறிக்கோள் |
|---|
| G1a கைத்தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் |
| G1b தொழில்முயற்சியாளர்களை பயிற்றுவித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மதியுரை வழங்குதல் |
| G7 உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திகளை காட்சிப்படுத்துதல் அல்லது விநியோகிப்பதற்காக உள்நாட்டு அமைப்பு கள் அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது அரசுடன் இணைந்து பணியாற்றுதல் அல்லது ஒத்துழைப்பு வழங்குதல் |
| G9 கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக மூலதன, கடன், சந்தைப்படுத்தல், முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் சட்ட ஆலோசனைகள் உள்ளிட்ட அனைத்து சேவைகளயைும் வசதிகளையும் வழங்குதல் |
| G10 கைத்தொழில் இயந்திரோபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக அல்லது சம்பந்தப்பட்ட வசதிகளை வழங்குவதற்காக எந்தவொரு உள்நாட்டு ஒழுங்கமைப்பிற்கும் அல்லது ஆளுக்கும் அல்லது ஆட்களுக்கும் நிதி ரீதியில் அல்லது வேறு விதத்தில் ஒத்துழைப்பு வழங்குதல் |

| கூட்டு குறிக்கோளை அடைந்துகொள்வதற்காக நடைமுறைப்படுததப்பட்ட செயற்பாடுகள் | | அளவுச் சுட்டி | அடைவு |
|---|---|---|---|
| G1a.25 | துணை ஒப்பந்த வசதிகளை வழங்குதல் மற்றும் மின்னஞ்சல்/ஊடகம் அல்லது இணையத்தளம வாயிலாக சேவைகளை பிரபல்யப்படுத்துதல் | | |
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் சந்தைப்படுத்தல் ஆற்றலை மேம்படுத்துதல் | | |
| (i) | துணை ஒப்பந்தங்களை வழங்கும் வசதிகள் | பொருள் அனுப்பல் கட்டளைகளை விநியோகித்தல் | 30 |
| | | அனுப்பல் கட்டளைகளின் பெறுமதி (ரூ) | 2,321,944.48 |
| | | துணை ஒப்பந்தங்களை பெற்றுக்கொள்வதற்காக வசதி வழங்கப்பட்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 08 |
| | | வருமானம் (ரூ.) | 115,252.39 |
| G1b.8 | SMIDEX சிறிய மற்றும் நடுத்தர அளிவிலான கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் தொழில்முயற்சிகளுக்கு விருது வழங்குதல் | | |
| (அ) | **சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் சந்தைப் பங்கினை அதிகரித்தல்** | | |
| (i) | அமைச்சுடன் இணைந்து தேசிய விருது வழங்கும் விழாவினை ஒழுங்கு செய்தல் | தேசிய விருது வழங்கும் விழாக்களின் எண்ணிக்கை | 1 |
| | | சேவையளிக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 332 |
| | | செலவு (ரூ) | 14,000,000 |
| | | வருமானம் (ரூ) | 115,252.39 |
| **(ஆ)** | **உள்நாடடு கண்காட்சிகள் மற்றும் சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்றல்** | | |
| (i) | பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை இன்டர்நெஷனல் மெனுபெக்சரிங் எக்ஸ்போ – 2014 கண்காட்சிக்கு இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பிரிவில் பங்கேற்றல் | கண்காட்சிகளின் எண்ணிக்கை | 1 |
| | | பங்கேற்ற தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | |
| | | நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை | 30 |
| | | செலவு (ரூ) | 300,000 |
| G7.6 | “லக்நிபயும்” சந்தைப்படுத்தல் நிலையத்தின் கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தல வசதிகளை மேம்படுத்துதல் | | |
| (i) | “பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகாரத்த மண்டபத்தில் நடைபெற்ற இரண்டாவது இலங்கை இன்டர்நெஷனல் எக்ஸ்போ – 2014 கண்காட்சி | கண்காட்சிகளின் எண்ணிக்கை | 1 |
| | | பங்கேற்ற தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 13 |
| | | நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை | 100,000 |
| **(இ)** | **சர்வதேச கண்காட்சிகள் மற்றும் வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்றல்** | | |
| (i) | ‘2014 டிசம்பர் 14 – 27 வரை டில்லியில் நடைபெற்ற இண்டர்நெஷனல் டிரேட் | கண்காட்சிகளின் எண்ணிக்கை | 1 |
| | | பங்கேற்ற தொழில்முயற்சிகளின் | 32 |

| | | | |
|---|---|---|---|
| | பெயார் கண்காட்சிக்கு கைத்தொழிலாளர்களை பங்கேற்கச் செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் | எண்ணிக்கை | |
| | | நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை | 2,160,000 |
| (ii) | 2014 டிசம்பர் 03 – 06 ஆகிய திகதிகளில் பெங்களூரில் நடைபெற்ற ALUCAST கண்காட்சியில் 2014 இல் பங்கேற்றல் | கண்காட்சிகளின் எண்ணிக்கை | 1 |
| | | பங்கேற்ற தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | 16 |
| | | மொத்த செலவு (ரூ) | 900,000 |
| G.7.6 | விற்பனை நிலையங்களில் (லக்நிபயும் மற்றும் லக்கம்) கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை மேம்படுத்துதல் | | |
| (i) | விற்பனை நிலையங்கள் ஊடாக சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் | சந்தைப்படுத்தல் வசதிகளை பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை | 69 |
| | | விற்பனை புரள்வு | 10,972,335 |
| | | வருமானம் | 2,223,123 |
| **G.10.3** | உலோகக்கழிவு கருத்திடடத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் உலோக கழிவுப் பொருட்களை வழங்குதல் | | |
| **(i)** | உலோகக்கழிவு கருத்திடடத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் உலோக கழிவுப் பொருட்களை வழங்குதல் | கொள்வனவு செய்த அளவு (மெ.டொ) | 989.77 |
| | | விநியோகிக்கப்படட அளவு (மெ.டொ) | 979.88 |
| | | கைத்தொழிலாளர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் | 611 |
| | | விற்பனை புரள்வு | 28,807,874.80 |

## 4.5 கைத்தொழில் பேட்டைப் பிரிவு

### பொது

நாட்டிலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் உள்ள கைத்தொழலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும் பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தியினை துரிதமாக்குவதற்கும் நோக்கம் கொண்டதாக இலங்கையில் கைத்தொழில் பேட்டை எண்ணக்கரு 1960 ஆம் தசாப்தத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. நாடடின் பல்வேறு பாகங்களிலும் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளின் வாயிலாக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் காணி, கட்டிட வசதி, முக்கலை மின்சாரம், வீதி விளக்குகைள பொருத்துதல், கைத்தொழிலுக்கு தேவையான நீர் மற்றும் குடி நீர் வசதிகளை வழங்குதல், கழிவு அகற்றல் தொகுதி, தொலைத்தொடர்பு வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படுகின்றன. அதன் முக்கிய நோக்கம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறைக்கு கைத்தொழில்களை தாபிப்பதற்கு சுற்றாடல் ரீதியில் பொருத்தமான பிரதேசங்களில்

போதியளவு உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய காணிகள் மற்றும் கட்டிடங்களைப் பெற்றுக்கொடுப்பதாகும்.

மேற்கு மாகாணத்தில் ஏக்கல, ஹொரனை, வவுலுகல மற்றும் பானலுவ ஆகிய பிரதேசங்களிலும் மத்திய மாகாணத்தில் பள்ளேகளை, மாத்தளை மற்றும் கொட்டகலை ஆகிய பிரதேசங்களிலும் சப்ரகமுவ மாகாணத்தில கலிகமுல மற்றும் புஸ்ஸெல்ல ஆகிய பிரதேசங்களிலும் தென் மாகாணத்தில் கரந்தெனிய, பத்தேகம, மற்றும் பெலியத்த ஆகிய பிரதேசங்கிலும் ஊவாக மாகாணத்தில் புத்தலயில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கைததொழில் பேட்டை பிரிவினாலும் பேணப்பட்டு வரும் கைத்தொழில் பேட்டைகளாகும். 19 கைத்தொழில் பேட்டைகளில் பின்வரும் கைத்தொழில் பேட்டைகளில் நீர் வழிந்தோடுவதற்கான வடிகான்களை அமைத்தல், உள்ளிட்ட குடி நீர் வசதிகளை மேம்படுத்துதல், புதிய கட்டிடங்களை அமைத்தல் மற்றும் தற்போதுள்ள கட்டிடங்களை புனரமைப்பு செய்தல் போன்றவை உள்ளிட்ட தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்காக முன்பிருந்த நிரல் அமைச்சின் மூலமாக பொது திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சுமார் ரூ. 100 மில்லியன் 2014 ஆம் ஆண்டிற்குள் கைத்தொழில் பேட்டைப் பிரிவினால் செலவிடப்பட்டுள்ளது.

மேற்படி அபிவிருத்தி பணிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | கைத்தொழில் பேட்டை | செயற்பாடு | பணத்தொகை (ரூ.மி) | 100% |
|---|---|---|---|---|
| 1 | ஏக்கல | உடைத்து நாசமாக்கப்பட்டுள்ள எல்லை சுவரை அமைத்தல் | 3.99 | 100 |
| | | உள்ளக பாதையின் ஒரு பகுதியை காபட் செய்தல் | 25.40 | 30 |
| 2 | பள்ளேகளை | உள்ளக பாதையின் ஒரு பகுதியை காபட் செய்தல் | 16.56 | 60 |
| 3 | ஹொரனை | அலுவலக கட்டிடத்தை திருத்துதல் மற்றும் வேலியை அமைத்தல் | 11.28 | 100 |
| 4 | வவுலுகல | உள்ளக பாதைகளுக்கு தார் இடுதல் மற்றும் மழை நீரு வழிந்தோடுவதற்கான வடிகான்களை அமைத்தல் | 5.40 | 100 |
| 5 | களுதேவலை | உள்ளக பாதைகளின் ஒரு பகுதியை புதுப்பித்தல் (கொங்கிறீட் இடுவதற்காக) | 6.46 | 30 |
| 6 | பன்னல | புதிய நீர் தாங்கியொன்றை அமைத்தல் | 4.20 | 100 |
| 7 | லுனுவில | உள்ளக பாதைகளின் ஒரு பகுதிக்கு தார் இடுதல் | 3.00 | 60 |
| 8 | அச்சுவேலி | தபால் அலுவலகம் மற்றும் உணவகக் கட்டிடத்தை அமைத்தல் | 6.66 | 100 |

உருவம் 4.5.1 - கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் முகாமைத்துவம் செய்யப்படும் கைத்தொழில் பேட்டைகள்



**அச்சுவேலி கைத்தொழில் பேட்டையினை திறந்துவைத்தல்**

சிவில் யுத்தம் முடிவடைந்ததுடன் யாழ்ப்பாணம் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையினை மீள நடைமுறைப்படுத்தும் விடயம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் முதலாவது கட்டத்தின் நிருமாணப் பணிகள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன. இந்திய சிறு அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் ரூ. 220 மில்லியன் நிதி வழங்கப்பட்டதுடன் இணை நிதி வழங்குனராக இலங்கை அரசு ரூ. 50 மில்லியன் தொகையை வழங்கியது.

மழை நீர் வழிந்தோடுவதற்காக வடிகான்கள், நடைபாதையுடன் கூடிய உள்ளக வீதித் தொகுதி பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான அறைகள், நீர் தாங்கிகள் மற்றும் ஏனைய பொருத்தல்களுடன் கூடிய நீர் வழங்கல் திட்டமம், வீதி விளக்குகள் உள்ளிட்ட முக்கலை மின்சாரம், மலக்கழிவுகளை அகற்றும் தொகுதியினை அமைத்தல், தீயணைப்பு முறைமைகள் காணியை சுற்றி முழுமையான சுற்று மதில் அமைத்தல், (சீமெந்தால் கட்டப்படும் மதில் எல்லையை குறிப்பதற்காக அமைக்கப்படுவதுடன் நுழைவுப் படலை தடை உள்ளிட்ட சங்கில் வேில) நிருவாகக் கட்டிடத்தின் உணவறை, தபாலகம் மற்றும் சேவை கட்டிடங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

“அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்” எனும் தலைப்பின் கீழ் கொழும்பில் முதலீட்டு சம்மேளனம் ஒன்றை நடாத்தியதன் பெறுபேறாக அச்சு ஊடகங்களிலும் நிரல் அமைச்சிலும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் இணையத்தளத்திலும மூன்று அரச கரும மொழிகளிலும் விளம்பரமொன்றை பிரசுரித்து அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கான கைத்தொழிலாளர்களை தெரிவுசெய்யும் பொருட்டு 58 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டனர். அதற்கேற்ப, 8 கைத்தொழிலாளர்களை தெரிவுசெய்வதற்காக பீ.வீ.சி குழாய்கள், கலப்பு உலோகம் பூசப்பட்ட சின்க் அலுமினியம கூரைத் தகடுகள், திருகாணிகள், ம்றும் சீமெந்து சார்ந்த உற்பத்திகள் ஆகியவற்றை உற்பத்திசெய்தல் போன்றவைகளுக்காக 04 கைத்தொழற்சாலைகள் நடைமுறையில் உள்ளன.

கைததொழில் அலகுகளுக்காக கைத்தொழிலாளர்களை தெரிவுசெய்தல்

தற்போது கைத்தொழில்களை நிறுவியுள்ள கைத்தொழிலாளர்கள் மற்றும் புதிய காணித்துண்டுகள்/கட்டப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ள கட்டிடங்களை பெற்றுக்கொள்ளுதல் போன்றவற்றிற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து நடைமுறை ரீதியில் ஆற்றலுடைய 47 கைத்தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

குத்தகை ஒப்பந்தங்களை கைச்சாத்திடுதல்

காணிகள் மற்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு முறையே 30 மற்றும் 20 வருடங்கள் வெற்றிகரமாக தொழில்முயற்சியினை மேற்கொண்டுள்ள கைத்தொழிலாளர்களுடன் சம்பந்தப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களுக்கான குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. மேற்படி கைத்தொழிலாளர்களுடன் 12 குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

கண்காட்சிகள் பங்கேற்றல்

கைத்தொழல் அபிவிருத்தி சபையினால் வருடாந்தம் ஒழுங்குசெய்யப்படுகின்ற உத்தியோகபூர்வ கண்காட்சிகள் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற **SMIDEX** கண்காட்சியில் கைத்தொழில் பேட்டைகளில் அமைந்துள்ள தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கைத்தொழில்களினதும் செயற்பாடுகள் காட்சிப்படுததப்படும் 26 கூடங்களைக் கொண்ட புறம்பானதொரு மண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டது.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சந்தைப்படுத்தல் குழுவின் பங்கேற்புடன் கைத்தொழில் பிரிவு இந்தியா மற்றும் இலங்கை இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களின் சங்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட SMIDEX சர்வதேச கண்காட்சிக்கு செயலூக்கத்துடன் பங்கேற்கப்பட்டது.

மேலும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் இந்த கண்காட்சியை பார்வையிட்டு **SMIDEX** இனால் வழங்கப்பட்டபுதிய விடயங்களை கற்றுக்கொள்வதற்கு நாடளாவிய ரீதியில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர் கைத்தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

வாடகை வருமானத்தை அறிவிடுதல்

குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களிலிருந்து மாதாந்தம்/வருடாந்தம் வாடகையை அறவிடுக் கொள்வதன் மூலம் இந்த வருடத்திற்குள் ரூ.53 மில்லியன் வருமானம் கிடைத்ததுடன் குத்தகைக்காரர்களினடமிருந்து பெற்றுக் கொண்ட முழு பட்டியலிடப்பட்ட வருமானம் 90% அண்ணளவானதொரு தொகையாக இருந்தது. இந்த வருடத்திற்குள் குத்தகையாளர்களுடன் குத்தகை ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் போது அவர்களிடமிருந்து மீள செலுத்தும் மூன்றாண்டுகால வைப்பீடாக அறவிடப்பட்ட பணத்தொகைக்காக பேணிவரப்படுகின்ற சுழற்சி நிதியம் ரூ. 2.33 மில்லியன் ஆகும். அதன்படி 2014 ஆண்டு நிறைவு பெறும் போது மேற்படி சுழற்சி நிதியத்தின் திரண்ட பெறுமானம் ரூ.14 மில்லியனாக இருந்தது.

விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

கைத்தொழில் பேட்டைகளில் கைத்தொழிலாளர்களின் சங்கத்துடன் இணைந்து பள்ளேகலை கைத்தொழில் பேட்டையில் கைத்தொழிலா◌ாளர்களின் உற்பத்தி ஆக்கவிளைவினை மேம்படுத்தி அவர்களை தனிப்பட்ட ரீதியில் கட்டியெழுப்புவதற்காக இலங்கை “முன்மாதிரி சுற்றாடல் நேயமிக்க கைத்தொழில் பேட்டை” என்பதை முழுமையாக நோக்காகக் கொண்டு இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

## 4.6 எந்திரவியல் பிரிவு

### பொது

இப்பிரிவின் விடயப்பரப்பின் கீழ் வரும் பிரிவுகளும் நிலையங்களும் பின்வருமாறு

- கட்டுபெத்த தலைமை அலுவலகம் – எந்திரவியல் வேலைத்தள பிரிவு, வார்ப்பு வேலைத்தளம், எந்திரவியல் காரியாலயம் (தொழில்நுட்ப தகவல்கள் மற்றும் மதியுரை சேவைகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளுக்காக), சிவில் எந்திரவியல் மற்றும் மின் எந்திரவியல்
- பேலியகொடை – மின்முலாம்பூசுதல் நிலையம்
- பன்னல – பொருத்தமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் விருத்தியாக்கல் நிலையம்
- மாத்தறை – பொது சேவைகள் நிலையம்
- பமுனுவ – பித்தளை பொருட்கள் சேவைகள் நிலையம்

### பிரிவின் செயற்பாடுகள்

2014 ஆம் ஆண்டில் எந்திரவியல் பிரிவினால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு

- ஏற்கனவேயுள்ள கைத்தொழிலாளர்களுக்கும் புதிய கைத்தொழிலாளர்களுக்கும் கைத்தொழிலாளர்களாகுவதற்கு ஆற்றலுள்ளவர்களுக்கும் மூலப்பொருட்களையும் இயந்திரோபகரணங்களையும் தெரிவுசெய்யும் போது, திட்டமிடும் போது விருத்திசெய்யும் போது, ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தொழில்நுட்டபம் மற்றும் தொழிற்பாடு பற்றிய அறிவினை வழங்குதல்
- பதப்படுத்தல், வார்ப்பு, உலோக முடிவாக்கல் சேவைகளை வழங்குதல்
- சபைக்கு சிவில், மின் எந்திரவியல் துறைகளில் உள்ளக பராமரிப்பு, பழுதுபார்த்தல், மறுசீரமைப்பு மற்றும் நிருமான திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு உதவிகளை வழங்குதலும் சபையின் வாகன பராமரிப்பு தேவைகளின் போது தொழில்நுட்ப மற்றும் மேற்பார்வை ஒத்துழைப்பினை வழங்குதல்
- கிராமிய கைத்தொழில் மற்றும் சுய தொழில் உருவாக்கத்திற்கு அமைச்சின் கருத்திட்டத்திற்காக சிவில் மற்றும் மின் எந்திரவியல் உதவிச்சேவைகளை வழங்குதல்
- இயந்திரோபகரண மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குதல், வார்ப்பு வேலைப் பிரிவுக்கான ஆய்வுகூட பரிசோதனை சேவைகளை வழங்குதல் அத்துடன் பிரிவினால் உருவாக்கப்படும் இயந்திரோபகரணங்கள் மற்றும் கருவிகளின் விற்பனை இப்பிரிவினால் ஈடேற்றப்படும் ஏனைய சில சேவைகளாகும்.
- கைத்தொழில்களுக்காக சிக்கனமானதும் பொருத்தமானதுமான இயந்திரோபகரன மாதிரிகளை தயாரித்தல்

2014 **ஆம் ஆண்டின் செயலாற்றுகை**

- **கட்டணம் அறவிடப்படும் சேவைகள், மதிப்பீட்டு, வார்ப்பு வேலைகள்/மின்முலாம்பூசுதல் ஆய்வுகூட சேவைகள், கருவிகள் விற்பனை மற்றும் பல்வேறு விடயங்கள் மூலமாக கிடைத்த வருமானம்**

இப்பிரிவின் கீழுள்ள பல்வேறு பிரிவுகளினாலும் நிலையங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிவாரியான சேவைகள் மூலம் 2014 ஆம் ஆண்டில் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. இததரவுகள் 2014 ஆம் ஆண்டு நிறைவுறும் தினத்திற்கு ஏதுவான வகையில் சமரப்பிக்கப்ட்டுள்ளதுடன் அதற்கு வற்வரி மற்றும் தே.க.வரி உள்ளடக்கப்படவில்லை.

## அட்டவணை 4.6.1 – 2014 ஆண்டில் ஆற்றப்பட்ட சேவைகளிலிருந்து வெளிவாரியாக ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம்

| இல | பிரிவு/பணி | வற்வரி மற்றும் தே.க.வரி தவிர்ந்த வருமானம் (ரூ) |
|---|---|---|
| 1 | எந்திரவியல் வேலைத்தளம் – தலைமைக் காரியாலயம், கடடுபெத்த | 7,871,096 |
| 2 | வார்ப்பு வேலைத்தளம் – தலைமைக் காரியாலயம் | 24,785 |
| 3 | மதிப்பீட்டு அறிக்கை – தலைமைக் காரியாலயம் | 884,439 |
| 4 | சிவில் எந்திரவியல் சேவை – தலைமைக் காரியாலயம் | 80,000 |
| 5 | உ.தொ.ஆ,அ.ச,,,, பன்னல | 1,739,228 |
| 6 | மின் மூலாம்பூசல் நிலையம் பேலியாகொட | 1,639,416 |
| 7 | பொது சேவைகள் நிலையம், மாத்தறை | 436,283 |
| 8 | பித்தளை பொருட்கள் சேவைகள் நிலையம் - பமுணுவ | 408,567 |
| | மொத்தம் | **13,083,814** |

- **உள்ளக சேவைகள்**

பல்வேறு பிரிவுகளினால் வழங்கப்பட்ட உள்ளக எந்திரயவியல் சேவைகளின் பெறுமதி ( சேவை அடிப்படையில் கிரயம்) பின்வருமாறு

## அட்டவணை 4.6.2 – 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உள்வாரியான சேவைகளின் பெறுமதி

| இலக்கம் | **பிரிவு** | நிறைவேற்றப்பட்ட உள்வாரியான சேவைகளின் பெறுமதி (ரூ;) |
|---|---|---|
| 1 | வேலைத்தளம் – தலைமை அலுவலகம் | 299,145 |
| 2 | வார்ப்பு வேலைத்தளம் - தலைமை அலுவலகம் | 296,870 |
| 3 | சிவில் எந்திரவியல் சேவைகள் - தலைமை அலுவலகம் | 1,381,377 |
| 4 | மின் எந்திரவியல் சேவைகள் - தலைமை அலுவலகம் | 238,500 |
| மொத்தம் | | **2,215,892** |

- **மதியுரை/விரிவாக்கல் சேவைகள்**

**மதியுரை சேவைகள்**

பன்னலயில் அமைந்துள்ள உ.தொ.ஆ,அ.ச மின் முலாம்பூசும் நிலையம் மற்றும் தலைமை அலுவலகம் (வேலைததளம் மற்றும் எந்நிரவியல் அலுவலகம்) ஆகியவற்றினால் 2014 ஆம் ஆண்டில் கைத்தொழிலாளர்களுக்கு வடிவமைப்புகள் மற்றும் பதனிடல் பற்றிய தொழில்நுட்பம்/செயன்முறை மற்றும் ஆலோசனை வழங்கி 116 மதியுரை சேவைகள் வழங்கப்படடுள்ளன.

## 4.7 தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவை நிலையங்கள்

புடவை மற்றும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் 1989 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கு அமைவாக தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் விசேட பயிற்சி பிரிவாக தாபிக்கப்பட்டது. இந்நிலையம் பயிற்சிப் பிரிவு, நூலகம் மற்றும் தகவல் கூடம், தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் அச்சுப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

முகாமைத்துவ திறன் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி பற்றி நாடளாவிய ரீதியில் உள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை வழங்குதல் பயிற்சிப் பிரிவின் பிரதான பணியாகும். நூலக மற்றும் தகவல் பிரிவின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை முன்னேற்றி அவற்றை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக நூலக வசதிகள் மற்றும் கைத்தொழில் தகவல் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு சபைக்குள் வலைப்பின்னல் மற்றும் தகவல்கள் வசதிகளை வழங்கி இணையத்தளததை அபிவிருத்தி செய்தகின்றது. அச்சுப் பிரிவினால் அறிக்கைகள், கைநூல்கள், கையேடுகள் போன்றவை உள்ளிட்ட தேவையான அனைத்து ஆவணங்களையும் அச்சிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையத்தின் குறிக்கோள்கள்

- புதிய தொழில்முயற்சி கலாசாரமொன்றை தோற்றுவித்தல்
- ஏற்கனவேயுள்ள கைத்தொழில்களை விரிவாக்குவதற்கு புதிய முகாமைத்துவ மூலோபாயங்களை அறிமுகப்படுத்துதல்
- பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் (தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ மதியுரை)
- உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழில்முயற்சி அனுபவத்தை வழங்குதல்
- காலத்திற்கு உகந்த தொழில்முயற்சி மற்றும் கைத்தொழில் துறை பற்றிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களாவதற்கு ஆற்றலுள்ள ஆட்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்
- மதியுரை சேவைகளையும் கைத்தொழில் தகவல்களையும் வழங்குதல்

**தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையத்திற்கு சாட்டப்பட்டுள்ள பணிகள்**

- தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- தொழில்முயற்சிகளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- ஆக்கவிளைவினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- முகாமைத்துவ திறன்களை விருத்தியாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- விழிப்புணர்வூட்டும் நிகழச்சித்திட்டங்கள்/கருத்தரங்குகளை நடாத்துதல்
- தொழில்முயற்சியாளர்களுக்கான வணிக மற்றும் வர்த்தக பயிற்சிகளை வழங்குதல்
- தொழில்முயற்சியாளர்களின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையல்லாத மதியுரை குழுவொன்றை தாபித்தல்
- கைத்தொழில் அபிவிருத்தி சபையில் 5 S முறையை நடைமுறைப்படுத்துதல்
- இணையத்தள மற்றும் மின்னஞ்சல் வசதிகளை வழங்குதல்
  வெளியீடுகளை விற்பனைசெய்தல்
- நூலகப் பொருட்களின் சேகரிப்பினை அதிகரித்தல் (சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம்)
- நூலகப் பொருட்களை முறைமைக்குட்படுத்துதல்
- கைத்தொழில் தகவல்களை ஒழுங்குபடுத்துதல்
- அடிப்படை மதியுரை சேவைகளை வழங்குதல்

- கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சேவைபெறுனர்களை இணையத்தள தரவுக் களஞ்சியத்தில் பதிவுசெய்தல்
- இணையத்தள தரவுக் களஞ்சியத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட சேவைப்பெறுனர்கள் பற்றிய விபரங்களை பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்குதல்
- கைத்தொழிலாளர்கள், சேவைப்பெறுனர்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஊழியர்களுக்கு கைத்தொழில் தகவல்களை விநியோகித்தல்
- நூலகததிற்கு புதிதாக பெற்றுக்கொள்ளப்பட்ட நூலகப் பொருட்கள் பற்றிய தகவல்களை விநியோகித்தல்
- நூல்கள் வழியான அறிவியல் தகவல்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் பொருள் உற்பத்தியாளர்கள், அறிக்கைகள், இலங்கைத் தரங்கள், உதவி நிறுவனங்கள், சட்டங்களின் தொகுப்பு, மற்றும் "கைத்தொழில்கள்" சஞ்சிகையின் தொகுப்பு பற்றிய தரவுக் களஞ்சியமொன்றை பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்துதல்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இயந்திரோபகரணங்கள் பற்றிய விபரங்களை வழங்குதல்
- கைத்தொழில் அபிவிருத்தி சபை தகவல் சஞ்சிகையை தயாரித்தல்
- கையேடுகள், பொதிகள், பொருடக்க அட்டவணைகள், மற்றும் துண்டு வெளியீடுகள் போன்ற வெளியீடுகளை தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்துதல்
- வினவுதல் மற்றும் பதில் வழங்கல் சேவைகள்
- நிபுணத்துவ ஆலோசனைகளுக்கான ஆற்றுப்படுத்துதல் சேவை
- கண்காட்சி, ஒன்றியங்கள், செயலமர்வுகள் ஆகியவற்றில் பங்கேற்பதற்கும் நூலக திரட்டினை இற்றைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான புதிய தகவல்களை சேகரித்தல்

2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

| தாபன குறிக்கோள்களை அடைந்துகொள்வற்கு நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் | அளவுச் சுட்டிகள் | அடைவு | வருமானம்(ரூ) |
|---|---|---|---|
| தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆக்கவிளைவு மேம்படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 10 | 695,720 |
| | பங்கேற்பவர்களின் எண்ணிக்கை | 250 | |
| விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 4 | 45,500 |
| | பங்கேற்பவர்களின் எண்ணிக்கை | 160 | |
| பாடவிதான விருத்தி | பாடநெறிகளின் எண்ணிக்கை | 4 | - |
| வர்த்தக மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குதல் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 11 | 817,225 |
| | பங்கேற்பவர்களின் எண்ணிக்கை | 160 | |
| மதியுரை மற்றும் ஆலோசனை | வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை | 61 | - |
| கைத்தொழில் அபிவிருத்தி சபைக்குள் தரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 1 | - |
| நூலகப் பொருட்களின் திரட்சியினை விருத்திசெய்தல் | நூலகப்பொருட்களின் எண்ணிக்கை | 993 | |

| | | | |
|---|---|---|---|
| **தரவுத் தளத்தை பேணிவருதல்**<br><br>**இணையத்தளம் வாயிலாக பதிவுசெய்துகொண்டுள்ள சேவைப்பெறுனர்கள்**<br><br>கட்டிடப்பொருட்கள் 63<br>உணவு மற்றும் பானம் 1084<br>எண்ணெய் மற்றும் பைபர் 207<br>இராசயணப் பொருட்கள் 639 | சேவைப் பெறுனர்களின் எண்ணிக்கை | 1993 | |
| **ஏனைய தரவுத் தளங்கள்**<br><br>உள்நாட்டு இயந்திரோபகரணங்கள் மற்றும் பொருள் உற்பத்தியாளர்கள்.<br>நூல்விளக்க தரவுகள்.<br>Lotus SmartSuite அணுகுமுறை.<br>அறிக்கைகள்.<br>உதவி நிறுவனங்கள்.<br>இலங்கை தரங்கள்.<br>சட்டங்கள்.<br>கைத்தொழில் ஆய்வுத் தரவுகள். | அறிக்கைகளின் எண்ணிக்கை.<br>அறிக்கைகளின் எண்ணிக்கை.<br>அறிக்கைகளின் எண்ணிக்கை.<br>அறிக்கைகளின் எண்ணிக்கை.<br>நிறுவனங்களின் எண்ணிக்கை.<br>வெளியீட்டு எண்ணிக்கை.<br>அறிக்கைகளின் எண்ணிக்கை.<br>அறிக்கைகளின் எண்ணிக்கை. | 2,762<br>20,254<br>20,249<br>4,522<br>325<br>1,325<br>1,024<br>1,261 | |

| தாபன குறிக்கோள்களை அடைந்துகொள்வற்கு நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் | அளவுச் சுட்டிகள் | அடைவு | வருமானம் (ரூ) |
|---|---|---|---|
| **கைத்தொழில் தகவல்களை பிரச்சாரம் செய்தல்** | | | 406,783 |
| மதியுரை சேவைகள் | சேவை வழங்குனர்களின் எண்ணிக்கை | 1993 | |
| வினவுதல் மற்றும் பதில் சேவைகள் | சேவை வழங்குனர்களின் எண்ணிக்கை | 958 | |
| கைத்தொழில் அபிவிருத்தி சபை பற்றிய பிரச்சாரத்தை வழங்குவதற்காக கையேடுகளை விநியோகித்தல் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) | கையேடுகளின் எண்ணிக்கை | 5000 | |
| **உற்பத்தி கோப்புகளை தயாரித்தல்**<br>கருவாடு/புகையூட்டிய கருவாடு/உப்பிடப்பட கருவாடு<br>கரும்பு வெல்லம்<br>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் பொருள்கோ | | 01<br>01<br>01 | |
| **வெளியீடுகளின் திரட்டு**<br>• IDB கையேடு<br>• அந்தூரியம் வளர்ப்பு<br>• தபாலுறை தயாரிப்பு<br>• வெதுப்பி உற்பத்திப் பொதி<br>• பால் மற்றும் பால் உற்பத்திகள் பொதி<br>• செய்தி மடல்<br>• IDB ஊழியர்களுக்கான பெயரட்டை தயாரிப்பு<br>• ஐகத்தொழில் விபரக் கொத்திற்கான கம்பனி விபரங்களை திருத்தம் செய்தல் | கையேடுகளின் எண்ணிக்கை<br>சிற்றேடுகளின் எண்ணிக்கை<br>சிற்றேடுகளின் எண்ணிக்கை<br>பொதிகளின் எண்ணிக்கை<br>பொதிகளின் எண்ணிக்கை<br>பிரதிகளின் எண்ணிக்கை<br>அட்டைகளின் எண்ணிக்கை<br>கம்பனி அட்டைகளின் எண்ணிக்கை | 01<br>01<br>01<br>01<br>01<br>01<br>60<br>58 | |
| **செயலமர்வுகளை ஒழுங்குசெய்தல்**<br>உணவு பாதுகாப்பு மற்றும் உணவு உற்பத்திகளுக்கான விதிகளும் நிபந்தனைகளும். | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | 30 | |



2014 ஆம் ஆண்டு தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவை நிலையத்தினால் பயிற்றுவிக்கப்பட்டனர்.



2014 ஆம் ஆண்டு ஹிக்குரக்கொட சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆக்கவிளைவு விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் புகைப்படங்கள்



2014 ஆம் ஆண்டு மகாவலி வெலஓய பிரதேசத்தில் நடாத்தப்பட்ட கட்டி நிருமாணப் பயிற்சியின் புகைப்படம்

## 4.8 தொழில்நுட்ப சேவைப் பிரிவு

**பொது**

இலங்கையிலுள்ள கைத்தொழில் சமுதாயத்தின் தொழில்நுட்பத் தேவையினை நிறைவேற்றுகின்ற தொழில்நுட்ப சேவைப் பிரிவு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முக்கியமானதொரு பிரிவுகளில் ஒன்றாகும். தொழில்முயற்சியாளர்களுக்கு தங்களது தொழில்முயற்சியாளர்களை திட்டமிடுதல் ஊடாக தொடக்கம் முதல் நடைமுறைப்படுத்தல் வரையிலான கட்டங்களிலும் ஏற்கனவேயுள்ள தொழில்முயற்சிகளை விரிவாக்குதற்கும், நவீனமயப்படுததுவதற்கும் பல்வகைப்படுத்துவதற்கும் தரம் மற்றும் விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் தேவையான தொழில்நுட்ப உதவிகளை பெற்றுத்தருதல் தொழில்நுட்ப சேவைப்பிரிவின் அடிப்படை நோக்கமாகும். தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் மூலம் உணவு இரசாயணப் பொருட்கள், எண்ணெய் மற்றும் நார், கட்டிடப்பொருட்கள், கணினித் தொழில்நுட்பம் சார்ந்தாக ஐந்து துணைப் பிரவுகள் மூலம் சேவைகள் வழங்கப்படுகின்றன. தொழில்நுட்ப உதவி வழங்குதல் பிரதானமாக நன்கு திட்டமிடப்பட்ட பிரயோக பகுதியொன்றுடன் கூடிய தொழில்நுட்பத்தை வழங்கும் ஒரு நாள் செயலமர்வின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் கல்வியல் கல்லூரி ஊடாகவும் மேற்படி துறைகள் உள்வாங்கப்படும் வகையில் பல சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

**செயலாற்றுகை அடைவுகள்**

தொழில்நுட்பப் சேவைப் பிரிவினால் 2014 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு

(1) நடாத்தப்பட்ட கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப செய்முறை விளக்கங்கள் மற்றும் செயலரங்குகள்

- தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகள்

  தொழில்நுட்ப சேவைப் பிரிவின் பணியாட்டொகுதியின் கைத்தொழில் நிபுணர்கள் மற்றும் பல்கலைக்கழக கல்விசார் பணியாட்டொகுதியுடன் இணைந்து தொழில்நுட்ப சேவைப் பிரிவில் உணவு, இராசயணப்பொருட்டகள், எண்ணெய் மற்றும் நார், கட்டிடப் பொருட்கள் மற்றும் பெற்றொலியம் போன்ற துணைப் பிரிவுகளின் கீழ் தொழில்நுட்பத்தை வழங்கும் 68 வேலையரங்குகள் மற்றும் 39 செய்முறை விளக்கம் நடாத்தப்பட்டதுடன் மேற்படி செயலமர்வுகள் மற்றும் செய்முறை விளக்கம் ஊடாக ஒட்டுமொத்தமாக 2093 தொழில்முயற்சியாளர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் பயிற்சி மற்றும் ஒத்துழைப்பு வழங்கி ரூ. 3,185,344.00 பணத்தொகை ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளது. தொழில்நுட்ப சேவைப் பிரிவு 2014 ஆம் ஆண்டிற்குள் தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகள்/செய்முறை விளக்கங்கள் ஊடாக பின்வரும் தொழில்நுட்பங்களை வழங்கியுள்ளன.

**கட்டிடப்பொருட்கள் மற்றும் கனிப்பொருட்கள்**

- இழைக்கண்ணாடி பொருத்தப்பட்ட பிளாஸ்டிக் தொழில்நுட்பம்
- சீமெந்து பூச்சாடி
- சீமெந்து கற்கள்
- கொங்கிறீட் பாவுக்கற்கள்
- சீமெந்தினால் நிலைப்படுத்தப்பட்ட களிமண் கற்கள்
- களிமண்ணிலான பொருட்கள்

**உணவு வகைகள்.**

- உடனடி பழரசம்
- பழப்பாகு
- கோடியல்
- சட்னி
- யோகட்
- இனிப்புகள்
- நீர்நீக்கப்பட்ட மரக்கறி
- ஜெலி கட்டிகள்
- வாசனைப் பொருட்கள் தயாரிப்பு தொழில்நுட்பம்
- ஊறுகாய்
- உணவு பாதுகாப்பு மற்றும் பொதியிடல்
- பேக்கரி உற்பத்திகள்
- இனிப்புப் பண்டம்
- வாழை வற்றல்
- காளாண் வளர்ப்பு
- சுளைப் புளி பசை
- கடுகு பசை
- புளி செறிவுப் பசை
- புதிய வெட்டப்பட்ட மரக்கறி
- தானிய உற்பத்தி தொழில்நுட்பம்
- அப்பளம்
- நொறுக்கு தீனி (பைட் மற்றும் மிக்ஷர்)
- மிளகாய் பேஸ்ட் மற்றும் மாசி சம்பல்

**இராசயனப் பொருட்கள் பிரிவு**

- போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர்
- கிருமிநீக்கி தொழில்நுட்பம்
- மெழுகுவர்த்தி மற்றும் அலங்கார மெழுகுவர்த்தி
- ஊதுபத்தி
- மென்மையாக்கி மற்றும் டர்பர்டைன்
- மரப் பாதுகாப்புத் திரவம்
- கற்பூர வில்லைகள்

**எண்ணெய் மற்றும் இழைநார்:**

- மென் பலகைச் சிகிச்சை
- அப்பியாசக் கொப்பிகள்
- தபாலுறைகள
- சலவை சோப்
- காகித மீள் சுழற்சியும் கையால் தயாரிக்கப்பட்ட காகிதமும்

**கணினி தொழில்நுட்பம்:**

- கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு

**(2) கைத்தொழிலாளர்களின் தேவைக்கேற்ப வழங்கப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

தொழில்நுட்ப சேவைப் பிரிவின் பணியாட்டொகுதி பாணந்துரையில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட சீ,டீ. த பொன்சேகா அன்ட சன்ஸ் கம்பனிக்கு சென்று சோஸ் வடிகட்டும் செயன்முறையின் வினைத்திறனை முன்னேற்றிக்கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்கியது.

**(3) இலங்கையில் செங்கல் மற்றும் ஓடு கைத்தொழிலுக்கான தொழில்நுட்பத்தை விருத்தியாக்கும் நிகழ்ச்சித்திட்டம்.**

இந்தியாவின் விஜயபிரகாஷ் இன்டஸ்ரியல் கம்பனியின் பிரதிநிதிகளின் உதவியுடன் 2014 யூன் மாதம் 28 ஆம் திகதி வைக்கால், தொப்புதொட்ட அகில இலங்கை களி மண் கூரை ஓடு உற்பத்தியாளர்களின் சங்கத்திற்கு இலங்கையில் செங்கல் மற்றும் ஓடு கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்பம் பற்றி சமர்ப்பணமொன்று மேற்கொள்ளப்பட்டது.

**(4) உணவு பாதுகாப்பு மற்றும் பொதியிடல் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்சித்திட்டம்.**

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட அலுவலகங்களின் உதவியுடன் 91 தொழில்முயற்சியாளர்களுக்கு “உணவு பாதுகாப்பு மற்றும் பொதியிடல்” பற்றி விழிப்புணர்வூட்டும் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் அனுசரணையுடன்

நடாத்தப்பட்ட மேற்படி இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் "Pro-Food Pro-Pack – 2014" இற்கான முன்னோடி ஒழுங்குபடுத்தலாக நடாத்தப்பட்டது.

### (5) வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கொழும்பு மாவட்ட அலுவலகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் பயனாளிகளுக்காக 2014 செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி நடாத்தப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சிததிட்டத்திற்கு வளவாளர்களாக தொழில்நுட்ப பிரிவின் பணியாட்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பாற்பண்ணை தொழில்நுட்பம் வேல்டிங் தொழில்நுட்பம், கட்டுமாண வேலை தொழில்நுட்பம், நிறப்பூச்சு மற்றும் மின் வேலை போன்ற வாழ்வாதார பிரிவுகளின் கீழ் நடாத்தப்பட்டது.

### (6) பிரதேச அபிவிருத்தி பிரிவுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்ட அலுவலகத்தின் உதவியுடன் ஐந்து பயிற்சி நிகழ்சசித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. – மட்டக்களப்பு மாவட்டத்தின் களி மண் கைத்தொழில் (களிமண் திரவ ஒட்டுதல்) பற்றிய நிகழ்ச்சித்திடடமொன்றும் யாழ்ப்பாண மாவட்ட இழைக்ண்ணாடி தொழில்நுட்பம் பற்றிய நிகழ்ச்சித்திட்டமும் புத்தளம் மாவட்டத்தின் கற்பூர வில்லை கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டமொன்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி மற்றும் ஏறாவூர் ஆகிய நகரங்களில் சவர்க்கார உற்பத்தி, ஊதுபத்தி உற்பத்தி, மெழுகுவர்த்தி உற்பத்தி மற்றும் கற்பூர வில்லை உற்பத்தி தொடர்பான இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பயிற்சி வழங்கப்பட்ட நாடளாவிய தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை 128 ஆகும்.

### (7) சான்றழிப்பினை பெற்றுக்கொள்வதற்கான ஒத்துழைப்பு

பின்வரும் கைத்தொழில் நிறுவனங்களுக்கு ISO 22000 (உணவு பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை) சான்றிதழையும் இலங்கை தரச் சான்றிதழையும் (SLS) பெற்றுக்கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சுடன் இணைந்து தொழில்நுட்ப சேவைப் பிரிவின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

* பொகொன்ஸ் கெனரிஸ், இல 10, பங்களா வீதி, பேருவலை - (ISO 22000)
    * செலென்ஜ் புட் புரடக்ட்ஸ், மல்வத்த, கொடகவெல - (SLS)
    * நெல்கோ புட் புரடக்ட்ஸ், மல்வத்த, கொடகவெல - ( ISO 22000)

**(8) கணினி வன்பாக வலைப்பின்னல் முறைமையாக்கும் பாடநெறி (03 மாதம், மூழு நேர)**

2014 ஆம் ஆண்டில் 20 மாணவர்களுக்கு கணினி வன்பாக மற்றும் வலைப்பின்ளல் உருவாக்கம் பற்றிய பாடநெறியொன்றை நடாத்தப்பட்டது.

(9) **SMIDEX 2014 – கைத்தொழில் கண்காட்சி**

தொழில்நுட்ப சேவைகள் பிரிவு கைத்தொழில் அபிவிருத்தி சபை ஒழுங்குசெய்த மேற்படி **(SMIDEX 2014)**கண்காட்சியில் கலந்துகொண்டு பின்வரும் விடயங்களை ஈடேற்றியது.

- ✓ இந்திய பிரதிநிதித்துவக் குழுவின் ஒத்துழைப்புடன் தொழில்நுட்ப சமர்ப்பணங்களை ஒழுங்குசெய்தல்
- ✓ இந்தியாவின் மூங்கில் மற்றும் பிரம்பு கைத்தொழிலுக்கான சர்வதேச அலுவலகம் () பணிப்பாளர் மற்றும் தென் ஆசியாவின் மூங்கில் மற்றும் பிரம்பு கைத்தொழிலுக்கான சர்வதேச அலுவலகம் () பிராந்திய ஒருங்கிணைப்பாளர் திரு.வீ.பீ சுப்ரமணி அவர்களினால் சமர்ப்பணம் செய்யப்பட்ட மூங்கில் கைத்தொழிலுள்ள தொழில்நுட்ப பொருளாதார வாய்ப்பு வளங்கள் பற்றிய சமர்ப்பணம்.
- ✓ இந்தியாவின் விஜயபிரகாஷ் இன்ட்ஸ்றீயல்ஸ் கம்பனி பாபு அபார்த், ஜோர்ஜ் மெத்திவ்ஸ் மற்றும் கே.கே விஜயன் ஆகியவர்களினால் சமர்ப்பணம் செய்யப்பட்ட செங்கல் மற்றும் ஓடு கைத்தொழில்களின் தொழில்நுட்பத்தை விருத்திசெய்தல் பற்றி சமர்ப்பணம் செய்தல்.
- ✓ கண்காட்சியில் கைத்தொழலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் புத்தாக்கம், புதிய உற்பத்தி மற்றும் புதிய தொழில்நுட்பம்ஆகியவற்றை காட்சிப்படுத்துதல்
- ✓ இக்கண்காட்சியின் போது கைகளினாலான கடதாசி, சலவைச் சவர்க்காரம், மெழுகுவர்த்தி, சீமெந்திலான அலங்காரப் பொருட்கள், தேங்காய் பால் பொதியிடல் பற்றிய தொழில்நுட்பம் போன்றவற்றை வழங்குவதற்கு செய்முறை விளக்க நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.
- ✓ அரச மற்றும் தனியார் துறைகளில் தாபன ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல்.

## 4.9 இறப்பர் உற்பத்தி விருத்தி மற்றும் சேவைகள் நிலையம்

இறப்பர் சார்ந்த உள்நாட்டு கைத்தொழில்களுக்காக குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு உலக வங்கியின் வழிகாட்டலின் கீழ் நிதிசார் ஒத்துழைப்பின் அடிப்படையில் 1980 ஆம் ஆண்டு இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் பேலியாகொடையில் தாபிக்கப்பட்டது. அது முதல் இந்நிலையத்தின் மூலம் உள்நாட்டு இறப்பர் உற்பத்தி கைத்தொழிலாளர்களுக்கு சேவை வழங்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள இந்நிலையத்தின் நிரந்தர நுகர்வோர்களாகிய சுமார் 200 கைத்தொழிலாளர்கள் உள்ளதுடன் இவர்கள் இந்நிலையத்திலிருந்து பின்வரும் சேவைகளை பெற்றுக்கொள்கின்றனர்.

- தொழில்நுட்ப மதியுரை மற்றும் விரிவாக்கல் சேவைகள்
- உற்பத்தி மற்றும் செயன்முறை விருத்தி
- பரிசோதனை மற்றும் தரத்தை உறுதிப்படுத்துதல்
- பாதியளவு வணிக சேவைகளை வழங்குதல்
- புதிய சந்தை தேவைகளுக்கு திசைமுகப்படுத்திக்கொள்ளுதல்
- கற்றல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் பொதுவாக கைத்தொழில்களுக்கிடையில் ஒருங்கிணைப்பாளராக செயற்படுதல்

**இத்துறையில் 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை பின்வருமாறு.**

**அட்டவணை 4.9.1 – இறப்பர் உற்பத்தி விருத்தி மற்றும் சேவைகள் நிலையத்தின் செயலாற்றுகை**

| தாபனக் குறிக்கோள் | தாபனக் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | | குறிகாட்டிகள் | அடைவு |
|---|---|---|---|---|
| **G1a** கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 9 | புதிய கைத்தொழில்கள், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தைதொழில்களை தாபித்து நடைமுறைப்படுத்தல் | அலகுகளின் எண்ணிக்கை | *4* |
| | 10 | ஏற்கனவேயுள்ள கைத்தொழில்கள்/நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் அபிவிருத்தி சபைதொழில்களை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | அலகுகளின் எண்ணிக்கை | 33 |

| தாபனக் குறிக்கோள் | | தாபனக் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | அடைவு |
|---|---|---|---|---|
| **G1a** கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 12/14 | தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத்தை வழங்கும நிகழ்ச்சித்திட்டங்கள், செய்முறை மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்; மின்னஞ்சல்/ஊடகம் மற்றும் இணையத்தளம்/பொது பகுதிகள் ஊடாக வழங்கப்பட்ட சேவைகளை மேம்படுத்துதல் | | |
| | (i) | தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | *22* |
| | (ii) | பயிற்சிபெறுனர்களின் தேவைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 0*2* |
| **G1b.** தொழில்முயற்சியாளர்களை பயற்றுவித்தல், விருத்தி செய்தல் மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல் | **7.** | தொழில்முயற்சியாளர்களுக்கான சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம், நிதி, முகாமைத்துவம், உற்பத்தி ஆகியவை பற்றிய மதியுரை மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் | | |
| | (i) | தொழிலுநுட்ப உதவி மற்றும் மதியுரை | தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை | **42** |
| **G9.** முலதனம், கடன், சந்தைப்படுத்தல், முகாமைத்துவ மற்றும் ஏனைய தொழில்நுட்ப வசதிகள், சட்ட ஆலோசனைகளை வழங்குதல் உள்ளிட்ட கைத்தொழில் அபிவிருத்தி தொழில்முயற்சிகளுக்கு தேவையான அனைத்து சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல் | **4.** | இறப்பர் உற்பத்தி மற்றும் கலவை விருத்தியாக்கல் வசதிகளை வழங்குதல் | | |
| | (i) | உற்பத்தி மற்றும் செயன்முறைகளை மேம்படுத்துதல் | வேலை எண்ணிக்கை | *03* |
| | | | கைத்தொழில்களின் எண்ணிக்கை | *12* |
| | (ii) | துணை ஒப்பந்த அனுப்பற் கட்டளைகளுக்கான வசதிகளை வழங்குதல் | வேலை அனுப்பற் கட்டளைகளின் எண்ணிக்கை | *6* |
| | (iii) | தரப் பரிசோதனை மற்றும் சான்றளித்தல்களை வழங்குதல் | சான்றளித்தல்களின் எண்ணிக்கை | *129* |
| | | | பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | *1564* |
| | | | சேவைகள் வழங்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | *12* |
| | Iv | இறப்பர் பொருள் உற்பத்திசெய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | உற்பத்திகளின் எண்ணிக்கை | *14* |
| | v | இறப்பர் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் | உற்பத்திகளின் எண்ணிக்கை | *02* |

இறப்பர் உற்பத்தி விருத்தி மற்றும் சேவைகள் நிலையத்தின் அனைத்து வருமான ஈட்டல் செயற்பாடுகளின் மூலமும் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.9.2 – இறப்பர் உற்பத்தி விருத்தி மற்றும சேவைகள் நிலையத்தின் வருமானம்**

| தாபனத்தின் குறிக்கோள் | வருமான ஈட்டல், முலப்பொருட்களை பதனிடலும் வழங்குதலும், மாதிரி பரிசோதனை, மற்றும் சான்றளித்தல், பாதியளவு முடிவுப்பொருட்கள் மற்றும் முடிவுப்பொருட்கள் போன்றவை | | அளவு | வருமானம் (ரூ.) |
|---|---|---|---|---|
| **G1a.12, 14, 25, G9.4, 9.5,** மற்றும் **G.13.2, 13.3, 13.4** முலதனம், கடன், சந்தைப்படுத்தல், முகாமைத்துவ மற்றும் ஏனைய தொழில்நுட்ப வசதிகள், சட்ட ஆலோசனைகளை வழங்குதல் உள்ளிட்ட கைத்தொழில் அபிவிருத்தி தொழில்முயற்சிகளுக்கு தேவையான அனைத்து சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல் | (i) | இறப்பர் கலவை பதனிடல் மற்றும் வழங்கல் | கி.கிராம் 35,498 | 16,882,280 |
| | (ii) | இறப்பர் கலவைகளை அரைத்தல் | கி.கி 17,231 | 254,979 |
| | (iii) | மையநீக்கம் செய்யப்பட்ட இறப்பர் பால் மற்றும் கலவைகள் | லீற்றல் 9,008 | 2,889,922 |
| | (iv) | துணை ஒப்பந்தங்களை வழங்குதல் | 06 | 1,009,474 |
| | (v) | தரக்கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக்கூட பரிசோதனைகள் | | |
| | | சான்றிதழ்களை வழங்குதல் | 129 | 300,008 |
| | | உற்பத்தி மாதிரிகளை பரிசோதித்தல் | 1,564 | |
(இ) 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 8.2 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் பஸ்வண்டி பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கழிவுப் பொருட்களை எடுத்துச்செல்வதற்காக சபைக்குச் சொந்தமாக வாகனங்கள் இருக்கும் போதும் வாடகை வாகனத்தைப் பயன்படுத்தியதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 492,855 தொகையான மேலதிகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தேவைப்பாட்டினை கவனத்தில் கொள்ளாது இரண்டு நிறுவனங்களிடமிருந்து தொலைபேசி மற்றும் இணையதள வசதிகளைப் பெற்றுக் கொண்டதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,085,250 தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன் இலங்கை டெலிகொம் நிறுவனத்திடமிருந்து இணையத்தள வசதிகளைப் பெற்றுக் கொண்டு அதற்காக ரூபா 283,125 தொகை மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபையில் சட்ட உத்தயோகத்தர் ஒருவர் சேவையில் ஈடுபட்டிருக்கையில் சட்டச் செலவுகளுக்காக ரூபா 158,500 தொகை மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது.

4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 714 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 500 மாத்திரமாக இருந்ததனால் 214 பதவியணியினர் வெற்றிடமாகக் காணப்பட்டது. இவற்றினுள்ளே பிரதிப்பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 11 ஆக இருந்த போதிலும் அதில் 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. அவ்வாறே சபையின் பிரதான குறிக்கோள் மற்றும் செயற்பாட்டுச் செயலாற்றல் தொடர்பாக நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சிரேஷ்ட வணிக மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிகளில் 67 சதவீதமானவை வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) வெற்றிடமான பதவிகளுக்கு பதிற்கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு அதற்காக மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 1,039,748 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் விசாரணை செய்யாது சபையின் தலைவரது ஆலோசனை மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவிநிலை உத்தியோகத்தர்களின் சம்பளங்களில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இலக்கம் 30 இன் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட பதவியுயர்வுகளுக்காக முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கு சபை தவறியிருந்ததுடன் உரிய சம்பள படிநிலை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாததன்

காரணமாக பிழையான சம்பள கணிப்பின் மூலம் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை மாத்திரம் இரண்டு ஊழியர் குழுக்களுக்கு முறையே ரூபா 6,268,931 மற்றும் ரூபா 1,222,589 தொகைகள் மிகையாகவும் குறைத்தும் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

4.7 வாகனப் பயன்பாடு

மீளாய்வாண்டின் போது சபையின் தலைவருக்கு மேலதிக வாகனங்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக சாரதி ஒருவரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததன் காரணமாக சம்பளம், மேலதிக நேர வேலை மற்றும் பிரயாணச் செலவுகளாக ரூபா 608,076 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 இன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து அரசாங்க கூட்டுத்தாபனங்கள் சம்பந்தமாக வரைபு மற்றும் வருடாந்த அறிக்கைகளும் கணக்குகளும், நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் சபையினால் 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 18 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5.2 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி பல ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்பட்டது. அவ்வாறே எந்த ஒரு ஆண்டிற்குமான உள்ளகக் கணக்காய்வுத் திட்டமானது அந்த ஆண்டின் சனவரி 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அங்கீகரிக்கப்படவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் உரிய கணக்காய்வு ஐயவினாக்களும் முறைப்படியாக சபையின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

5.3 கொள்வனவு நடவடிக்கைகள்

சபையின் ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 555,988 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட பாதணிகள் மாதிரிகளுக்கு முரணாக இருந்ததுடன் வழங்கப்பட்ட பாதணிகள் பாவனைக்குப் பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டது.

5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகளையும் உள்ளபடியான செலவுகளையும் ஒப்பீடுசெய்த போது 12 விடயங்களில் மதிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சியுள்ள வீச்சானது 117 சதவீதத்திலிருந்து 4,022 சதவீதம் வரையாகக் காணப்பட்டது. செலவுக் கட்டுப்பாட்டின் பலவீனத்தைப் போல மதிப்பீடு செய்தலின் பலவீனமும் காரணமாகவே பாதீடானது சபையின் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

5.5 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2014 நவம்பர் 19 ஆந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் கணக்காய்வுத் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | ஆளணி நிர்வாகம் | ஆளணியினர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | கணக்கீடு | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை. |
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயல்முன்னேற்றங்களை அறிக்கையிடுதல் | செயல்முன்னேற்றங்களை நாளதுவரையாகத் தயாரிக்காமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டினைத் தயாரிக்கும் போது செலவுகள் தொடர்பாக சரியாக மதிப்பீடு செய்யாமை. |

| | | |
|---|---|---|
| (உ) | கொள்வனவு நடவடிக்கைகள் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகளை கவனத்தில் கொள்ளாமையும் மாதிரிகளுக்கு முரணாக பொருட்களைக் கொள்வனவு செய்தலும். |
| (ஊ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | கொள்வனவு செய்தல், பயன்படுத்துதல், ஆவணப்படுத்துதல் என்பன முறைப்படியாக இடம்பெறாமை. |

டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

615, ගාලු පාර, කටුබැද්ද, මොරටුව, ශ්‍රී ලංකා.
615, காலி வீதி, கட்டுபெத்தை, மொரட்டுவ, இலங்கை.
615, Galle Road, Katubedda, Moratuwa. Sri Lanka.
Tel : +94-11-2605394,2624846-7,2605326-7
Fax : +94-11-2607002
E-mail : info@idb.gov.lk Web : www.idb.gov.lk

**2014**

**1971 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடு இல. 38 இன் 14(2) (சி) பிரிவின் கீழான கணக்காளர் நாயகத்தின் அறிக்கை.**

**கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு விளக்கமளிப்பதற்கு அடிப்படையாகவமைந்த பந்திகளுக்கான தீர்வுகளும் நடப்பு நிலவரமும்**

2.2 நிதிக் கூற்றுக்கள் பற்றி கருத்துரைத்தல்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 29 இற்கு அமைவாக லக்கம் விற்பனைப் பிரிவின் வருமானம் 2014 ஆம் ஆண்டுக்காக அட்டுறு அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டு நாளேட்டுக் குறிப்புகள் உள்ளடக்கப்பட்டன (சேஜ் 87959, 87760) 2015 ஜூன் மாதம் முதல் லக்கம் விற்பனைப் பிரிவின் வருமானம் விற்பனை நிகழும் சந்தர்ப்பத்திலேயே கணக்கில் பதியப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19 இற்கு அமைவாக ஆயுட்கால பெறுமதி அடிப்படையில் பணிக்கொடை ஒதுக்கங்களுக்கு ஏற்புடைய அடிப்படை எடுகோள்கள் சம்பள ஏற்ற விகிதம் மற்றும் வட்டி விகிதம் 5% மற்றும் 7% எனும் வகையில் சீர் செய்யப்பட்டு அதற்கு ஏற்ப பின்வருமாறு கணக்குகள் சீராக்கம் செய்யப்பட்டன.

| | கணிப்பிடப்பட்ட பெறுமானம் | எடுகோள்கள் மாற்றமடைந்தமைக்கு ஏற்ப பெறுமானம் | வித்தியாசம் |
|---|---|---|---|
| ஆண்டிற்கான அறவீடுகள் | 6,627,285/- | 6,627,285/- | - |
| வட்டி | 13,523,439/- | 6,950,372/- | 6,573,006/- |
| 2014.12.31 ஆம் திகதியில் மீதி | 100,402,173/- | 100,935,508/- | 6,665/- |
| மிகை | 19,667,861/- | 19,111,458/- | 6,566,401/- |

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 02 இற்கு அமைவாக கிரயம் மற்றும் நிகரத் தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைவான பெறுமானமாக அமையும் கிரயத்தின் மீது இருப்புப் பெறுமானம் காட்டப்பட்டுள்ளது. பணவீக்கத்தின் காரணமாக விலை மட்டங்கள் உயர்வடைந்தமையினால் கிரயம் குறைந்த பெறுமானத்தைக் கொள்வதால் நிகரத் தேறிய பெறுமானம் பயன்படுத்திக்கொள்ளப்படவில்லை.

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 16 இற்கு அமைவாக, எஞ்சிய மூலதனச் சொத்துக்கள் மீள் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டுவருவதுடன், 2015 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது இப்பணிகளை நிறைவுசெய்து நிதிக் கூற்றுக்களுக்கு மீள் கணிப்பீட்டுப் பெறுமானம் உள்ளடக்கப்படும்.

(உ) ரூபா. 941,908,020.46 மீள் கணிப்பீட்டு இலாபம் முழு மொத்த வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டது (சேஜ் 88192, 88203).

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆண்டிற்குள் விற்பனை செய்யப்பட்ட பத்து வாகனங்களுக்கு ஏதுவான விற்பனை இலாபமும் இவ்வாகனங்களின் மீள் கணிப்பு மிகையும் நிலையான சொத்துக்களின் விற்பனைத் தலைப்பின் கீழ் கணக்கில் பதியப்பட்டிருந்ததுடன், நாளேட்டுக் குறிப்புகளும் உள்ளடக்கப்பட்டு வாகனங்களின் விற்பனை இலாபம் மற்றும் விற்பனை செய்யப்பட்ட வாகனங்களின் மீள் கணிப்பு மிகையும் புறம்பாக கணக்கில் பதியப்பட்டன.

(ஆ) வாகன விற்பனையின் மூலம் கிடைத்த ரூபா. 3,230,102/- நிதிப் பாய்வுக் கூற்றில் உள்ளடக்கப்பட்டது.

(இ) விற்பனை செய்யப்பட்ட வாகனங்களில் மீள் கணிப்பீட்டு மிகை நிலையான சொத்துக்கள் விற்பனைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன், அவ்வாறாக மாற்றப்பட்ட ரூபா. 2,339,112/- அகற்றி புறம்பான கணக்கு உள்ளடக்கப்பட்டது (சேச் 87970, 87971)

(ஈ) வாகனங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற புதுப்பித்தல் நடவடிக்கைகளும் சேர்த்தலும் கணக்கில் பதியப்படல் சம்பந்தமாக திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட அட்டவணைகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(உ) வாகன விற்பனைகளைக் கணக்கில் பதியும் போது வட் வரி சம்பந்தமாக கணக்கில் பதியப்படும் போது நிகழவிருந்த கணக்கீட்டுத் தவறுகள் திருத்தப்பட்டன (சேச் 87972, 87973).

(ஊ) வாகன அட்டவணை மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களுடன் கூடியவாறு திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

(எ) முந்திய கொடுப்பனவுகளுக்கான செலுத்தித் தீர்த்தல் ரசீதுகள் சமர்ப்பிக்கப்படக்கூடிய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அவை தீர்க்கப்பட்டு திருத்தப்பட்டவாறான நிதிக்கூற்றுக்களில் மீதி ரூபா 56,572,130.29 முதல் ரூபா 29,991,069.97 வரை குறைக்கப்பட்டுள்ளது. பழைய மீதி ஆய்வுக்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக்குழுவின் அவதானிப்புகளில் உள்ளடங்கியுள்ள தீர்க்கப்படாத, ஆயினும் பொருட்கள் மற்றும் சேவைகள் சபைக்குக் கிடைக்கப்பெற்று தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள

கொடுக்கல் வாங்கல்கள் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு தேவையான திருத்தங்கள் 2015 ஆம் ஆண்டின் கணக்குகளில் மேற்கொள்ளப்படும்.

(ஏ) நிதிக்கூற்றுக்களில் பலதரப்பட்ட சொத்துக்களின் கீழ் உள்ள ரூபா 10,966,554/- மீதி ரூபா 4,120,847,45/- வரை குறைக்கப்பட்டு திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டன.

i. பலதரப்பட்ட சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் பலதரப்பட்ட சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது. கணக்காய்வுக்காக அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ii. நூகப் புத்தகங்கள், இயந்திர உபகரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் தலைப்பில் உள்ளடக்கப்படவேண்டிய சொத்துக்கள் பலதரப்பட்ட சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டு திருத்தப்பட்டது. கணக்காய்வுக்காக அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ) ரூபா 21,357,137/- பெறுமதி ஜெய்கா கருத்திட்டச் சொத்துக்களுக்கானதாக அமைவதுடன், இச்சொத்துக்கள் பூச்சியப் பெறுமானத்தைக் கொண்டிருப்பதால் 2006 ஆம் ஆண்டிலிருந்து அட்டவணையில் சமர்ப்பிக்கப்படவில்லை. 2014 ஆம் ஆண்டிற்காக மீண்டும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மீள் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு நியாயப் பெறுமானம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஒ) கணினி மற்றும் உதிரிப்பாகங்களைக் கொள்வனவுசெய்த ஆண்டுகள் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு முதல் வருடம், மாதம் மற்றும் திகதி உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஓ) கணினி மென்பாக முறைமை 2004, 2005 ஆம் ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டு 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். 2007.12.31 ஆம் திகதியென இது காட்டப்பட்டுள்ளது. தற்போது பெறுமதி பூச்சியமாக அமைந்துள்ள இந்தச் சொத்து மீள் கணிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டு நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும்.

(க) மீள் கணிப்பீட்டுக் கணக்குகள் சரியானவையாகும். அட்டவணையில் காட்டப்பட்டிருந்த கூட்டுவதில் ஏற்பட்டிருந்த தவறுகள் திருத்தப்பட்டு மீள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ச) 2013 ஆம் ஆண்டு திருத்தப்பட்டவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற காசுப்பாய்வுக் கூற்று மற்றும் 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற 2013 ஆம் ஆண்டுக்கான காசுப்பாய்வுக் கூற்று ஆகியவற்றுக்கிடையில் வித்தியாசங்கள் ஏற்படுவதற்கான காரணம் வருமானக் கூற்றுக்கு எதிரீடு செய்யப்பட்ட மூலதன ஒதுக்கங்கத்தின் அளவு மீள தேறிய விளைவிற்கு சீராக்கம் செய்யப்பட்டமையாகும். இது நிதிக்கூற்றுக்களில் 24 ஆம் இலக்கப் பக்கத்தில் 25 ஆம் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

### 2.2.3 வருமதியாகவுள்ள மற்றும் சென்மதியாகவுள்ள கணக்குகள்

(அ) தீர்க்கப்படாதுள்ள எரிபொருள் முற்பணம் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரூபா. 235,562.00 மீதியாகவிருந்ததுடன், 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அனைத்து முற்பணங்களும் தீர்க்கப்பட்டுள்ளன. பழைய மீதிகளைத் தீர்ப்பதற்காக பெயரிடப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காளர் உள்ளிட்ட குழு தயாரித்த அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு இந்தப் பழைய மீதிகளைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) வருமதியாகவுள்ள வைப்பீடுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 5,004,925/- மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளவைகளாக நீர் வழங்கல், மின் வழங்கல், கட்டிடங்களைப் பாவனைக்கு எடுத்தல், பல்வேறு சேவைகளுக்காக வைப்பீடாக வழங்கப்பட்ட பணம் ஆகியவை உள்ளடங்கியுள்ளன. இச்சேவைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இந்த மீதிகள் தீர்க்கப்படாமையின் காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது. 2014 திருத்தப்பட்டவாறன நிதிக்கூற்றுகளில் இந்த மீதி ரூபா 3,004,925/- ஆக குறைக்கப்பட்டுள்ளது.

(இ) கழிவுப் பொருட்கள் கருத்திட்டத்திற்கு ஏதுவான ரூபா 2,000,000/- வைப்பீடு முன் கொடுப்பனவு கணக்கிற்கு மாற்றப்பட்டது. ஆண்டிற்குள் வைப்பீடாக எஞ்சியிருந்த பணத்தில் ரூபா 150,000/- முன்செலுத்தப்பட்டதாக இனங்காணப்பட்டாலும், அது பின்னர் வாடகைக்கு எதிரீடு செய்யப்படாததனால் வைப்பீடாக கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(ஈ) 2013 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கணக்கறிக்கைகள் 2015.01.21 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டதுடன், 2014 கணக்கறிக்கைகள் 2015.03.17 ஆம் திகதி கையளிக்கப்பட்டன. இக்காலகட்டம் சேவை இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகளை சீராக்கல் செய்வதற்கும் பழைய மீதியினை தீர்ப்பதற்கும் போதுமானதாக அமையவில்லை. 2015 ஆம் ஆண்டு பழைய மீதியினை தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து இந்த மீதியுடன் சேவை இழப்புக்கான ஒதுக்கீடுகள் கணக்கினைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(உ) 2014.12.31 ஆம் திகதியில் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட முன்கொடுப்பனவு ரூபா 56,572,130/- மீதியினை தீர்த்தல் உள்ளிட்ட ரூபா 29,991,069.97 வரை குறைக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு வழங்கல் பிரிவினூடாக வழங்கப்பட்ட முற்பணத்தில் ரூபா 246,675.51 மாத்திரம் தீர்க்கப்படவுள்ளது.

| | | |
|---|---|---|
| i. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் 50 வீத முற்பணம் | ரூ. 122,133.93 | 2015 செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளது |
| ii. இலங்கை மின்சார தனியார் கம்பனி | ரூ. 9,487.18 | |
| iii. சதாசரண மோட்டார் கிராமங்கள் | ரூ. 61,174.40 | |
| iv. புத்தினி ஒட்டோ ரேடர்ஸ் Spare parts 60/7463 | ரூ. 33,880.00 | |
| | ரூ. 246,675.51 | |

கழிவுக் கருத்திட்டத்தின் 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட முற்பணத்தில் ரூபா 9,473,240.58 மாத்திரம் எஞ்சியிருக்கின்ற தொகையாக அமைகின்றது. இந்த முற்பணத்தையும் 2015 ஆம் ஆண்டில் செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்ப கைத்தொழில் பேட்டைகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளைப் பெற்றுக்கொண்டு கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கைத்தொழிலாளர்களிடமிருந்து 2014.12.31 ஆம் திகதியில் ரூபா 33,129,822/- பணத்தொகை அறவிடப்படவேண்டியுள்ள மீதியாகக் காட்டப்பட்டுள்ளதாயினும் கைத்தொழில் பேட்டைத் துறையின் அறிக்கைகளுக்கு ஏற்ப ரூபா 21,821,457/- எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கேற்ப வித்தியாசம் ரூபா 11,307,861/-. இந்த வித்தியாசத்திற்கு பின்வரும் காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன.

i. வாடகையினைச் செலுத்தத் தவறி வழக்குத் தொடரப்பட்டுள்ள கடன்பட்டோர் மீதி கைத்தொழில் பேட்டைப் பிரிவிலிருந்து அகற்றப்பட்டமை. உதாரணம், 1. குளோபல் சேர்ஜிகல், 2. வீ.ஆர்.சீ. பேர்டிலைஸர்.

ii. கைத்தொழிற்பேட்டைப் பிரிவில் பேணி வரப்படுகின்ற புத்தகங்கள் கணக்கீட்டுச் செயன்முறைக்கு உட்படுவதில்லை. ஆண்டின் இறுதி மாதத்திற்கு கிடைக்கின்ற பணத்தொகை அடுத்துறும் ஜனவரி 10 – 12 வரை கிடைத்திருப்பின், நிதிப் பிரிவினால் அடுத்துறும் வருடத்திற்கான கிடைப்பனவுகளாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அது கைத்தொழிற்பேட்டைப் பிரிவின் ஆவணங்களின் சம்பந்தப்பட்ட வருடத்திற்கான கிடைப்பனவாகவே குறிப்பிடப்படுகிறது. ஆயினும் கைத்தொழிற்பேட்டைப் பிரிவின் புத்தகங்கள் மற்றும் கோப்புகளை ஆராய்ந்தறிந்து இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கேற்ப கணக்கீட்டுத் தவறுகளின் காரணமாக ஏற்பட்டுள்ள மீதிகளுக்கு பணிப்பாளர் சபைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.4 கணக்காய்வுக்குச் சான்றாகாமை

கடன்பட்டோர் நிலுவையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டில் நிலுவை உறுதிப்படுத்தல் கடிதங்கள் கைத்தொழிற்பேட்டை அதிகாரிகளினால் அனுப்பிவைக்கப்பட்டதுடன், இந்த நிலுவையினை உறுதிப்படுத்தப்படுவதற்கான கடிதங்கள் இற்றைவரை நிதிப்பிரிவுக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் 2014 ஆம் ஆண்டில் நிலுவை உறுதிப்படுத்தல் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

2.2.5 வர்த்தக மற்றும் ஏனைய வருமதியாகவேண்டிய கணக்குகள்

2014 டிசம்பர் 31 ஆம் திகதியில் வர்த்தக மற்றும் ஏனைய வருமதியாகவுள்ள நிலுவை ரூபா 29,959,965 எனக்காட்டப்படுகின்றது.

i. ரூபா 10,353,853/- மீதி பல வருடங்களாக அறவிடப்பட முடியாத நிலவையாகக் காட்டப்பட்டுள்ளதுடன், அதில் ரூபா 1,591,568.21 (இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் பேரிலுள்ள ரூபா 1,327,835.05 நிலுவைகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பேரிலுள்ள ரூபா 263,733.16 நிலவைகள்) 2014 திருத்தப்பட்டவாறான கணக்குகளில் திருத்தப்பட்டுள்ளது. வார்ப்புப் பிரிவின் பணிப்பாளர் சந்தைப்படுத்தல் பேரிலுள்ள ரூபா 3,357,157.72 பணத்தொகை இடைக்கால ஒப்பந்தப் பிரிவின் வார்ப்புப் பிரிவுக்குக் கிடைத்தல் வேண்டும்.

ii. 5 வருடங்களைக் கடந்த பழைய நிலுவைகள் இணக்கம் செய்யப்பட்டு வருவதுடன், அதற்கு ஏற்ப தேவையான சீராக்கல்கள் 2015 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின் உள்ளடக்கப்படும்.

iii. கைத்தொழிற்பேட்டைக்குள் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளை வழங்குவதன் மூலம் தோற்றம்பெற்ற அறவிடப்பட வேண்டியவைகளாக அமையும் ரூபா 33,129,822/- மீதி சம்பந்தமாக அட்டவணை இல. 1 இன் கீழ் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கேற்ப A எனக் குறிப்பிடப்பட்டுள்ள தற்போதுள்ள கைத்தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்படவிருக்கின்ற நிலுவை மற்றும் கைத்தொழிற்பேட்டைப் புத்தகங்களின் மீதிக்கிடையில் ரூபா 1,272,497.09 வித்தியாசமாகக் காணப்படுகின்றது. கைத்தொழிலை விட்டுச் சென்ற கைத்தொழிலாளர்களாக இனங்காணப்பட்டுள்ளவர்களின் மீதி ரூபா 9,993,653.75 இணக்கம் செய்யப்பட்டு பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படும். மாதாந்த நிலுவை இணக்கம் செய்யப்பட்டு வருவதுடன், நடப்பு வருடத்தில் வித்தியாசங்கள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

iv. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலகட்டத்திற்கு இடையில் பழைய நிலவை சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமை இதற்கான காரணமாகும். இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தேவையான சீராக்கல்கள் எதிர்வரும் காலத்தில் உள்ளடக்கப்படும்.

v. எந்திரவியல் வேலைத்தளத்தின் கீழுள்ள ரூபா 20,225,259/- பணத்தொகையில் ரூபா 13,096,059.82 கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பட்டியலிடப்பட்டவையாகும் (இன்வொயிஸ்) இந்த நிலுவை உள்ளிட்ட ஏனைய நிலுவைகள் சம்பந்தமாக இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. 2015 ஆம் ஆண்டில் தேவையான சீராக்கல்கள் உள்ளடக்கப்படும்.

vi. ரூபா 16,307,420/- தொகைக்குள் உள்ளடங்கும் வரியுடன் தொடர்புடைய பெறுமதிகள் சம்பந்தமாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் ஏனைய நிலவைகள் கணக்கீட்டுத் தவறுகளாக இனங்காணப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்றைச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்று திருத்தங்கள் உள்ளடக்கப்படும்.

vii. வருமதியாகவுள்ள வெட் வரியாகக் காட்டப்பட்டுள்ள இது ரூபா 10,741,964/- பெறுமதியுடைய கழிவுக் கருத்திட்டம் சம்பந்தமாக 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெட் வரியாக அமைவதுடன் இது சம்பந்தமாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

viii. பணியாட்டொகுதி ஆற்றலை விருத்தியாக்குவதற்குச் செலவிடப்பட்ட பணத்தொகை மதிப்பிறக்கத்தின் கீழ் கணக்கில் இடப்பட்டு திருத்தப்பட்டுள்ளது.

ix. முன்னைய வருடங்களில் ஊழியர்கள் ஓய்வுபெறும் போது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சில நிலுவைகள் தீர்ப்பட்டிருந்தாலும் கணக்குகளில் இவை தீர்க்கப்படாமலுள்ளது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று இந்த நிலுவைகளைத் திருத்துவதற்கும் தீர்க்கப்பட வேண்டிய நிலுவைகள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. நிதி மீளாய்வு

3.1 2006 முதல் 2007 ஜூலை மாதம் வரை வாழ்க்கைச் செலவுப் படியுடன் தொடர்புடைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் கணிப்பிடப்பட்டு 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டதால் அரச பங்களிப்பினைச் சீராக்குவதற்கு முன்னரான பற்றாக்குறை 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளது.

3.2 அனுமதிக்கப்பட்ட விகிதங்களுக்குள் நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகளை உள்ளடக்குவதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

3.3 செலவினங்களில் அசாதாரண அதிகரிப்புக்குக் காரணமாகியுள்ள விடயங்கள் பின்வருமாறு,

i. தலைமை அலுவலகத்தின் வரி செலுத்தலுக்கான ஒதுக்கீடாக ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டமை.

ii. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்களும் நடாத்தப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை அதிகரித்தமை

iii. உபசரிப்புச் செலவினத்தின் கீழ் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதற்கான விழாவின் செலவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை (திருத்தப்பட்டுள்ளது)

iv. நீண்டகாலத்திற்குப் பின்னர் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட விருது வழங்கும் விழா மற்றும் கைத்தொழில் கண்காட்சிக்காக உறப்பட்ட செலவினங்கள்.

4.1 செயலாற்றுகை

i. திட்டமிடல் பிரிவினால் 2014 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையவாறு தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் பணிப்பாளர் சபைக்கும் அமைச்சுக்கும் கையளிக்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு பிரிவுகளிலும் வேலைப்பழு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலத்தில் முன்னேற்றம் பற்றிய விபரங்களை உரியவாறு கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ii. வருடாந்த செயற்பாடுகள் சம்பந்தமாக நேரடியாக பொறுப்புக் கூறவேண்டிய பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு செயற்பாடுகள் சம்பந்தமாகவும் விபரமான அறிக்கையொன்று செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் நடைமுறை ரீதியில் சிக்கல்மிகு விடயமாகவிருப்பினும் 2016 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்தில் அந்தந்தப் பிரிவுகளின் செயலூக்கம் மிக்க பங்களிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

**(அ) இறப்பர் அபிவிருத்திப் பிரிவு**

i. இறப்பர் அபிவிருத்திப் பிரிவின் இலக்கு வைக்கப்பட்ட செயற்பாடுகளின் அளவிலும் பார்க்கிலும் நிறைவுசெய்யப்பட்ட அளவு அதிகரித்து கூடியதொரு வீச்சில் செயற்பாடுகள் காட்டப்பட்டுள்ளமைக்கான காரணம் அப்பிரிவின் இரசாயனக்கூடச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கைத்தொழிலாளர்கள் அதிக விருப்பத்தினை வெளிப்படுத்தி அங்கு வருகை தருவதாகும்.

ii. செயற்திட்டத்தில் காட்டப்படாவிடினும் இப்பிரிவில் பல்வேறுபட்ட சேவைகளைப் பெற்றுக்கொண்ட பழைய கைத்தொழிலாளர்கள் எதிர்பார்க்காத வகையில் தங்களது சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தருவதால் அச்சேவைகள் காட்டப்பட்டுள்ளன.

iii. இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற உரிய அளவிலான இறப்பர் உற்பத்திகளை விட குறைந்த தரமுடைய உற்பத்திகள் சீனாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் குறைந்த விலையில் சந்தையில் கிடைப்பதால் பெரும்பாலான கைத்தொழிலாளர்கள் குறைந்த விலையில் குறைந்த தரமுடைய இறப்பர்

கலவைகளைக் கொள்வனவு செய்வதன் காரணமாக இலக்குவைக்கப்பட்ட முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாதுள்ளது.

**(ஆ) தோற்பொருள் அபிவிருத்தி நிலையம்**

i. செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட அளவை விட கடந்த வருடத்தில் அதிகரித்திருப்பதற்கான காரணம், பயிற்சியினைப் பெற்றுக்கொண்டவர்கள் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதை விட அதிகமாக ஈடுபட்டமையாகும்.

ii. சம்பந்தப்பட்ட வருடத்தின் செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படாவிடினும், கைத்தொழிலாளர்களினால் முன்வைக்கப்படும் வேண்டுகோளின் பிரகாரம் சேவைகளை வழங்குவதற்கு அப்பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**(இ) கைத்தொழில் பேட்டைப் பிரிவு**

i. செயற்திட்டத்தின் முதலாவது பணி கைத்தொழிலாளர்களின்தேர்வு நிறைவுபெற்றதன் பின்னர் கைத்தொழிலின் உற்பத்திப் பணிகளை ஆரம்பிக்கும் வரை கைத்தொழிலுக்கு ஏதுவான ஒவ்வொரு கட்டத்தின் கீழும், அதாவது சுற்றாடல் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல், கட்டிடத் திட்டங்களை பிரதேச சபையினூடாக அங்கீகரித்துக்கொள்ளல், சபையின் வைப்புப் பணம் மற்றும் வரிப்பணத்தைச் செலுத்தி காணித்துண்டுகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளல், கட்டிடங்களை நிர்மாணித்தல், இயந்திர உபகரணங்களைப் பொருத்தி கைத்தொழிலை ஆரம்பித்தல் போன்ற விடயங்களுக்கு ஆறு மாதம் முதல் ஒரு வருட காலம் கடப்பதனால் ஏனைய பணிகளின் முன்னேற்றம் இவ்வருடத்தில் இவ்வாறாகக் குறைவடைந்துள்ளது.

ii. அச்சுவேலிக் கைத்தொழிற்பேட்டை 2014 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன், கைத்தொழிற்பேட்டை நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கைத்தொழிற்பேட்டை நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஈ) பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

i. செயற்பாடு 5 இன் முன்னேற்றம் **0** - 24 வீதம் வரை குறைவடைவதற்கான காரணம்

- ❖ வள ஆய்வு அறிக்கைகளைத் தயாரித்தல்
- ❖ கைத்தொழிற்தரவுத் தளத்தைத் தயாரித்தல்
- ❖ மதியுரைச் சேவைகள்

பேன்ற மேற்படி செயற்பாடுகளை உள்ளடக்கி 2014 ஆம் ஆண்டுக்குரிய செயற்திட்டம் தயாரிக்கப்படும் போது மாவட்ட அலுவலகங்களில் பணியாற்றிய ஒட்டுமொத்த உத்தியோத்தர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. இதற்கான காரணம், அச்சந்தர்ப்பத்தல் மாவட்டங்களில் நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவ்வித திட்டமும் இல்லாதிருந்தமையாகும். ஆயினும், வெற்றிடங்களை நிரப்பும் பணி அவ்வருடத்திற்குள் செயற்படுத்தப்படாமையினால், இலக்கு வைக்கப்பட்ட முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு ஆற்றல் கிட்டவில்லை.

ii. ஐந்து செயற்பாடுகளின் முன்னேற்றம் 133 வீதம் முதல் 221 வீதம் வரை அதிகரித்தமைக்கான காரணம்

மேலே குறிப்பிட்டவாறு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போலவே பிரதேசங்களில் காணப்பட்ட வித்தியாசங்களின் அடிப்படையிலும் அந்தந்த செயற்பாடுகளுக்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. மேலும் பல்வேறு வெளி நிறுவனங்களின் வேண்டுகோள் மற்றும் நிதியத்தின் அடிப்படையில் அனேகமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான சந்தர்ப்பங்களும் எழுந்தன. ஆகவே, உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவிய போதிலும், அந்தந்த மாவட்டங்களிலிருந்து உத்தியோகத்தர்களைப் பரிமாறிக் கொண்டதன் மூலமாக இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய ஆற்றல் கிடைத்ததால் முன்னேற்றம் அதிகரித்துள்ளது.

**(உ) சந்தைப்படுத்தல் பிரிவு**

i. செயற்திட்டத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இடையிலான வித்தியாசங்கள் மீது பின்வரும் விடயங்கள் தாக்கம் செலுத்தியிருக்கின்றன.

அ. லக்கம் விற்னை நிலையங்களின் காட்சிப்படுத்தலையும் விற்பனை வசதிகளையும் மேம்படுத்தல்.

லக்கம் விற்பனை நிலையத்தின் பொருள் கண்காட்சிக்கு 500 பேரை இணைத்துக்கொள்வதற்கு இலக்கு வைக்கப்பட்டிருப்பினும், அதற்குப் பொருத்தமான கைத்தொழிலாளர்கள் முன்வராத காரணத்தினால் சம்பந்தப்பட்ட இலக்கினை ஈடுசெய்துகொள்ள முடியவில்லை.

ஆ. நடத்தப்பட்ட சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்

சந்தைப்படுத்தல் பிரிவில் போதியளவு பணியாட்டொகுதியினர் இல்லாதிருந்ததனால் இலக்குவைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாமற்போனது.

இ. அரச நிறுவனங்களிலிருந்து கேட்பு விலையைக் கோருவதற்காக விலைகள் முன்வைக்கப்பட்டதையடுத்து ஒப்பந்த கட்டளைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு துணை ஒப்பந்தப் பிரிவில் பதிவுசெய்துகொண்டுள்ள கைத்தொழிலாளர்களினால் மேற்படி ஒப்பந்த வேலைகள் வழங்கப்படுகின்றன. போட்டி விலைகளைக் கருத்திற்கொண்டு ஒப்பந்தங்கள் கிடைப்பதால் இலக்குகளை அடைய முடியாமற்போனது.

ஈ. சேகரிக்கப்பட்ட லோகக் கழிவுகளின் தொகை

அரச நிறுவனங்களினால் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு நாங்கள் கழிவுக் கருத்திட்டத்தில் பதிவுசெய்துள்ள கைத்தொழிலாளர்களுக்கு அவற்றை விநியோகிக்கின்றோம். ஒவ்வொரு அரச நிறுவனத்திடமிருந்தும் எங்களுக்குக் கிடைக்கின்ற கழிவுப் பொருட்களின் அளவினை நாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்ட இலக்கினை ஈடேற்றிக் கொள்ள முடியாமற்போயுள்ளது.

ii. செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படாததனால் அதன் முன்னேற்றத்தை ஆராய்வதற்கு இயலாமற்போனமை.

இதன் கீழ் 01 மற்றும் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள SMIDEX – 2014 கைத்தொழில் கண்காட்சி மற்றும் மிகச்சிறந்த தொழில் முயற்சியாளரைத் தெரிவுசெய்யும் போட்டிகள் சம்பந்தமான விடயமாக இது அமைகின்றது.

2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் சில்ப கண்காட்சி தேசிய கைப்பணி மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இக்கண்காட்சியை நடத்தத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

2014 ஆம் ஆண்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபை மாத்திரம் இக்கைத்தொழில் கண்காட்சியையும் மிகச் சிறந்த தொழில் முயற்சியாளரையும் தொிவுசெய்யும் போட்டியினையும் நடத்த வேண்டுமென அமைச்சினால் ஆலோசனை வழங்கப்பட்டதையடுத்து இக்கண்காட்சிகள் நடாத்தப்பட்டன. இதற்கான ஆலோசனை 2014 ஆம் ஆண்டில் கிடைத்ததுடன், இப்பணிகள் செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இங்கு 06 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்படுகின்ற விடயத்திற்கு ஏதுவாக லக் நிபயும் விற்பனை நிலையம் கோட்டை, ஓல்கட் மாவத்தையிலுள்ள புதிய இடத்திற்கு எடுத்துச் செல்ல நேரிட்டது. புதிய இடத்திற்குக் கொண்டுசென்றமையினால் சம்பந்தப்பட்ட இலக்குகளை ஈடேற்றிக்கொள்ள முடியவில்லை.

## (உ) இயந்திரவியல் பிரிவு

i. செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த செயற்பாடுகளை ஈடேற்றுவதற்காக போதியளவு இயந்திரவியல் மற்றும் தொழில்நுட்பப் பணியாட்டொகுதியொன்று இல்லாமை காரணமாக சம்பந்தப்பட்ட இலக்குவைக்கப்பட்ட அளவினை அடைந்துகொள்ள முடியாமற்போயிற்று.

ii. இயந்திரவியல் பிரிவின் கீழ் காணப்படும் பல்வேறு துறைப் பிரிவுகளின் செயற்பாடுகள் நாளாந்த செயற்பாடுகளுடன் ஒன்றிணைந்துள்ளதுடன், செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படாவிடினும் நீண்டகாலமாக சபையின் சேவைகளைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்கள் தமது கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு ஏதுவான உற்பத்திகளின் அடிப்படையில் அவ்வப்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தேவைப்படுகின்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பொறியியல் பிரிவுக்கு வருகை தரும் பட்சத்தில் அச்சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி செயற்திட்டத்தில் உள்ளடங்காத செயற்பாடுகளும் ஈடேற்றப்பட்டுள்ளது.

## (ஊ) தொழில்நுட்பச் சேவைப் பிரிவு

தொழில்நுட்பச் சேவைப் பிரிவின் முன்னேற்றத்தை ஆராயும் போது 2014 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம் பின்வருமாறு,

உற்பத்தி செயன்முறைகள்

| மாதம் | கண்காட்சி அமர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 05 |
| பெப்ரவரி | 03 |
| மார்ச் | 01 |
| ஏப்ரல் | 02 |
| மே | 02 |
| ஜூன் | 08 |
| ஜூலை | 07 |
| ஆகஸ்ட் | 04 |
| செப்டம்பர் | 02 |
| ஒக்டோபர் | - |
| நவம்பர் | 01 |
| டிசம்பர் | 04 |
| **மொத்தம்** | **39** |

இதன்படி சம்பந்தப்பட்ட இலக்காக அமைந்த உற்பத்தி செயன்முறைகள் 10 அடைந்துகொள்ளப்பட்டது.

| மாதம் | கண்காட்சி அமர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 01 |
| பெப்ரவரி | 02 |
| மார்ச் | 03 |
| ஏப்ரல் | 01 |
| மே | 01 |
| ஜூன் | 04 |
| ஜூலை | 03 |
| ஆகஸ்ட் | 09 |
| செப்டம்பர் | 07 |
| ஒக்டோபர் | 14 |
| நவம்பர் | 13 |
| டிசம்பர் | 10 |
| மொத்தம் | 68 |

இதற்கேற்ப தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகளுக்கான இலக்காக அமைந்த 40 செயலமர்வுகள் அடையப்பட்டுள்ளன.

சான்றழித்தலுக்கு உதவுதல் எனும் விடயத்தின் கீழ் மூன்று உணவுக் கைத்தொழில்களுக்கான தரச்சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினூடாக இரண்டு இலட்சம் ரூபா வரை நிதிச் சலுகையினை வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டு ஆற்றல் கிட்டியது. இந்த முன்னேற்றம் 2015 ஜனவரி மாதத்தில் அறிக்கையிடப்பட்டது.

| **தொடர் இல.** | **நிறுவனம்** | **சான்றிதழளித்தல்** |
|---|---|---|
| 01. | போகன்ஸ் கெனரீஸ்<br>இல. 10,கோயில் வீதி, பேருவளை . | ISO 22000<br>நிறைவுசெய்யப்பட்டது |
| 02. | செலேன்ஞ் புட் புரடக்ஸ்<br>மல் வத்த , கொடகவெல. | SLS<br>நிறைவுசெய்யப்பட்டது |
| 03. | நல்கோ புட் புரடக்ஸ்<br>மல்வத்த ,கொடகவெல | ISO 22000<br>நிறைவுசெய்யப்பட்டது |

இதற்கேற்ப, இச்செயற்பாடுகளின் கீழ் 2014 ஆம் ஆண்டு இலக்குகள் அடையப்பட்டுள்ளன. மேலும் தரத்தனையும் உற்பத்தியினையும்மேம்படுத்தல். நடைமுறை கைத்தொழில்களை மேம்படுத்தி அடுத்த கட்ட மதியுரை சேவைளை இலகுபடுத்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் போதியளவு பணியாட்டொகுதியினை பிரிவு கொண்டிருக்கவில்லை. இவ்விடயம் பின்வரும் அட்டவணைக்கு ஏற்ப தெளிவாகின்றது.

| பதவி | கோரப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை | 2014 ஆம் ஆண்டு இருந்த எண்ணிக்கை |
|---|---|---|
| தொழில் முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்கள் | 09 | 03 |
| பொறியியலாளர்கள் | 01 | - |
| தொழில்நுட்ப உதவியாளர்கள் | 02 | - |
| இரசாயனக்கூட உதவியாளர்கள் | 04 | - |
| இரசாயனக்கூட ஊழியர்கள் | 04 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 03 | 01 |
| அலுவலக உதவியாளர்கள் | 02 | 01 |

ஆயினும், நாம் நடத்திய தொழில்நுட்ப பயிற்சி செயலமர்வுகளில் பங்கேற்ற தற்போதுள்ள கைத்தொழிலாளர்கள் தங்களது உற்பத்திகளின் தரத்தையும் கைத்தொழிலின் ஆக்க விளைவையும் மேம்படுத்திக்கொண்டுள்ளதுடன், அவர்களின் அவ்வாறான கைத்தொழில்களை உயர் மட்டத்திற்கு இட்டுச்சென்றுள்ளனர். இது சம்பந்தமாக பின்னாய்வு செய்து சம்பந்தப்பட்ட முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்குத் தேவையான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உற்பத்தி அபிவிருத்திப் பணிகள் விடயத்திற்காக போதியளவு உத்தியோகத்தர்களும் இரசாயனக்கூட பணியாட்டொகுதியையும் பிரிவு கொண்டிருக்கவில்லை. மேலும் இதற்குத் தேவையான இரசாயனக்கூட உபகரணங்கள் மற்றும் வசதிகள் போதியளவு காணப்படவில்லை.

2015 ஆம் ஆண்டுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதில் ஒரு பகுதி இரசாயனக்கூடத்திற்கு ஏற்கனவே கிடைத்துள்ளது. இதன்படி, எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆற்றல் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறன் இன்மை

(i)

(அ)
(ஆ)
(இ)
(ஈ)
(உ)

சபையின் நிதிப் பிரிவில் தொழிற்படும் சேஜ் எனும் வர்த்தகக் குறியீட்டினைக் கொண்ட கணக்காய்வு மென்பாக முறைமையில் காணப்படும் குறைபாடுகளும் தற்போது அது நடப்புத் தேவைகளுக்குப் பொருத்தமற்றதாக அமைவதாலும் புதிய மென்பாக முறைமையொன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்கு ICTA நிறுவனத்தின் ஆலோசனைச் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

(ii) தொழில்நுட்பச் சேவைப் பிரிவின் புதிய இரசாயனவியல் கூடத்திற்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொண்டு அவற்றை நிறுவி 2015 ஆம் ஆண்டு மே மாதம் திறந்துவைக்கப்பட்டது.

(iii) சபையின் முன்னாள் தலைவரினால் பயன்படுத்தப்பட்ட ரூபா 199,000/- பெறுமதியான செல்லிடத் தொலைபேசியும் இருப்புப் பட்டியலிலுள்ள பொருட்களும் மீள சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

(iv) கழிவுப் பொருள் கருத்திட்டம்

கழிவுப் பொருள் கருத்திட்டத்தில் நிவாரண விலையில் கைத்தொழிலாளர்களுக்கு மூலப் பொருட்களை வழங்கும் விடயத்தின் கீழ் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

(அ) 2014 ஆம் ஆண்டு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடித் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல் கோவைக்கு ஏற்ப பகிரங்க பத்திரிகை விளம்பரங்களின் ஊடாக மும்மொழிகளிலும் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு கைத்தொழில்களை ஆராய்ந்து அந்தந்த மாவட்ட அலுவலகங்களினூடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணபங்களையும் கருத்திற்கொண்டு கைத்தொழிலாளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) கழிவுப்பொருளை ஏற்றிச்செல்லும் விடயத்தில் சபையின் பார ஊர்திகளுக்கு மேலதிகமாக பாரம் தூக்கி ஒன்றும் தேவைப்படுகிறது. இதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் வாகனம் பாரம் தூக்கி ஒன்றினையும் கொண்டுள்ளது. ஆகவே, பாரந்தூக்கிக்கான செலவுகள் குறைவடைந்திருக்கின்றன. மேலும் இந்த வாகனங்களில் பத்து தொன் நிறையை ஏற்ற முடியுமென்பதுடன், சபைக்குச் சொந்தமான வாகனங்களில் ஏற்றக்கூடிய

எடையின் அளவு இரண்டு தொன்கள் மாத்திரமாகும். சபையின் பார ஊர்தியைப் பயன்படுத்திக் கொள்வதாயின், கழிப்பொருட்களை ஏற்றியிறக்குவதற்கு தொழிலாளர்களை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், அவ்வாறான தொழிலாளர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 1200/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.

(இ) அரச அச்சகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கழிவுப் பொருட்களின் தொகை அரச அச்சகத்தில் உள்வாரியான பிரச்சினைகள் காரணமாக மீள எடுத்துச்செல்ல நேர்ந்ததுடன், இந்நிலைமையை எமக்கு கட்டுப்படுத்த முடியவில்லை. ஆயினும், அரச அச்சகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களுக்காக ரூபா 284,416.80 ஐச் செலுத்த வேண்டியுள்ளதுடன் அப்பணத்தொகையினைச் செலுத்தும் போது ஏற்பட்ட நட்டத்தினை அறவீட்டுக் கொள்வதற்கு வாய்ப்புக்கிட்டும்.

(ஈ) 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் கழிவுக் கருத்திட்டம் கிராமியக் கைத்தொழில் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் கருத்திட்ட அலுவலகமும் அவ்வமைச்சின் வளவிலேயே அமைந்திருந்தது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முன் கொடுப்பனவுகள் முறையே ரூபா 954,010/- மற்றும் ரூபா 31,384,211/- ஆக பட்டியல்கள் செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பட்டியல்களை மிக விரைவில் செலுத்தித் தீர்ப்பதற்கான ஆற்றல் உள்ளது. 2012 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த முன்கொடுப்பனவு முற்பணங்கள் செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளன.

(உ) கழிவுப்பொருள் தொழிலாளர்களுக்கிடையில் விநியோகிக்கப்படும் போது சில கைத்தொழிலாளர்களுக்கிடையில் அதிகமான வீதம் சென்றடைகின்றமைக்கான காரணம் மூலப்பொருட்களின் தன்மை, கைத்தொழிலாளர்களின் தன்மை மற்றும் மூலப்பொருட்களின் பெறுமதி ஆகிய விடயங்களாக அமைவதுடன் பின்வரும் கைத்தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் பெறுமதிகளுக்கு ஏற்ப அதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

(i) டபிள்யு பாலித சில்வா

கைத்தொழிலாளருக்கு ரூபா. 10,887,484/- பெறுமதியுடைய கழிவுப் பொருட்கள் வழங்கப்பட்டிருப்பினும் அதில் ரூபா 9,557,590.91 தொகைக்கு வழங்கப்பட்டுள்ள கழிவுப் பொருளாக அகற்றப்பட்ட மீள்பரிமாற்றுகளே வழங்கப்பட்டுள்ளன மின்மாற்றி கழிவு மின்மாற்றிகளின் விலை அதன் கொள்ளளவிற்கு ஏற்ப ரூபா 82340/- உம் ரூபா 440,966/- ஆக இருந்ததால் வழங்கப்பட்டுள்ள மின்பரிமாற்றிகளின் எண்ணிக்கை குறைந்த எண்ணிக்கையாகும்.

2014 ஆம் ஆண்டில் மின்சாரசபை ஒரு மாதத்திற்கு குறைந்த பட்சம் 500 மின்மாற்றிகளையாவது கொள்வனவு செய்ய வேண்டுமென குறிப்பிடுவதனால் மின்மாற்றிகளை கொள்வனவாளருக்கு வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அவருக்கு வழங்கப்பட்டுள்ள எஞ்சிய கழிவுப்பொருட்களில் 80 வீதமானவை அதிக காபன் கொண்ட சீனச்சட்டிகளாகவிருக்கின்றன. இந்தக் கழிவுப்பொருட்களை ஏனைய கைத்தொழிலாளர்கள் கொள்வனவு செய்வதை நிராகரித்ததனால், இதனைக் கோரிய கைத்தொழிலாளக்கே வழங்கப்பட்டுள்ளது.

(ii) திரு. ஐ.ஏ. சஹீர்

இந்தக் கைத்தொழிலாளருக்கு அலுமினியம் சேவிஸ் வயர் மற்றும் அலுமினியம் பண்டல் வயர் ஆகியவையே அதிகமாக வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கழிவுப்பொருளைக் கொள்வனவு செய்ய விருப்பம் தொிவித்த கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவிருந்ததால் இந்தக் கைத்தொழிலாளர் பெருமளவு அலுமினியம் பொருட்களை உற்பத்தி செய்வதால் அவருக்கு அதிகமானளவு கழிவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. அவருக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள அலுமினியத்தின் அளவு மாத்திற்கு 25,000 கி.கி. ஆகும்.

(iii) ஜே.ஏ.பீ. மெட்டர் பிறைவட் லிமிடட்

இந்தக் கைத்தொழிலாளருக்கும் மின்மாற்றிகளே அதிகமாக வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, பெறுமதியில் 50 சதவீதமானவை மின்மாற்றிகளின் பெறுமதியாகும். கைத்தொழிலாளர் இரும்பு, அலுமினியம் மற்றும் செப்பு ஆகியவற்றுககாக தம்மைப் பதிவுசெய்துள்ளமையினால் இவருக்கு அக்கழிவுப் பொருட்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

(iv) திரு. ரீ. வின்சன்

கழிவுப் பொருள் கருத்திட்டத்தில் கழிவுப்பொருளாக அகற்றப்பட்டுள்ள டயர்களை கொள்வனவுக்கு தங்களைப் பதிவுசெய்துகொண்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். நிறுவனங்களிலிருந்து டயரைக் கொள்வனவு செய்யும் போது வகைப்படுத்தப்படாமல் அனைத்து டயர்களையும் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் அதிலிருந்து வகைப்படுத்தப்படாமல் இந்தக் கைத்தொழிலாளரும் டயர்களைக் கொள்வனவு செய்வதால் இவருக்க அதிகமான டயர்கள் வழங்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் கைத்தொழிலாளர்கள் டயர்களை கொள்வனவு செய்யும் போது முன்கூட்டியே ஆராய்ந்தறிந்து நல்ல நிலையிலுள்ள டயர்களை மாத்திரம் கொள்வனவு செய்துள்ளதால் அந்தந்த நிறுவனங்களில் எஞ்சியிருந்து கழிவு டயர்கள் நவபிம களஞ்சியத்திற்கு கொண்டுவரப்பட்டு குவிக்கப்பட்டது.

## 4.3 தொழிற்பாட்டு வினைத்திறன் இன்மை

(அ) சபையில் விலை மற்றும் கிரயத்தை நிர்ணயித்தல் விடயத்தை ஒழுங்குமுறைப்படுத்தும் நடைமுறையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நடமாடும் தொழில்நுட்ப பஸ் வண்டி சம்பந்தமாக பத்திரமொன்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், தீர்மானங்களை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

(இ) சபையின் சட்ட நடவடிக்கைகளுக்காக சட்ட உத்தியோகத்தர் ஒருவர் இருக்கும் பட்சத்திலும் ரூபா 158,500/- செலவிற்கு வெளிவாரியான சட்டத்தரணி ஒருவரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் ரூபா 17,500/- வெளிவாரியான சட்டத்தரணிகளுக்கும் ரூபா 141,000/- சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு பின்வரும் விடயங்கள் காரணமாக அமைந்துள்ளன.

சபையினாலும் சபைக்கு எதிராகவும் தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கு சட்ட உத்தியோகத்தர் ஆஜராகவேண்டுமெனினும், ஒரே தினத்தில் பல நீதிமன்றங்களில் வழக்குகள் அழைக்கப்படுவதனால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரே சட்ட உத்தியோகத்தருக்க அனைத்து நீதிமன்றங்களையும் தளுவும் வகையில் பணியாற்றுவதற்கு இயலாமற்போவதனால் வெளிவாரியான சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ளநேரிடுதல் தவிர்க்க முடியாததொரு விடயமாகும். மேலும், ஏனைய நீதிமன்றங்களில் அழைக்கப்படுகின்ற வழக்குகளில் சிற்சில தினங்களில் தனிப்பட்ட ரீதியில் சட்ட உத்தியோகத்தர் ஆஜராவது அத்தியாவசியமாக அமையாததுடன், அவ்வாறான தினங்களில் வெளிவாரியாக மேலும் வெளிப்பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் சம்பந்தப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரின் சேவையினைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக சட்ட உத்தியோகத்தருக்கு ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நேரிடுவதனால் ஏற்படும் செலவினை இயன்றளவிற்குக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவுப் படியின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் செலுத்தப்படாமை சம்பந்தமாக 2014.01.17 ஆம் திகதி மொரட்டுவை நீதவான் நீதிமன்றத்தில் தொழில் ஆணையாளரினால் சபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட ஆறு வழக்குகளை விசாரணைக்கு அழைக்கப்படவிருந்ததுடன், அன்றைய தினம் சபையின் சார்பில் மாத்தளை மாவட்ட நீதிமன்றத்திலும் கண்டி மாவட்ட நீதிமன்றத்திலும் இந்தக் கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள 61668 இலக்கமுடைய வழக்கு கண்டி நீதவான் நீதிமன்றத்திலும் விசாரணைக்கு அழைக்கப்படவிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் சட்ட உத்தியோகத்தரின் தொழில்வாண்மை ரீதியிலான பங்களிப்பினை வழங்குவதற்கு அன்றைய தினத்தில் மிகவும் ஏற்புடையதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்த வழக்கு மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்காகவிருந்ததால் அவ் வழக்கில் சட்ட உத்தியோகத்தர் பங்கேற்றதுடன், ஏனைய வழக்கிற்காக வெளிவாரியான சட்ட உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இதற்கேற்ப மொரட்டுவ மாவட்ட நீதவான் நீதிமன்ற

வழக்கில் சட்டத்தரணி திருமதி சேனானி வாசல அவர்களின் உதவியும் (ரசீது இல. 1043 – 6 வழக்குகளுக்கும் ரூபா 3000/- செலுத்தப்பட்டுள்ளது) கண்டி நீதவான் நீதிமன்றத்தின் வழக்கின் சார்பில் சட்டத்தரணி திருமதி கல்கடுவ அவர்களின் உதவியும் (ரசீது இல. 3503) பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த சட்டத்தரணிகளுக்குச் செலுத்தப்படுகின்ற பணத்தொகை இவ்வாறான வழக்குகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறவிடப்படுகின்ற 10 வீதமான பணத்தை விட குறைவானதொரு பணத்தொகையாகும். உங்களால் வினவப்பட்டுள்ள ரசீது இல. 1044/45/47 இன் கீழ் கொடுப்பனவுகள் கண்டி மற்றும் மாத்தளை நீதிமன்றத்தின் வழக்குகளுக்காக மென்கே கடல்கடுவ மற்றும் லசந்த பாலசூரிய வழக்கறிஞர்களுக்காக செலுத்தப்பட்டுள்ளதெனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவ்வாறான கொடுப்பனவுகள் இங்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையிலேயே செலுத்தப்பட்டுள்ளது.

2014.03.07 ஆம் திகதி கண்டி நீதவான் நீதிமன்றத்தில் 61668 இலக்கமுடைய வழக்கின் எழுத்து மூலமான விளக்கத்தைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் அங்கு வாய் மூலமான விளக்கம் அளிக்கத்தேவைப்படவில்லை. 2014.03.06 ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட வழக்கில் ஆஜராக வேண்டியிருந்ததால் 2014.03.07 ஆம் திகதி கண்டியில் சட்டத்தரணி திருமதி கல்கடுவ அவர்களின் ஒத்தாசை பெறப்பட்டுள்ளது (ரசீது இல. 3504). இந்த வழக்கு 2014.03.28 ஆம் திகதி எழுத்து மூலமான விளக்கம் சமர்ப்பிக்கப்படுவதற்காக ஒத்துழைக்கப்பட்டதனால் அதற்கு அச்சட்டத்தரணியின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது (ரசீது இல. 3505).

2014.06.11 ஆம் திகதி கண்டி மேல் நீதிமன்றத்தில் வழக்கு இல. 67/2011 உடைய வழக்கு தீர்ப்பு வழங்குவதற்காக அழைக்கப்படவிருந்ததுடன், அன்றைய தினம் உயர் நீதிமன்றத்தின் வழக்கு இல. SPL/LA/158/2013 சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் கலந்துரையாடலுக்கு பங்கேற்க வேண்டியுமிருந்தது. அன்றைய தினம் கண்டி மேல் நீதிமன்றத்தின் வழக்கு தொடர்பில் தீர்ப்பு வழங்கப்படவிருந்ததால் விளக்கமளிப்பதற்குத் தேவையாக அமைந்ததால் சபையின் சார்பில் வெறுமானே அங்கு ஆஜராவது மாத்திரம் போதியதாகவிருந்ததால் சட்டமா அதிபர் திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு ஜூன் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவிருந்த எழுத்து மற்றும் வாய்மூல விளக்கமளித்தல் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக அவ்வழக்கில் தோன்றிய அரச சட்டத்தரணி அவர்களுக்கு பிறிதொரு தினத்தை வழங்குவதற்கு முடியாதென கூறப்பட்டதால் அன்றைய தினம் மேல் நீதிமன்ற வழக்கிற்காக கண்டியைச் சேர்ந்த சட்டத்தரணி திருமதி கல்கடுவ அவர்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது (பற்றுச்சீட்டு இல. 3504). மேலும் அன்றைய தினம் சபையின் சட்டத்தரணியினால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உறுதிகளின் இரண்டாம் பிரதி காணி பதிவு அலுவலகத்திற்கு கையளிக்கப்பட வேண்டியிருந்திருக்கிறது.

2014.06.13 ஆம் திகதி ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் பணிக்கொடை செலுத்தத் தவறியமை சம்பந்தமாக 21 வழக்குகள் மொரட்டுவப் பிரிவின் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைக்கப்படவிருந்ததால் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில்

(DLM/00041/2013) வழக்கும் அழைக்கப்படவிருந்தது. ஊழியர் சேமலாப நிதியம் பற்றிய வழக்குகளில் சபையின் சார்பில் விடயங்களை முன்வைப்பதற்கான தேவையிருந்ததால், கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு முறைப்பாட்டாளரின் பதிலுரையைச் சமர்ப்பிப்பதற்கு மாத்திரம் அழைக்கப்படவிருந்ததால், தனது தொழில்வாண்மைப் பங்களிப்பு மிகவும் முக்கியமானதெனக் கருதப்பட்ட மொரட்டுவ நீதவான் நீதிமன்ற வழக்கிற்கு சபையின் சட்டத்தரணி பங்கேற்றதுடன், கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கிற்காக சட்டத்தரணி திருமதி கல்கடுவ அவர்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது (ரசீது இல. 3503).

2014.06.20 ஆம் திகதி கண்டி நீதவான் நீதிமன்றத்தில் 61668 இலக்கமுடைய வழக்கிற்கான தீர்ப்பு வழங்கப்பட அழைக்கப்படவிருந்ததுடன், அன்றைய தினம் தொழில் திணைக்களத்தில் நடைபெற்ற விசாரணையொன்றுக்கும் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. அதில் தீர்ப்பு வழங்குவதற்கு மாத்திரம் அழைக்கப்பட்டிருந்த கண்டி நீதவான் நீதிமன்ற வழக்கிற்கு சட்டத்தரணி திருமதி கல்கடுவ அவர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பல்லேகல தொழிற்பேட்டையின் அதிகாரி கவரம்மான அவர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டார்.

மாத்தளை களுதாவளை கைத்தொழிற்பேட்டையின் ஓர் எல்லை சம்பந்தமாக மூன்றாம் தரப்புடன் 2009 ஆம் ஆண்டு சபைக்கு எதிராக மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் L6303/2009 ஆம் இலக்கமுடைய வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் சபையின் சார்பில் பதிலளித்ததையடுத்து எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு காணியை அளவீடு செய்வதற்குத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கான எதிர்கால நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொறுப்பு முறைப்பாட்டாளரின் பணியாகவிருந்ததுடன் சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரதிவாதி தரப்பிற்கு (சபை) நீதிமன்றத்தில் வெறுமனே தோற்றுதல் தவிர வேறேதும் செய்யப்படவிருக்கவில்லை. இதற்கு சபையின் சட்டத்தரணியைப் பங்கேற்கச் செய்வது அத்தியவசியமாக அமையாததால் சபையினால் உறப்பட வேண்டிய செலவினைக் கருத்திற்கொண்டு அதற்கு மாத்தளை மாவட்ட அலுவலகத்தின் விதப்புரையின் போில் மாத்தளையைச் சேர்ந்த ஒரு சட்டத்தரணியாகிய திரு. லசந்த பாலசூரிய அவர்களின் ஒத்துழைப்புப் பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு 2014.05.16 ஆம் திகதி ஆணைக்குழு அறிக்கைக்காக விசாரணைக்கு அழைக்கப்படவிருந்ததுடன், அன்றைய தினம் மொரட்டுவ நீதவான் நீதிமன்றத்தில் 28852 இலக்கமுடையதும் சம்பந்தப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்கு நேரிட்டிருந்ததாலும், 2014.05.16 ஆம் திகதி இந்த வழக்கிற்கு சட்டத்தரணி திரு. பாலசூரிய அவர்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது (ரசீது இல. 3506).

மேலும், நிறுவனமொன்றின் உரிய சட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற கடமைப்பணி யாதெனில், தேவையான சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் மதியுரை மற்றும் சட்ட சேவைகள் தேவையாகவிருக்கின்ற

சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதுமாகும்.

அரச நிறுவனங்களின் வழக்குகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளல் அரச சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கேற்ப, கண்டி நீதவான் நீதிமன்றத்தில் 53593 ஆம் இலக்க வழக்கில் அரச சட்டத்தரணியாகத் தோன்றிய இரண்டு நாட்களுக்கு மாத்திரமும் எழுத்திலான விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்காகவும் ரூபா 49,500/- கொழும்பு வணிக நீதிமன்றத்தில் சபைக்கு எதிராக தொடரப்பட்டிருந்த CHC/26/2011/MR இலக்கமுடைய வழக்கிற்காக அரச சட்டவாதி ஆஜராகிய 6 நாட்களுக்காக மாத்திரமும் எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்கும் பதிலுரைப்பதற்கும் எழுத்திலான விளக்கத்தைத் தயாரிப்பதற்கும் ரூபா 91,500/- பணத்தொகையும் ரூபா 141,000/- சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் செலுத்தப்பட்டது. மேற்படி CHC/26/2011/MR வழக்கிற்கு மேலதிகமாக அந்நீதிமன்றத்தில் CHC/27/2011/MR இன் கீழ் மேலும் வழக்கொன்று தொரப்பட்டிருந்ததுடன், மேற்படி 26 ஆம் இலக்க வழக்குடன் அந்த அனைத்துத் தினங்களிலும் இந்த வழக்கும் அழைக்கப்பட்டதுடன் அதற்கு அரச சட்டவாதியின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதற்காக மேலதிக கட்டணங்கள் அறவிடப்படவில்லை.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் காலத்திற்குக் காலம் அதிகரிக்கப்படுவதுடன் அது பொதுவாக அனைத்து அரச நிறுவனங்களுக்கும் ஏற்ற செலவினமாகும்.

### 4.4 அபிப்பிராயப் பேதத்திற்குக் காரணமாக அமையும் விடயங்கள்

(அ) காணி உறுதிக் கட்டணங்களைச் செலுத்துதல்

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற கைத்தொழில் பேட்டைகளின் காணிகள் மற்றும் கட்டிடங்களை கைத்தொழிலாளர்களுக்கு நீண்டகால குத்தகையின் அடிப்படையில் சாட்டப்படுவதுடன், சட்டபூர்வமான குத்தகை ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடும் போது அதற்காக செலவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களும் நொத்தாரிசுக் கட்டணங்களும் சம்பந்தப்பட்ட கைத்தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்படுகிறது. அதற்கு முத்திரைக் கட்டணமாக சம்பந்தப்பட்ட வரி வருமானத்தில் 1 வீதம் அறவிடப்படுவதுடன், அதன் பெறுமதிக்கு ஈடாக முத்திரை சம்பந்தப்பட்ட காணி உறுதியின் இரண்டாவது பிரதியில் ஒட்டப்பட்டு அடுத்துவரும் மாத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் காணிப் பதிவு அலுவலகத்திற்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. சம்பந்தப்பட்ட வரி

வருமானத்தில் 1 வீதமாக அமையும் பணத்தொகையாகிய ரூபா 20,000/- ஆனது உச்சளவு எனும் வரையறையின் கீழ் நொத்தாரிசுக் கட்டணமாக கைத்தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்படுவதுடன், அப்பணத்தொகை பின்வருமாறு 2005.03.11 ஆம் திகதியுடைய 4141 இலக்கமுடைய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி சட்ட உத்தியோத்தருக்குச் செலுத்தப்படுகிறது.

மேற்படி ரூபா 5000/- வரையான பணத்தொகையில் ரூபா 1000/- உம், ரூபா 5000/- முதல் 7500/- வரையான பணத்தொகையில் ரூபா 2000/- உம், ரூபா 10,000/- முதல் 20,000/- இற்குக் குறைந்த பணத்தொகைக்காக ரூபா 3000/- வீதமும் செலுத்தப்படுகிறது. குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கான உறுதிகளுக்கு பெறுமதி இல்லாததுடன் சபையினால் அதற்கு கைத்தொழிலாளர்களிடமிருந்து நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 5000/- ஐ அறவிடுவதுடன் அதில் ரூபா 1000/- ஆனது சட்ட உத்தியோகத்தர்களுக்கு மீளச் செலுத்தப்படுகிறது. இதற்கேற்ப, மேற்படி கணக்காய்வில் குறிப்பிடப்படுகின்ற சம்பந்தப்பட்ட காணி உறுதிகளுக்குச் சபை அறவிட்டுக்கொள்கின்ற பணத்தொகை மற்றும் சம்பந்தப்பட்டதான பற்றுச்சீட்டு இலக்கங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| பற்றுச்சீட்டு இல. | கைத்தொழிலாளரின் பெயர் | கைத்தொழிலாளரிடம் இருந்து அறவிட்ட பணத்தொகை | சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டின் இல. | நொத்தாரிசுக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 401 | யூ.எஸ்.எஸ். இன்ஜினியரிங் | 20,000/- | 511246 | 3,000/- |
| 417 | எம்.எச்.எம். அமீர்தீன் | 20,000/- | 515601 | 3,000/- |
| 758 | சீ அன்ட் ஏ சிலிகேட் | 20,000/- | 511285 | 3,000/- |
| 2104 | ரென்பர் | 20,000/- | 517808 | 3,000/- |
| 4311 | கோ லங்கா | 5,000/-<br>20,000/- | 530028<br>530026 | 1,000/-<br>3,000/- |
| 5048 | எவர்சைன் வெங்கடெஸ்வர் எக்ரோரெக்னிகா | 20,000/-<br>20,000/-<br>20,000/- | 530796<br>534022<br>530026 | 3,000/-<br>3,000/-<br>3,000/- |

இதற்கேற்ப இந்தப் பணத்தொகை எவ்விதத்திலும் சபையினால்

உறப்படுகின்ற செலவினமாக அமையாததுடன் நொத்தாரிசுக் கட்டணமாக சபை கைத்தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்தொகையில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு ஏற்ப சட்ட உத்தியோகத்தருக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்ற. இதற்குப் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தைப் பெற்றுத் தருவதற்கு முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்தும் இவ்வாறான ஏனைய

அரச நிறுவனங்களிடமிருந்தும் விடயங்கள் வினவப்பட்டுள்ளன. நொத்தாரிசுக் கட்டணமாக அறிவிடுதல் சம்பந்தமாக முன்பிருந்த பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய நொத்தாரிசுக் கட்டணமாக கைத்தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்தொகையில் 75 சதவீதமான பணத்தொகையினை சட்ட உத்தியோகத்தருக்குச் செலுத்துதல் வேண்டும். நொத்தாரிசுப் பணிகள் சட்ட உத்தியோகத்தரின் நிரந்தரப் பணிகளுக்கு ஏற்புடையதாக அமையாததால், சபையினால் மாவட்ட அலுவலகங்களுக்கான நொத்தாரிசுக் கட்டணங்களை அறவிடாமல் வருடாந்த குத்தகை ஒப்பந்தத்திற்குக் கைச்சாத்திடப்படுகிறது. மேலும் நொத்தாரிசு ஒருவரினால் உறுதி செய்யப்படுகின்ற உறுதிகள் அவருக்குள்ள பொறுப்பினை சபையின் சேவைக்காலம் முடிவடைந்த பிறகும் அவருடைய கடப்பாடெனக் கருதப்படுகிறது.

**(ஆ) பாதுகாப்புச் சேவை ஒப்பந்தம்**

பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு பாதுகாப்புச் சேவை ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன.

ஆகக்குறைந்த விலையுடன் கூடிய மக்நம் 4 நிறுவனத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டமையினால் அந்த நிறுவனத்திற்கு இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாததுடன் எலயிட் சிகியூரிட்டி மற்றும் சி. பி. லங்கா ஆகிய இரண்டு நிறுவனங்களை விட குறைந்த விலையினை முன்வைத்திருந்த சத்திர சிகியுரிட்டி என்ட் இன்வெஸ்டகேசன் (பிரவேட் ) லிமிடட் நிறுவனத்தில் காணப்பட்ட குறைபாடாக ஊழிர் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதியம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்காமை அந்த நிறுவனத்திலிருந்து ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு ஆராய்ந்தறிந்து திருப்தியடைந்த பின்னர் கேள்விப்பத்திர பணியை வழங்குவதற்கு கேள்விப்பத்திர சபை தீர்மானித்தது.

மேலும், தொிவுசெய்யப்பட்டுள்ள சத்திர சிகியிட்டி என்ட் இன்வெஸ்டகேசன் (பிரவேட் ) லிமிடட் நிறுவனம் கடந்த காலத்தில் திருப்தியற்ற சேவையினை வழங்கியதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அல்லது கேள்விப் பத்திரக் குழுவிற்கு எழுத்து மூலமாக எவ்வித அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 நிதியத்தின் குறைப் பயன்பாடு

(அ) 2013.12.31 ஆம் திகதியில் சேமிப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 22,904,059/- மீதியில் தற்போதைய நிலவரத்தினை பின்வருமாறு சமர்ப்பிக்கின்றேன்.

| | விபரம் | கணக்கு இலக்கம் | 2013.12.31 | 2014.12.31 | 2015.07.30 |
|---|---|---|---|---|---|
| 1. | சேமிப்புக் கணக்கு – செஸ் நிதியம் | 9123868 | 10,854,502.09 | 11,114,908.75 | 11,286,469.85 |
| 2. | சேமிப்புக் கணக்கு – மூலதன ஒதுக்கீடு | 71648764 | 1,698,351.02 | 3,265,242.49 | 2,499,377.92 |
| 3. | சேமிப்புக் கணக்கு – கைத்தொழிற்பேட்டை வைப்பீடு | 71582414 | 10,512,599.01 | 8,351,059.66 | 2,809,077.31 |
| 4. | நிலையான வைப்பீடு – கைத்தொழிற்பேட்டை | 00006807 | - | 10,505,958.71 | 10,505,958.71 |

மேற்படி இல. 1 இல் காட்டப்பட்டுள்ள செஸ் நிதியம் கழிவுப் பொருள் கருத்திட்டத்தில் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் 2 ஆம் இலக்க அட்டவணையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிலையான வைப்பீடு ஒன்றில் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின், இவ்வாறு நிறுவனத்தின் தேவைக்காக இந்நிதியத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் போது சிக்கல்கள் எழக்கூடும். ஆகவே நிலையான வைப்பீட்டில் வட்டியானது இழக்கப்படுகிறது. ஆயினும், சேமிப்புக் கணக்குகளில் இவற்றைத் தக்கவைத்துக்கொள்வதனால் நிதியத்தைப் பயன்படுத்துவதன் காரணமாக பெருமளவு வட்டியை இழப்பதற்கான வாய்ப்பு ஏற்படுவதில்லை. 2015.08.01 ஆம் திகதி சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கிடையிலான வட்டி வீதம் 2 சதவீதமான வித்தியாசத்தையே காட்டுகிறது.

2 ஆம் இலக்கத்தின் கீழ் மூலதன ஒதுக்கீடுகளை கொள்வனவு செய்வதற்கான தேவைகளுக்காக மாற்றப்பட்டுள்ள விதம் 3 ஆம் அட்டவணையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3 ஆம் இலக்கத்தின் கீழ் பேட்டையின் வைப்பீடுகளுக்காக முதலீடு செய்யப்பட்டிருந்த பணத்தொகை 2014 ஆம் ஆண்டில் நிலையான வைப்பீடுகளில் முதலீடு செய்யப்பட்டன. இது இலக்கம் 4 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) நடமாடும் கணக்குகளில் காணப்படும் மீதி அன்றாட செயற்பாடுகள் காரணமாக மாற்றமடைவதுடன் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ஈடுபடுத்தப்படுகிறது. அசையாச் சொத்துக்களில் முதலீடு செய்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. மேலும் நடமாடும் கணக்குகளில் வங்கியில் 2014.12.31 ஆம் திகதி மேலதிகப் பற்று எதுவும் காட்டப்படவில்லை. மேலதி பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

(இ) வைப்பீடு செய்யப்பட்ட காசோலைகள் தேறிய நிலைக்கு வருவதற்கான காலம் மற்றும் வங்கியின் கணக்குக்கிடையில் பணம் பரிமாற்றத்திற்குச் செலவிடும் காலம் ஆகியவற்றின் காரணமாக இவ்வாறாக மேலதிக பற்றுக்கள் தோன்றியிருக்கின்றன.

## 4.6 செயலிழந்த நிலையிலுள்ள மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) கையினால் இயக்கப்படும் குயவன் சில்லுகளை விநியோகிப்பதற்கு சபையின் உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டுள்ளர்களென தகவல்கள் இல்லையென்பதுடன் அப்போதைய சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்களினால் இந்த விநியோகம் இடம்பெற்றுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த விசாரணகளுக்காக அமைச்சு மட்டத்தில் விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது குழுவொன்றை நியமிப்பது பொருத்தமானதென சபையின் அப்போதைய தலைவரினால் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு 2013.05.03 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது. இதற்கேற்ப அமைச்சின் பிரதிநிதி ஒருவர் உள்ளிட்ட குழுவொன்றினால் அடிப்படை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும், இந்தத் தீர்மானம் போதுமானதாகவிருக்காததால் இது சம்பந்தமான அடிப்படை விசாரணை ஒன்றை மேற்கொண்டு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு 2013.11.20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆரம்பக்கட்ட விசாரணையொன்றை நடத்துவதற்காக வெளிவாரியான சுயாதீன உத்தியோகத்தர் ஒருவரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. அதன் விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அப்போதைய தலைவரின் ஆலோசனையின் படி அமைச்சு மட்டத்தில் இந்த விசாணையை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு மேற்படி ஆரம்ப விசாரணை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அதனையடுத்து சபையின் அறிவித்தலின் படி அமைச்சினால் உத்தியோகத்தர் ஒருவர் பெயரிடப்பட்டு அனுப்பப்பட்டாரெனினும் அவ்வப்போது அவர்களின் பிரதிநிதித்துவம் மாற்றமடைந்துள்ளது. இதற்கேற்ப தலைவரினால் அமைச்சின் பிரதிநிதி ஒருவரையும் சபையின் உத்தியோகத்தர் ஒருவரையும் தேசிய கைப்பணிச் சபையின் உத்தியோகத்தர் ஒருவரையும் கொண்ட குழுவொன்றினால் விசாரணை நடாத்தப்படுவதற்கு ஐந்து நபரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அக்குழு பல்வேறு காரணங்களினால் சம்பந்தப்பட்ட அறிக்கையினைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தாமதித்ததனால் தற்போது இந்த விசாரணை அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் வெளி நிறுவன உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பிறிதொரு குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நடமாடும் தொழில்நுட்ப பேரூந்து ஒன்றை கொள்வனவு செய்தல் சம்பந்தமான ஆரம்பக்கட்ட விசாரணை ஒன்று வெளிவாரியான நபர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமான அறிக்கை முன்னாள் தலைவருக்கு அனுப்பப்பட்டது. மேலதிக ஆலோசனைகளுக்காக சம்பந்தப்பட்ட அறிக்கை தற்போதைய பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

(இ) சபையினாலும் சபைக்கு எதிராகவும் தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கு சட்ட உத்தியோகத்தர்கள் ஆஜராக வேண்டுமெனினும், ஒரே தினத்தில் பல நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரணைக்க அழைக்கப்படுவதனால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு சட்ட உத்தியோகத்தரினால் அனைத்து நீதிமன்றங்களிலும் தோன்ற முடியாத காரணத்தினால் வெளிவாரியான சட்ட உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதனால் இந்தச் செலவினை ஈடுபடுத்த வேண்டியிருந்தது.

(ஈ) சபையில் பண்ட மதிப்பாய்வுப் பணிகளுக்கு பொருள் இருப்புப் பதிவோட்டிற்கு மேலதிகமாக மூலப்பொருள் களஞ்சியசாலையும் உள்ளடங்கும். மூலப்பொருள் களஞ்சியசாலையின் பண்ட மதிப்பாய்வுகளை மேற்கொள்வதற்கு நீண்டகாலம் எடுப்பதுடன், கலந்துகொள்ளும் உத்தியோகத்தர்களுக்கும் இது சம்பந்தமான அறிவும் அனுபவமும் இருத்தல் வேண்டுமென்பதுடன் பொருத்தமான வகையில் தொழில்நுட்ப அறிவினையும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. அனேகமான மாவட்ட அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றனர். அவ் உத்தியோகத்தர்களை பண்ட மதிப்பாய்வுப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு முடியாமைக்கான காரணம் அன்றாடம் அவ் அலுவலகங்களின் பணிகள் இதனால் பாதிப்படைவதாகும். ஆயினும், தலைமை அலுவலகத்திற்கு வெளியில் அலுவலகங்களில் ஊழியர்களை இதற்காக ஈடுபடுத்தினாலும் அவர்கள் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து தேவையான மதிப்பாய்வு ஆவணங்களை எடுத்துக்கொண்டு செல்வதற்கும் மதிப்பாய்வு முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் சம்பந்தப்பட்ட சீராக்கல்களைத் தயாரிப்பதற்கும் பொருத்தமடையாத் தன்மைகளைப் பற்றி கடந்த அறிக்கைகளை ஆராய்ந்தறிந்து இறுதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மேலதிக செலவுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், ஒவ்வொரு அலுவலகங்களிலும் சேவை நிலையங்களிலும் உள்ள களஞ்சிய சாலைகளின் இருப்பின் அளவு மற்றும் சொத்துக்களின் அளவு ஆகியவற்றுக்கமைவாக சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அறிவு இருப்புப் பதிவேடுகள் பற்றிய அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றைக் கொண்ட உத்தியோகத்தர்கள் தலைமை அலுவலகத்திலிருந்தும் மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டு பொருத்தமான குழுவொன்று செலவுகள் குறைவடையும் வகையில் மதிப்பாய்வுப் பணிகளுக்காக ஈடுபடுத்த வேண்டியுள்ளது. ஆண்டிறுதியில் இந்தப் பண்ட மதிப்பாய்வுப் பணிகள் சுற்றுநிருபத்திற்கமைவாக கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டியதொரு விடயமாகும்.

மதியுரைச் சேவைகளுக்கான செலுத்தல்களின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பிரதேச கைத்தொழில் மற்றும் வர்த்தக சபைகளுடன் இணைந்து கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் எமது நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற கைத்தொழில் கண்காட்சி (SMIDEX) தேவையான மதியுரைச்

சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் திரு. சமந்த பி அபேவிக்கிரம அவர்களுக்கு 2014.02.01 ஆம் திகதி முதல் 2014.07.31 ஆம் திகதி வரை பணிகள் சாட்டப்பட்டன. இதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப இதற்கு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ) தோற்பொருள் துறையிலுள்ள பயன்படுத்தப்படாத இயந்திரங்கள் மற்றும் ஏனைய பொருட்களுக்கிடையில் அதிகமானவை தனியார்த் துறையினரால் நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டவைகள் காணப்படுகின்றன. மேலும் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்திக் கொள்ள முடியாத இயந்திரங்களை ஆராய்ந்து அவற்றை அகற்றும் பணிகளுக்காக குழுவொன்று பெயரிடப்பட்டுள்ளதுடன் அவற்றை அகற்றும் பணிகள் அதற்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன.

4.7 பொருளாதாரப் பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ), (ஆ) தொழில்நுட்பச் சேவைப் பிரிவின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நேரடி தொலைபேசி வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் இணையத்தள வசதிகளையும் இணையத்தளங்களைப் பேணிவருவதற்காகவும் டயலாக் நிறுவனத்திலிருந்து வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும், டயலாக் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்த வசதிகள் அதற்கான செலவினத்துடன் ஒப்பிடும் பொழுது பொருளாதார ரீதியில் பயனுறுதிமிக்கவையாக அமையாததால் அப்போதைய தலைவரினால் 2014.07.03 ஆம் திகதி முதல் இந்தத் தொடர்புகளை நிறுத்துவதற்கு டயலாக் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன் தற்போது இந்த வசதிகள் வழங்கப்படுவதில்லை. இவ்விடயத்தில் செலுத்தப்பட வேண்டியிருக்கின்ற எஞ்சி தொகைகளைச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபைக்குப் பத்திரமொன்று எதிர்வரும் கூட்டங்களின் போது சமர்ப்பக்கப்படவிருக்கின்றது.

### 4.8 பணியாட்டொகுதி நிர்வாகம்

i. சபையின் பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் பதவி போன்றவற்றுக்காக பகிரங்க பத்திரகை விபரங்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் – நிதி மற்றும் பணிப்பாளர் - சந்தைப்படுத்தல் ஆகிய பதிவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள. எஞ்சிய பதவிகளுக்காக எதிர்வரும் காலத்தில் ஆட்சேர்ப்புப் பணிகள் இடம்பெறவிருக்கின்றன.

ii. iii. அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதிக்குள் இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன் புதிதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதி அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த இப்பதவிகளுக்காக அந்தந்த அந்தந்த ஆட்களுக்கு ஏதுவான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமை காரணமாக அவர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் ஏற்புடையதாகும்

வகையில் பதவிகளை வழங்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

iv. சபையின் பிரதான நோக்கத்துடன் நேரடியாக தொடர்புடைய வெற்றிடங்களாகக் காட்டப்பட்டுள்ள JM பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட தொழில்முயற்சி மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவி புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப தனித்தனியாக காட்டப்பட்டுள்ளதெனினும் அவர்களின் கடமைப் பணியின் தன்மை அடிப்படையில் அப்பதவிகள் ஒன்றாகக் கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், அதற்கேற்ப அவர்கள் சிரேஷ்ட தொழில் முயற்சி மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கேற்ப அப்பதவியின் அனைத்து வெற்றிடங்களும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. ஆயினும், தொழில்முயற்சி மேம்படுத்தல் உத்தியோகத்தர் (MA 5 - 2) பதவியிலும் JM பிரிவுக்குட்பட்ட பதவிகளிலும் நிலவுகின்ற ஆட்சேர்ப்புத் தினங்களில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வு காரணமாக அதற்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியாமலுள்ளது. இது சம்பந்தமாக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்தவுடன் உடனடியாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

v. vi. உயர் பதிவிகளுக்காக 2014.06.10 ஆம் திகதி பத்திரிகை வாயிலாக விளம்பரங்கள் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப அது பயனற்ற செலவாக அமையாததுடன் அப்பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளதென்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும் பதில் கடமையாற்றும் பதவிகள் இல்லாது போவதால் இலக்கம் 5 மற்றும் 6 ஊடாக காட்டப்பட்டுள்ள சிக்கல் மிகு தன்மைகள் தீர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

vii. சபையினால் முகாமைத்துவச் சேவை 30 அம் இலக்க சுற்றுநிரூபத்தை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

(அ) சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட்ட அனைத்து ஊழியர்களும் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) வகுதியில் உள்ளடங்குவதுடன் அவர்கள் அனைவரையும் சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளமை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லா) வகுதியை விட உயர் வகுதியிலுள்ள சம்பள மட்டத்தில் தாபிக்கப்பட்டே அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்கள். புதிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப தொழில்நுட்ப வகுதியைச் சேராதவர்கள் 30 அம் இலக்க முகாமைத்துவச் சுற்றுநிரூபத்திற்கு ஏற்ப அப்போதிருந்த சம்பள படிமுறைக்கு ஒழுங்கமைந்த வகையில் சம்பள மட்டத்தில் தாபிக்கப்பட்டு உள்வாங்கப்பட்டார்களாயினும் தொழில்நுட்ப வகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் இருந்த சம்பள மட்டம் ஒருங்கமைந்ததாக அமையாததொரு மட்டத்தில் நியமிக்கப்பட்டு உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக தொழில்நுட்ப ஊழியர்களின் சம்பளத்தை

விட உயர்ந்த சம்பள மட்டத்தில் தொழில்நுட்பம் அல்லாதவர்கள் இருப்பதன் காரணமாக தொழில்நுட்பம் வகுதியைச் சாராத மற்றும் தொழில்நுட்பத் தரத்திலுள்ள ஊழியர்களுக்கிடையே சம்பள முரண்பாடொன்று ஏற்பட்டுள்ளது. சம்பள முரண்பாடுகளுக்கு ஏற்புடையதாக நிறுவப்பட்ட குழுவினால் இந்த நிலைமைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், இந்த ஊழியர்களும் தொடர்ச்சியாக இது சம்பந்தமாக வேண்டுகோள் விடுப்பதன் காரணமாக தலைவரின் ஆலோசனை மற்றும் அங்கீகாரத்தின் படி அவ்வாறான சம்பள முரண்பாடுகளை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ள பொருத்தமான நடைமுறைக்கு ஊடாக தரங்களுக்கு ஏதுவான பதவி உயர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) நீண்டகாலமாக சபையில் உரிய பதவி உயர்வு முறையொன்று இல்லாதிருந்ததால் மேற்படி சுற்றுநிருபத்திற்கு ஏற்புடைய சம்பளப் படிமுறைகளுக்கு உள்ளீர்ப்புச் செய்யும் போது பதவியுயர்வு பெறுகின்ற மற்றும் பதவியுயர்வு பெறாத போன்ற வகையில் இரண்டு பகுதிகளின் கீழ் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததால் சபையின் அனைத்து ஊழியர்களும் பதவி உயர்வு பெற்றதாகக் கருதப்பட்டு சம்பளம் தயாரிக்கப்பட்டு செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்விடயத்தின் போது சில ஊழியர்களுக்கு மிகையாக சம்பளம் செலுத்தப்பட்டுள்ளதுடன் சிலருக்கு குறைவாக செலுத்தப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளதுடன், இது சம்பந்தமாக அப்போதைய முகாமைத்துவத்தினால் தீர்மானமொன்று எடுக்கப்படாததால் சம்பள நிலை அவ்வாறாகவே காணப்பட்டது. இவ்விடயத்தில் உள்ளடங்கும் ஊழியர்களின் எண்ணிக்கையில் பெருந்தொகையானவர்கள் ஏற்கனவே ஓய்வுபெற்றுச் சென்றுள்ளனர்.

### 4.9 வாகனப் பயன்பாடு

(அ) முன்னாள் தலைவரினால் தற்போது சம்பந்தப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்தை சபைக்கு முறையாக கையளித்துள்ளதுடன் சபையில் நிலவிய நடைமுறைக்கு ஏற்ப 2013 ஆம் ஆண்டில் அப்போதைய முன்னாள் தலைவர் இரண்டு வாகனங்களைப் பாவனைக்காக விடுவித்துக்கொண்டுள்ளார். இந்த வாகனங்களுக்காக இரண்டு சாரதிகள் இணைக்கப்பட்டிருந்தனர். தலைவரின் உத்தியோகபூர்வ தேவைகளின் அடிப்படையில் நாளாந்தம் அதிக மணித்தியாலங்கள் பணியாற்றுவதற்கு சாரதிக்கு நேர்ந்ததால் அப்பணியினை ஈடேற்றுவதற்காக அதிகமான மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டியிருந்தது.

PD - 6019 வாகனமும் தலைவரினால் அவரின் உத்தியோகபூர்வ பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த வாகனத்திற்கான எரிபொருள் தலைவருக்குரிய எரிபொருள் கொடுப்பனவின் ஊடாகவே ஈடுசெய்யப்பட்டுள்ளது. ஆயினும், வாகனம் பயன்படுத்தப்பட்ட தூரம் சம்பந்தமான குறிப்பு மற்றும் வாகனம் பயன்படுத்தப்பட்டதான தூரம் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருள் அளவு போன்றவை குறிப்பீடுசெய்யப்பட்டு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இக்கணிப்பீட்டினை

போக்குவரத்துப் பிரிவும் பரிசோதித்துப் பார்த்து சரியானதென சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரினால் கையெழுத்திடப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வாகன ஓட்டக் குறிப்புகளும் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தராகிய தலைவரினால் அத்தாட்சி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அமைச்சின் ஆலோசனைக்கு ஏற்ப தலைவரின் உத்தியோகபூர்வ பணிகளுக்கு யாழ்ப்பாணம் (அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை) போன்ற தூர இடங்களுக்கும் செல்ல வேண்டியிருந்ததால் வாகனங்களின் பராமரிப்புச் செலவுகளும் அதிகரித்துள்ளன.

## 5. கணக்கு நடவடிக்கைகளும் நல்லாளுகையும்

5.1 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்று சர்வதேச நிதி அறிக்கையிடல் தரங்களுக்கு ஏற்ப தயாரிப்பதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்வதற்கு பெருந்தொகையான காலம் கடந்துள்ளதாலும் 2014 ஆம் ஆண்டில் பழைய மீதிகள் பெருந்தொகைகளை இணக்கம் செய்யும் விடயங்கள் காணப்பட்டதாலும் இந்தத் தாமதங்கள் ஏற்பட்டன. 2015 ஆம் ஆண்டு சுற்றுநிரூபத்திற்கு ஏற்ப உரிய தினத்திற்கு நிதிக்கூற்றுகள் சமர்ப்பிக்கப்படும்.

5.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அறிக்கைகள் தற்போது சபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிறகு அரச கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு சபையின் செயற்திட்டத்திற்கு ஏற்ப 2016 சனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுத் திட்டத்தினையும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.3 பாதணிகளைக் கௌ்வனவு செய்தல்

சபையின் உத்தியோகத்தர்களுக்கு பாதணிகளைக் கொள்வனவு செய்யும் செயன்முறை பின்வருமாறு நிகழ்ந்துள்ளது.

(அ) 2014.05.21 ஆம் திகதி நிர்வாகப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் செயல்கள் விண்ணப்பத்திற்கு ஏதுவாக விபரக்குறிப்புக்களைத் தயாரிப்பதற்காக வழங்கல் பிவிரினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக சபையின் ஊழியர்களுக்கு சிறந்த தரத்தினையுடைய பாதணிகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்னைய வருடங்களில் தயாரித்த விபரக்குறிப்புகளுக்கு ஏற்ப இவ்வருடத்திலும் சம்பந்தப்பட்ட கொள்வனவினை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விபரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பாதணிகளை அணியும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கி 9 மாதிரிகளிலிருந்து விபரக்குறிப்புகளுக்குப் பொருத்தமான மற்றும் பொருத்தமற்ற மாதிரிகளுக்கிடையில் தொிவுசெய்யப்பட்டு வழங்கிய “லேஸ்” வகையைச் சேர்ந்த பாதுகாப்புப் பாதணிகளையும் “லேஸ்” பாதணிகளையும் கொள்வனவு

செய்வதற்கு விதந்துரைத்துள்ளது. இந்தப் பாதணிகளைத் தொிவுசெய்யும் விடயம் பயனாளிகளாகிய ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) விபரக்குறிப்புகளுக்கு ஏற்ப மாதிரிகள் கிடைக்கப்பெற்றதுடன், அதற்கேற்ப ஊழியர்கள் பொருத்தமான வீச்சில் உள்ளடங்கும் வகையில் பாதணி வகைகளைத் தொிவுசெய்வதுடன் அதன் பிரகாரம் பொருள் அனுப்பல் கட்டளை விநியோகிக்கப்பட்டது. மேலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு உத்தியோகத்தர்கள் முன்னிலையில் இந்த மாதிரிகளைத் தொிவுசெய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) ஊழியர்களின் உத்தியோகபூர்வ உடைகளுக்காக வழங்கல் பிரிவினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விபரக்குறிப்புகளுக்கு ஏற்ப விலைமனுக்கள் கோரப்பட்டு ஊழியர்களின் தேவைக்கு ஏற்ப மாதிரிகளைத் தொிவுசெய்து அம்மாதிரிகளுக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விதப்புரைகளுக்கு ஏற்ப விலைமனுச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் சம்பந்தப்பட்ட கொள்வனவுகள் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 2:4:1 (4) பந்திக்கமைவாக மொத்த பெறுகைகள் செயன்முறை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைகள் குழுவினால் மிகவும் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உடுக்கும் உடை மற்றும் கைத்தொழில் பாதுகாப்பிற்காக வழங்கப்படுகின்ற பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது இனிவரும் காலத்தில் ஒரே வகையான பாதணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் எதிர்வரும் காலத்தில் சபையினால் வழங்கப்படும் வசதிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் ஏற்படுகின்ற மாற்றுக் கருத்துக்களை இல்லாதொழிப்பதற்காக எதிர்வரும் காலத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் உத்தேச பயனாளிகளுக்கு இடையிலும் மேலும் கலந்துரையாடல்களை நடாத்தி விபரக்குறிப்புக்களைத் தயாரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. இவ்வசதிகளைப் பயன்படுத்தும் ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கொள்வனவு செய்யப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ள காலணி நாடா – 119 அளவிற்கேற்ப வழங்குனர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும், பல்வேறு நிறுவனங்களின் பாதணிகளின் அளவு நாம் கோரிய அளவிலேயே கிடைக்காமல் போயுள்ளது. ஆகவே, மொத்தத் தொகையும் சரியானதெனவும் கிடைக்கப்பெற்றுள்ளவைகளும் பொருள் அனுப்புக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கு இடையிலும் ஏதேனும் பிரச்சினை இருக்குமாயின் அதற்கமைவாக பாதணிகளின் அளவுக்குப் பொருத்தமான வகையில் அவற்றை மாற்றித் தருவதற்கு எந்தவொரு நிறுவனமும் நடவடிக்கை மேற்கொள்கின்றது. கொள்வனவு செய்யப்பட்ட பாதணிகளின் விலை, அளவு மாற்றமடையும் போது அலகுகளின் விலையில் எந்தவித மாற்றமும் ஏற்படுவதில்லை.

(உ) முகாமைத்துவத்தின் ஆலோசனை மற்றும் வருடாந்த இருப்புக் கணிப்பீட்டின் கீழ் எஞ்சியுள்ள பாதணிகளை சபையின் ஊழியர்களுக்கு கேள்விப் பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான பொருட்கள் பிரதான அலுவலகத்தின் களஞ்சியசாலையில் எஞ்சியிருப்பதற்கான காரணம் ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்லல் மற்றும் பாதணிகளை அணிவதற்கு விருப்பமின்மை போன்றன விடயங்களாக அமைகின்றன. ஒரே வகையான பாதணி மாதிரிகளை எதிர்வரும் காலத்தில் கொள்வனவு செய்வதன் ஊடாக இவ்வாறு எஞ்சியிருக்கின்ற பாதணிகளின் அளவினைக் குறைத்து கொள்வனவினை மேற்கொள்ளக் கூடியதாகவிருப்பதுடன், எதிர்வரும் ஆண்டில் கொள்வனவு நடவடிக்கையின் போது இச்செயன்முறையினை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஊ) சபை ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றதான பாதணிகள் மற்றும் உத்தியோகபூர்வ உடைகள் எதிர்வரும் வருடங்களில் ஆரம்பக் கட்டத்திலேயே வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(எ) தோற்பொருள் பயிற்சி நிலையத்தில் தற்போது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்படுகின்றன. வர்த்தக நோக்கில் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதில்லை. உற்பத்திப் பணிகளுக்காக பயிலுனர்களைப் பயன்படுத்திக் கொள்ளல் பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் தடைகளை ஏற்படுத்துகிறது. மேலும் உற்பத்திசெய்து அவற்றைச் சந்தைப்படுத்திய பின்னர் அதன் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு நோிடுவதால் அதற்குப் பொருத்தமான பணியாட்டொகுதியொன்று நிலையத்தில் இல்லாததால் சபையின் பணியாட்டொகுதிக்கு வழங்கப்படுகின்ற பாதணிகள் இந்நிலையத்தில் உற்பத்தி செய்வதற்கான சாத்தியவளம் இல்லாதிருக்கின்றது.

## 5.4 வரவுசெலவுக் கட்டுப்பாடு

2014ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்திற்கு உட்பட்ட செலவினம் மற்றும் 2013 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினம் பற்றி காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கிடையில்,

i. மதிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சிய செலவினத்தை மேற்கொண்ட 10 விடயங்கள் காட்டப்பட்டுள்ளன.

(அ) மேலதிக கொடுப்பனவு

வருமானம் ஈட்டும் செயற்பாடுகள் அதிகரித்தமை காரணமாக மேலதிக கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் அத்தியாவசியமாக அமைந்ததுடன் இதன் காரணமாக செலவினம் அதிகரித்தது.

(ஆ) பணிக்கொடை

வருடாந்தம் மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது 60 வயது பூர்த்தியாவதால் ஓய்வு பெறுகின்ற ஊழியர்களுக்காக மாத்திரம் இந்த மதிப்பீடு தயாரிக்கப்படுவதுடன்,

ஓய்வுபெறவேண்டிய வயதுக்கு முன்னர் விலகிச் செல்கின்ற ஊழியர்கள் காரணமாக மதிப்பீட்டுத் தொகையை விஞ்ச வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

(இ) பயணச் செலவுகள்

வருமானம் ஈட்டும் செயற்பாடுகள் அதிகரித்தமை காரணமாக பிரயாணச் செலவுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய பணத்தொகையை அதிகமாக ஈடுபடுத்துவது அத்தியாவசியமாக அமைந்ததால் செலவுகள் அதிகரித்துள்ளன.

(ஈ) அலுவலக உபகரணங்களின் பேணுகை

அலுவலக உபகரணங்களைப் பேணும் செலவினம் அதிகரித்துள்ளது. வாகனப் பேணுகைச் செலவினம் அதற்குப் பதிலாக கணக்காய்வு வினவுதலில் காட்டப்பட்டுள்ளது. அலுவலக உபகரணப் பராமரிப்பு நடவடிக்கைகள் ரூபா 492,193.24

(உ) பலதரப்பட்ட சொத்துக்கள்

பழைய சொத்துக்களைப் பராமரிக்க வேண்டியுள்ளதால் செலவினம் அதிகரித்துள்ளது.

(ஊ) வாடகை மற்றும் குத்தகை

தலைமைக் காரியாலயத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ஆதன வரிக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதால் இச்செலவினம் அதிகரித்துள்ளது.

(எ) பணிப்பாளர் கொடுப்பனவு

கணக்குகளுக்கு ஏற்ப பணிப்பாளர் கொடுப்பனவு ரூபா 649,800/- ஆகும்.

(ஏ) உபசாரச் செலவுகள்

உபசாரச் செலவுகள் அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையைத் திறக்கும் நிகழ்வுக்காக ரூபா 584,650/- உபசரிப்புச் செலவினத்தின் கீழ் உள்வாங்கப்பட்டவையாகும். இச்செலவுகள் அச்சுவேலிக் கைத்தொழிற்பேட்டையின் தொடக்கச் செலவினத் தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. உறுப்பாண்மைக் கட்டணமாக ரூபா 8820/- மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. உள்நாட்டுப் பயிற்சிச் செலவினமாக ரூபா 1,211,792/- செலவிடப்பட்டுள்ளது.

(ஐ) பதிவுக் கட்டணமாக ரூபா 39,300/- செலவிடப்பட்டுள்ளதுடன், கடன்களுக்கான வட்டி IFRS தரங்களுக்கமைவாக சீராக்கல் செய்யப்பட்டடமை ரூபா 2,011,166/- ஆகும்.

(i) மதிப்பீடு, அளவீடு, கூட்டாண்மைத் திட்டம், கைத்தொழில் அளவீடு மற்றும் பலதரப்பட்ட செலவுகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டாலும் சபையினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட உண்மையான வருமானத்திற்குள் அப்பணிகளை ஈடேற்றிக்கொள்ள முடியாமற்போயிற்று.

(ii) வரவுசெலவுத் திட்டம் அதற்கு முந்திய வருடத்தின் ஜூன் மாதத்திலேயே தயாரிக்கப்படுகிறது. பிரிவுகளின் மதிப்பீடுகளும் அதுவரை உறப்பட்டுள்ள உண்மையான செலவினங்களும் இங்கு கவனத்திற்கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் வருட மத்தியில் உண்மையான செலவினத்தைக் கருத்திற்கொண்டு வரவுசெலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5.5 வருடாந்த அறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்.

2012 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையை அச்சிட்டு அமைச்சுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கிராமியக் கைத்தொழில் மற்றும் சுயதொழில் மேம்படுத்தல் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்காய்வு அறிக்கைகள் தற்போது சபைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 2013 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை மற்றும் 2014 அம் ஆண்டின் வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்ககைள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்று உரியவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு வருடாந்த அறிக்கையினை சபைக்குச் சமர்ப்பிப்பதில் ஏற்படுகின்ற தாமத்தை இயன்றளவு குறைத்துக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் –நிதி, பணிப்பாளர் –சந்தைப்படுத்தல் ஆகிய பதவிகளில் சில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டு வருவடன், சபையின் எஞ்சிய வெற்றிடங்களை எதிர்வரும் காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ, இ, ஈ) புதிய கணக்கீட்டு மென்பாகமொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் மூலமாக இந்த முறைமைகளிலுள்ள குறைபாடுகளை இயன்றளவு குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(உ) வாகனப் பயன்பாடு மற்றும் ஆவணங்களைப் பேணி வரல் சம்பந்தமாகக் காணப்படுகின்ற குறைபாடுகளை நீக்குவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

மகிந்த ஜினசேன
தலைவர்
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

தயாரித்தவர் :பணிப்பாளர் –நிதி
பரிசோதித்தவர் : உள்ளகக் கணக்காய்வாளர்
உறுதிப்படுத்தியவர் : பணிப்பாளர் நாயகம்

INDUSTRIAL DEVELOPMENT BOARD

ESTATE DEBTORS-AS AT 31/12/2014

Annex 01

| | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|
| | | | A+B | | | |
| Estate | Total for existing | Total for ceased operation | Total | Balance for the above date as per the AQ 2014/22 | A - D Variance | C - D Variance |
| 61 Industrial Estate -Ekala | 5,899,893.77 | 3,068,529.72 | 8,968,423.49 | 6,374,290.00 | - 474,396.23 | 2,594,133.49 |
| 62 Pallekale | 4,524,373.55 | 3,157,816.63 | 7,682,190.18 | 1,696,851.00 | 2,827,522.55 | 5,985,339.18 |
| 63 Horana | 3,527,179.94 | 1,927,605.70 | 5,454,785.64 | 3,607,096.00 | - 79,916.06 | 1,847,689.64 |
| 64 Pannala | 567,247.78 | 1,169,794.79 | 1,737,042.57 | 615,566.00 | - 48,318.22 | 1,121,476.57 |
| 65 Lunuwilla | 792,774.57 | 40,947.30 | 833,721.87 | 1,026,747.00 | - 233,972.43 | (193,025.13) |
| 69 Mathale | 2,322,732.42 | 204,419.66 | 2,527,152.08 | 2,398,439.00 | - 75,706.58 | 128,713.08 |
| 71 Pussella | 208,430.52 | - | 208,430.52 | 294,333.00 | - 85,902.48 | (85,902.48) |
| 72 Galigamuwa | 242,194.20 | 153,398.09 | 395,592.29 | | 242,194.20 | 395,592.29 |
| 73 Panaluwa | 1,436,542.94 | 169,609.91 | 1,606,152.85 | 2,068,017.00 | - 631,474.06 | (461,864.15) |
| 74 Beliatta | 428,638.81 | 3,866.02 | 432,504.83 | | 428,638.81 | 432,504.83 |
| 75 Kotagala | 364,607.01 | 24,663.49 | 389,270.50 | 313,395.00 | 51,212.01 | 75,875.50 |
| 79 Vaulugala | 1,550,648.16 | - | 1,550,648.16 | 3,028,419.00 | - 1,477,770.84 | (1,477,770.84) |
| 81 Vavuniya | 1,228,686.42 | 73,002.44 | 1,301,688.86 | 398,300.00 | 830,386.42 | 903,388.86 |
| Total | 23,093,950.09 | 9,993,653.75 | 33,087,603.84 | 21,821,453.00 | 1,272,497.09 | 11,266,150.84 |

Date: 06/08/2015
Time: 10:19:45

# Industrial Development Board - 2014

## Nominal Activity



Date From: 01/01/1980
Date To: 06/08/2015

N/C From:
N/C To: 99999999

Transaction From: 1
Transaction To: 99999999

N/C: 185413 Name: Cess Fund - Savings Account- 9123868 Account Balance: 11,114,908.75 DR

| No | Type | Date | Account | Ref | Details | Dept | T/C | Value | Debit | Credit | V | B |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20543 | PA | 12/03/2014 | CEY030 | V N 01 | Payment on Account | 0 | T9 | 2,081,538.29 | | 2,081,538.29 | - | N |
| 20544 | PA | 27/03/2014 | CEY0047 | V N 02 | Payment on Account | 0 | T9 | 1,787,748.25 | | 1,787,748.25 | - | N |
| 20545 | PA | 31/03/2014 | CEY031 | V N 03 | Payment on Account . | 0 | T9 | 1,150,300.57 | | 1,150,300.57 | - | N |
| 20546 | PA | 05/05/2014 | SRI029 | V N 04 | Payment on Account | 0 | T9 | 1,611,338.00 | | 1,611,338.00 | - | N |
| 20591 | BR | 31/01/2014 | 185413 | Pass Boo | Interest January | 9 | T0 | 36,875.57 | 36,875.57 | | N | N |
| 20592 | BR | 28/02/2014 | 185413 | Pass Boo | Interest February | 9 | T0 | 33,408.80 | 33,408.80 | | N | N |
| 20593 | BR | 31/03/2014 | 185413 | Pass Boo | Interest March | 9 | T0 | 31,969.56 | 31,969.56 | | N | N |
| 20594 | BR | 30/04/2014 | 185413 | Pass Boo | Interest April | 9 | T0 | 19,475.94 | 19,475.94 | | N | N |
| 38702 | JD | 01/08/2014 | 185413 | B/St | Fund Transfer | 150 | T9 | 2,500,000.00 | 2,500,000.00 | | - | N |
| 47150 | JD | 09/12/2014 | 185413 | B/St/12/ | Fund Transfer | 150 | T9 | 3,000,000.00 | 3,000,000.00 | | - | N |
| 47155 | JC | 09/12/2014 | 185413 | REVERSE | Reversal of Tran. 47150 | 150 | T9 | 3,000,000.00 | | 3,000,000.00 | - | N |
| 47158 | JD | 12/09/2014 | 185413 | B/St | Fund Transfer | 0 | T9 | 3,000,000.00 | 3,000,000.00 | | - | N |
| 51964 | JD | 13/10/2014 | 185413 | B/St | Fund Transfer | 0 | T9 | 1,800,000.00 | 1,800,000.00 | | - | N |
| 58215 | JD | 10/11/2014 | 185413 | B/St/11/ | Fund Transfer | 150 | T9 | 2,000,000.00 | 2,000,000.00 | | - | N |
| 65[illegible] | JD | 31/12/2013 | 185413 | OP BAL | Opening bal Imported from 2013 | 0 | T0 | 10,854,502.87 | 10,854,502.87 | | N | N |
| 76203 | JD | 22/12/2014 | 185413 | B/St/12/ | Fund Transfer | 150 | T9 | 1,076,854.40 | 1,076,854.40 | | - | N |
| 85609 | BR | 30/05/2014 | 185413 | Pass Boo | Saving Interest May | 9 | T0 | 15,464.02 | 15,464.02 | | N | N |
| 85610 | BR | 30/05/2014 | 185413 | Pass Boo | Saving Interest June | 9 | T0 | 10,477.64 | 10,477.64 | | N | N |
| 85611 | BR | 30/05/2014 | 185413 | Pass Boo | Saving Interest July | 9 | T0 | 10,858.93 | 10,858.93 | | N | N |
| 85612 | BR | 30/05/2014 | 185413 | Pass Boo | Saving Interest August | 9 | T0 | 19,111.31 | 19,111.31 | | N | N |
| 85613 | BR | 30/05/2014 | 185413 | Pass Boo | Saving Interest September | 9 | T0 | 24,734.31 | 24,734.31 | | N | N |
| 85614 | BR | 30/05/2014 | 185413 | Pass Boo | Saving Interest October | 9 | T0 | 28,148.82 | 28,148.82 | | N | N |
| 85615 | BR | 30/05/2014 | 185413 | Pass Boo | Saving Interest Novemberer | 9 | T0 | 30,615.72 | 30,615.72 | | N | N |
| 85616 | BR | 30/05/2014 | 185413 | Pass Boo | Saving Interest December | 9 | T0 | 35,056.79 | 35,056.79 | | N | N |
| 85627 | BP | 31/01/2014 | 185413 | Pass Boo | Bank Charges January 2014 | 9 | T0 | 3,687.56 | | 3,687.56 | N | N |
| 85628 | BP | 28/02/2014 | 185413 | Pass Boo | Bank Charges February 2014 | 9 | T0 | 3,340.88 | | 3,340.88 | N | N |
| 85629 | BP | 31/03/2014 | 185413 | Pass Boo | Bank Charges March 2014 | 9 | T0 | 3,196.96 | | 3,196.96 | N | N |
| 85630 | BP | 30/04/2014 | 185413 | Pass Boo | Bank Charges April 2014 | 9 | T0 | 1,947.59 | | 1,947.59 | N | N |
| 85631 | BP | 31/05/2014 | 185413 | Pass Boo | Bank Charges May2014 | 9 | T0 | 1,546.40 | | 1,546.40 | N | N |
| 85632 | BP | 30/06/2014 | 185413 | Pass Boo | Bank Charges June 2014 | 9 | T0 | 1,047.76 | | 1,047.76 | N | N |
| 85633 | BP | 30/07/2014 | 185413 | Pass Boo | Bank Charges July 2014 | 9 | T0 | 1,085.89 | | 1,085.89 | N | N |
| 85634 | BP | 30/08/2014 | 185413 | Pass Boo | Bank Charges August 2014 | 9 | T0 | 1,911.13 | | 1,911.13 | N | N |
| 85635 | BP | 30/09/2014 | 185413 | Pass Boo | Bank Charges Sept. 2014 | 9 | T0 | 2,473.43 | | 2,473.43 | N | N |
| 85636 | BP | 31/10/2014 | 185413 | Pass Boo | Bank Charges Oct.. 2014 | 9 | T0 | 2,814.88 | | 2,814.88 | N | N |
| 85637 | BP | 30/11/2014 | 185413 | Pass Boo | Bank Charges Nov.. 2014 | 9 | T0 | 3,061.57 | | 3,061.57 | N | N |
| 8[illegible]8 | BP | 31/12/2014 | 185413 | Pass Boo | Bank Charges Dec 2014 | 9 | T0 | 3,505.68 | | 3,505.68 | N | N |
| 8[illegible]0 | PA | 27/05/2014 | CEY020 | B/draft | Payment on Account | 0 | T9 | 1,155,430.65 | | 1,155,430.65 | - | N |
| 85703 | PA | 13/10/2014 | LAN009 | B/Draft | Payment on Account | 0 | T9 | 2,590,498.64 | | 2,590,498.64 | - | N |
| 85714 | BP | 12/03/2014 | 185413 | Pass Boo | Bank Charges | 9 | T0 | 1,248.92 | | 1,248.92 | N | N |
| 85715 | BP | 27/03/2014 | 185413 | Pass Boo | Bank Charges | 9 | T0 | 1,072.65 | | 1,072.65 | N | N |
| 85716 | BP | 31/03/2014 | 185413 | Pass Boo | Bank Charges | 9 | T0 | 690.18 | | 690.18 | N | N |
| 85717 | BP | 05/05/2014 | 185413 | Pass Boo | Bank Charges | 0 | T0 | 966.80 | | 966.80 | N | N |
| 85718 | BP | 30/05/2014 | 185413 | Pass Boo | Bank Charges | 0 | T0 | 693.25 | | 693.25 | N | N |
| 85719 | BP | 13/10/2014 | 185413 | Pass Boo | Bank Charges | 0 | T0 | 1,500.00 | | 1,500.00 | N | N |
| | | | | | | | Totals: | | 24,527,554.68 | 13,412,645.93 | | |
| | | | | | | | History Balance: | | 11,114,908.75 | | | |